Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 வெள்ளி - 27 26-01 - செப்ரெம்பர் - 2005



# மௌனித்திருக்கும் பீரங்கி வாய்கள் சமாதானத்தை குறிக்குமா..?

# காசாவில் தெரியும் நம்பிக்கைக் கீற்று

# ஆற்றல் மிகு சமுதாயத்தை உருவாக்குவதில் விழுமியக்கல்வி



**கல்வி** என்பது ஒரு மனிதனிடத்தில் அடங்கியுள்ள முழுமையான ஆற்றலை வெளிக்கொண்டு வருவதுடன், சமூகத்திற்குப் பயன்படும் படியாக இவ்வாற்றலை வளர்ப்பதுமாகும். ஒவ்வொரு தேசத்தின் நற்பிரஜைகளும் அத்தேசத்தின் கல்விச் செயற்பாட்டினடியான சமூகமயமாக்கலின் மூலமே உருவெடுக்க முடியும். தன்னடக்கம், உள்ளாந்தர ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து விரிவுபடுத்தும் வாய்ப்பு, தலைமத்துவம், தேசப்பற்று, சமூக உணர்வு போன்ற நற்பண்புகள் விழுமியக் கல்வியினடியாகப் பிறப்பவை. விழுமியக்கல்வியின் ஊட்டங்கள், தடைகளையும், தாக்குதல்களையும் தாண்டிய உயர் இலக்குகளை ஈட்டிக்கொடுக்கின்றன.

தற்கால நவீன சமூகத்தில் கல்வியின் செயல்முறை பற்றி முன்வைக்கப்பட்டுள்ள சிந்தனைகளில் தாராண்மைப் போக்கினைக் குறிப்பிட்டுக் கூறுவோமாயின்,

* கல்வி ஒருவரைத் தன்னிறைவு காண வழிவகுக்கின்றது.

* கல்வி ஒருவரின், உள, உடல், மனவெழுச்சி, ஆன்மீகம் போன்ற உள்ளாந்திர ஆற்றல்களை விருத்தி செய்ய வழி வகுக்கின்றது. 'எல்லோருக்கும் கல்வி' எனும் நிலையில் இம் மாதிரியான ஊக்கல்கள் இடம் பெறுகின்றன.

* கல்விச் சமத்துவம் சமூக ரீதியில் பேணப்படுதல் வேண்டும். விழுமிய நெறிகளுக்கேற்ப ஏற்றத்தாழ்வற்ற கல்வி அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென்பதே.

* தகுதிகாண் போட்டிகளும், கல்வியின் பெறுபேறுகளும் தரப்பட்டு அடிப்படையான பதவிகள் தரப்படுகின்றன. நிறுவன ரீதியான வேறுபாட்டையும் கொண்டமைகின்றன.

* கல்வி மேம்பாடு, வளத்தை கேள்வியாக மாற்றமடையச் செய்து பல்வேறு உயரிய பண்புகளையும் உள்ளாந்தர ஆற்றல்களையும் வெளிக்கொணரப் பயன்படவேண்டுமென்று கூறப்படுகிறது.

நாம் வாழும் சமூகத்திற்கே உரிய விழுமியத் தொகுதி ஒன்று காணப்படுகின்றது. இவ்விழுமியங்களுக்கு ஏற்புடைத்தான இனம் காணப்பட்ட குணவியல்புகளும், பழக்க வழக்கங்களும் உள்ளன. மாணவர்கள் சிறுவயதுகளிலே குடும்பங்களிலிருந்து இப்பண்புகளை அறிகின்றனர். குடும்பங்களின் நற்குணங்களையும் விழிப்புணர்வையும் பொறுத்தே பிள்ளைகளும் அவற்றைக் கடைப்பிடிக்கத் தலைப்படுகின்றனர். 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' ஆனால் வள்ளுவர் கூறுகின்ற " கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்பது கூட ஒழுக்கத்தின் பாற்பட்டது. குற்றங்கள் நீங்குவதற்காகப் பல நூல்களைப் படித்துக் கல்வி கற்க வேண்டும். அதன்படி நடந்துகொள்ளவேண்டும் என்பார்.

விழுமியங்கள் கட்டியெழுப்பக் கூடிய கல்வியை பெற்றோரும், ஆசிரியர்களும், சமய நிறுவனங்களும், பொதுவான அமைப்புக்களும் கலாசாரத்தையும் நிலைநாட்டுவது மட்டுமன்றி தத்தம் சுயத்தை தெரிந்து சமூகப்பொறுப்பை வளர்ப்பதற்கும் உதவுகிறது. அனைத்து வகையான அடிமைத்தனங்கள், பாகுபாடுகளுக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

பாடசாலைகளில் பிரார்த்தனை நேரங்களில் ஒவ்வொரு தினமும் நற்சிந்தனை குறிப்பிடுவார். உயர் தரவகுப்பு மாணவனை இப்பந்தி தொடர்பான அபிப்பிராயத்தைக் கேட்கலாம். மாற்று நடவடிக்கை தொடர்பான தீர்வுகளை முன்வைக்கும் படி ஆசிரியர் கூறலாம். ஆசிரியர் தனது கருத்துக்களைக் கூறலாம்.

விழுமியக் கல்வி மாணவர்களை நெறிப்படுத்தி வளர்ப்பதற்கே ஊக்கியாக அமைகிறது.

**உங்களால் முடிந்தால் சொல்லிக் கொடுங்கள், அவனாகச் சம்பாதிக்கும் ஒரு டொலர், ஐந்து பவுணை விடவும் உயர்ந்தது என்று!அவனுக்குத் தோல்வியை ஏற்கவும் கற்றுக்கொடுங்கள். வெற்றியின் சந்தோசத்தையும் உணர்த்துங்கள்.**

வழங்குதலானது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவனும் தம்மிடையே வளர்த்துக்கொள்ள வேண்டிய விழுமியங்கள் சமகாலத் தேவைப்பாடுடையதாகக் காட்சியளிக்கின்றன. நம்பகத்தன்மை, தயவு காட்டுதல், பொறுமை, பக்கச்சார்பற்ற தன்மை, நீதிக்கு மதிப்பளித்தல், நட்புணர்வு, சமத்துவத் தன்மை,கட்டுப்பாடு, ஆர்வம், அர்ப்பணிப்பு போன்றன உயர் விழுமியங்களாக இன்றைய தேவைகளாக விதந்தோதப்படுகின்றன.

பிறருக்கு இன்னா செய்யாமை,ஜீவ காருண்யம், பெரியோரைக் கனம் பண்ணல், சமூகப் பொறுப்புடன் தொழிற்படல் ஆகியன மாணவர்கள் குடும்பத்தில் சமூகமயமாக்கலின் பொழுதே அறிந்துகொள்ள வேண்டியன. பாடசாலைகளில் அவை வளர்த்தெடுக்கப் படுகின்றன. நல்லதை நினைப்பதற்கும்,நல்லவற்றைச் செய்வதற்கும் தூண்டுபவை பிறரின் துன்பத்தின் போது துயரம் காண்பவை. மாறாக பழமையான மரபுப் போலிக்கருத்துக்கள் எதிர் நியாயங்களாய் அடுத்தவனை மோசம் செய்வதற்கும், பரிகசிப்பதற்கும் உதவுபவை. சுய நல நோக்கில் இவை ஆரம்ப காலங்களிலே ஊட்டப்படின், எவ்வளவு தான் உயர்ந்தாலும், முன்னேறி னாலும் பிறர் நலன் என்பது எட்டாக்கனியாகவே இருக்கிறது. சில சமயங்களில் இதுவே பிறரை நிந்திப்பதற்கும், மோசடிகள் செய்வதற்கும் உதவியாகியும் விடுகின்றது.

பெரியோர்களின் அறிவுரைகள் ஆழமானவையாக வழிகாட்டுபவையாக இருக்கின்றன. அவ் அறிவுரைகள் யாவும் ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டும். அதைப் போர்த்துக்கொண்டு பிறருக்குத் துன்பம் செய்வதனால் அதன் பயனேது. மாணவர்களும் அதன் கருத்துக்களை மனதிலிருத்தி வாழ்வில் பயணம் செய்யக் கூடிய முன் மாதிரிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரதும், ஆசிரியரதும் கடமையாகும்.

மொழிப்பற்று என்பது உரிமையையும், கூறுவது ஆசிரியரின் கடமை. மாணவர்கள் அவதானிக்கிறார்களா? என்பதையும் கவனித்து நெறிப்படுத்த வேண்டும். 'உண்மை உயர்வு தரும்', 'தர்மம் வெல்லும்', 'மன்னுயிரையும் தன்னுயிர் போல் நினை', 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' போன்றதான வாசகங்கள் கூறப்பட்டு, மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் விளக்கப்படவேண்டும்.

எடுத்துக் காட்டாக "கல்விக்கு அழகு கசடு அறமொழிதல்'' எனும் பழமொழியாகும். இதனை விளக்கிக் கூறின், ஒரு மனிதன் அறிந்து கொண்டது, அவனுக்கு மட்டும் புரிந்திருந்தால் போதாது. அவனைப்போன்ற அறிவாளிகளால் மட்டும் புரிந்து கொள்ளத்தக்கதாக இருந்தாலும் போதாது. கல்வி அறிவற்ற சாமானிய மனிதனும் விளங்கிக் கொள்ளக்கூடியதுதான் உண்மையான இலக்கியமாக இருக்க முடியும். ஓர் இலக்கியவாதி தன்னளவில் பேராற்றல் வாய்ந்தவனாக இருப்பதால் ஒரு பயனும் இல்லை.அல்லது அவனுடைய பேராற்றல் அவனை ஒத்த விரல்விட்டு எண்ணக்கூடிய அறிவாளிகளுக்கு மட்டும் புரிவதாலும் ஒரு பயனுமில்லை. சாமானிய மக்களும் அந்த இலக்கியத்தை புரிந்து இரசிக்க வேண்டும். அது தான் இலக்கியத்துக்கு அழகு! கல்விக்கு அழகு! அதனால் தான் " கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்" என்ற பழ மொழியே தோன்றியது என்பதாக விளக்க மளிக்கலாம்.

முற்போக்குச் சிந்தனைகளை மாணவருக்குக் கூறலாம். நீதிக் கதைகளை விளக்கலாம். இனிமையான கருத்துக்கள் கொண்ட உயர் விழுமியப் பாடல்களைப் பாடுவதற்கு மாணவர்களை ஊக்குவிக்கலாம். உயர் விழுமியங்களுக்கியைபாக வாழ்ந்து வரலாற்றில் பொறிக்கப்பட்ட அறிஞர்கள் பற்றிச் செவிமடுக்கத் துணைபுரிவதுடன், கருத்துக்களை சேகரித்து மாணவர்களே வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கலாம். எடுத்துக்காட்டாக சமூக வாழ்க்கையிலும் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. நகரங்களில் ஏற்பட்ட குடித்தொகைப் பெருக்கும் முற்றிலும் புதியதொரு வாழ்க்கை முறையை ஏற்படுத்தியது. ஆரவாரம் மிக்க நகர வாழ்க்கை கலை- இலக்கியங்களின் முதன்மைப் பொருளாயிற்று. இந்நிலையில் நவீனத்துவப் பண்பாடு (Modern culture) நாளாந்த வாழ்க்கை விழுமியங்களை மாசுபடுத்திவிட்டது என விமர்சனக் கோட்பாடுகள் கூறும் "கீழ்ப்படிவின்மையும், தற்காதலும் போட்டியும், நவீனத்துவப் பண்பாடு எமக்குக் கற்பித்த சிற்றின்பவாத நிலைப்பாடுகளாகும் என டானியல் பெல்

புருடார்த்தக் கொள்கை பண்டைய கொள்கையாயினும் அறத்தைப் போதிக்கும் சிறப்புப் பொருந்தியது. நல்வழியில் பொருளைத் தேடி இன்பத்தைப் பெற்று இறைவனை அடையும் படி கூறுகிறது. மேற்கத்தைய நாகரிகத்தின் அழுத்தமானது விழுமியங்களைச் சிதைவுறச் செய்வதற்குதவலாகாது. பண்டைய கலாசாரம் தொடர்பான உயர் விழுமியங்கள் சிதைவுறா வண்ணம் கட்டியெழுப்ப வேண்டியவை. அன்பு,பாசம்,நேசம் யாவும் ஒரே விதமானவை. மனித விழுமியங்களுக்காய் தோற்றம் பெற்றவை. மனித நேயத்தை வளர்ப்பவை. யேசு கூறுகின்றார். "அன்பு நன்மை செய்யும், அன்பு பொறாமை கொள்ளாது,அன்பு தற்புகழ்ச்சி கொள்ளாது, அன்பு இறுமாப்பு அடையாது, அன்பு இழிவானதைச் செய்யாது, அன்பு தன்னலம் நாடாது, அன்பு தீங்கு நினைக்காது, அன்பு தீவினையில் மகிழாது, அன்பு அனைத் தையும் பொறுத்துக்கொள்ளும் மாணவர்கள் அன்பை எவ்விதத்தில் புரிந்து கொள்கின்றார்கள். சக மாணவர்களுடன் எவ்வாறு இடைவினை கொள்கிறார்கள். விழுமியப் கல்வியில் அன்பு பற்றிய புரிந்துணர்வின் விடையாகும்.

விழுமியங்களைப் பிள்ளைகளுக்குப் போதிப்பதில் ஆசிரியர்கள் மட்டுமன்றி, பெற்றோர்களும் தம் பங்களிப்பைச் செய்வதில் முன்னிற்க வேண்டும். உயர்ந்த விழுமியங்களை தம் வாழ்விலும் பெற்றோர் கடைப்பிடித்தால் பிள்ளைகளும் அதனையே பின் தொடர்வர். ஜீவகாருண்ய சிந்தனைகள் வீட்டிலேயே வளர்க்கப்படவேண்டியன. ஆசிரியர்களும் உயர் விழுமியங்களை, நற்சிந்தனைகளை அன்றாட கடமைகளாக மாணவர்களிடத்தே பரிமாறும் போதே அவர்களிடம் சென்றடையும் விதத்தில் பயனளிக்கின்றன.

தனது மகனின் ஆசிரியருக்கு முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் லிங்கன் எழுதிய கடிதமானது உயர் விழுமியங்களை மகனுக்கு கற்பித்துக்கொடுக்க வேண்டுமெனும் ஒரு தந்தையின் இலக்காக அமைகிறது.

உங்களால் முடிந்தால் சொல்லிக் கொடுங்கள், அவனாகச் சம்பாதிக்கும் ஒரு டொலர், ஐந்து பவுணை விடவும் உயர்ந்தது என்று!

அவனுக்குத் தோல்வியை ஏற்கவும் கற்றுக் கொடுங்கள். வெற்றியின் சந்தோசத்தையும் உணர்த்துங்கள்.

உங்களால் முடிந்தால் பொறாமையில் இருந்தும் அவனை விலக்கி வையுங்கள். அமைதியான சிரிப்பின் இரகசியத்தையும் கற்றுக் கொடுங்கள்.

உங்களால் முடிந்தால் புத்தகங்களின் அற்புதத்தையும் கற்றுக்கொடுங்கள். அதே சமயத்தில் வானத்துப் பறவைகளையும் வெயிலில் சுற்றும் வண்டுகளையும் பசுமையான மணற்பகுதியில் இருக்கும் பூக்களையும் ரசிக்க நேரமும் கொடுங்கள்.

துன்பத்தில் சிரிப்பது எப்படி என்றும் கற்றுக் கொடுங்கள். வெறும் குறைகளை மட்டும் பிடிப்பவர்களை எள்ளி நகையாடக் கற்றுக்

**இனியவள்**

அமைதியான தன்னம்பிக்கையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அப்போது தான் மனிதகுலத்தின் மீது அவனுக்கு நம்பிக்கை வரும்.


இது ஒரு பெரிய ஆணைதான் அதனால உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்!

என்னுடைய மகன் அழகான குட்டிச் சிறுவன்!

(19ஆம் பக்கம் பார்க்க

# மௌனித்திருக்கும் பீரங்கி வாய்கள் சமாதானத்தைக் குறிக்கிறதா?

**சர்வதேச யுத்தநிறுத்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்பட்ட நாடுகள் பலவற்றின் யுத்தநிறுத்தம், புரட்சிகர குழுக்களைச் சிதறடித்தமை, பலவீனப்படுத்தியமை வரலாற்றில் உண்டு. இந்த அடிப்படையில் கொலம்பியா FRAC அமைப்பின் அனுபவமே மிகப்பிந்திய அனுபவமாகும். மூன்று வருட யுத்தநிறுத்தத்தின் பின் திடீரென தாக்குதலை நிகழ்த்திய 'கொலம்பிய அரச படைகள் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பெருமளவு நிலப்பிரதேசத்தினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டனர். இவ்வாறான ஒரு அனுபவத்தை புலிகளிடமும் எதிர்பார்த்திருந்த சிங்களப் பேரினவாதிகளுக்குப் புலிகள் பலவீனப்படாதது மட்டுமல்ல, தமது பலத்தை அதிகரித்துள்ளமை பற்றிய தகவல்களே கிடைக்கின்றன.**



**சமாதானத்திற்கு** காலம் வாசல் திறந்திருந்தது. வலம்புரி, பலவேகய, ஜெயசிக்குறு எனப் பல்வேறு படை நடவடிக்கைகளால் மூடப்பட்ட ஏ-9 நெடுஞ்சாலையின் வவுனியா வாசல் திறக்கப்பட்ட நாள்.

வழமை போல் அமைச்சர்கள் வருகை. சம்பிரதாயங்கள், பாற்சோறு பரிமாறல் என்பதன் பின் கொழும்பு பத்திரிகையாளர் வன்னிக்குள் நெடுந்தூரம் ஊடுருவிவிட்டிருந்தனர். வன்னியின் ஈழநாதம், புலிகளின் குரல் ஆகியவற்றின் சார்பில் இரண்டு, இரண்டு பேர் மட்டுமே சற்றுத் தயக்கத்துடன் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களை அழைத்துச் சென்ற இராணுவ பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நேரடியாக அங்கு வருகை தந்திருந்த அன்றைய இராணுவத்தளபதி பல்லேகலவிடம் அழைத்துச்சென்றார். " இராணுவத்தரப்பில் யுத்தநிறுத்தம் எவ்வாறு பிரதிபலிக்கிறது" என்ற செய்தியாளரின் கேள்விக்கு As You Know ,form the 24th December (2001) not a Single round of aminition or a single round of motar shell's fired .we ramain in silence... எனத் தொடர்ந்த அவரிடம் சமாதான காலத்தில் இராணுவத்தின் நிலைப்பாடு தொடர்பாக கேட்கப்பட்டபோது எந்தக் கடமைக்காக அவர்கள் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டார்களோ அந்தக் கடமைகளுக்குத் திரும்புவார்கள் என்றார். (....go back to their old role, for what we were made) அது மட்டுமல்ல இன்னும் ஒரு படி மேலே சென்று அரசின் அபிவிருத்தித் திட்டங்க

**சஞ்சிகன்**

ளிலும், பொருளாதார நிர்மாணங்களிலும் பங்குபற்றுவதன் மூலம் நூற்றுக்கணக்கான மில்லியன் ரூபாய்களை மக்களின் சேவைக்கு அரசு உபயோகப் படுத்துவதற்கு உதவப்போவதாகவும் தெரிவித்தார்.

தளபதிகள் மாறிக்கொண்டிருக்கிறார்கள். அரசு கூட மாறிவிட்டது. சமாதானம் பற்றிய அவர்களின் அறிக்கைகளை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்கின்றனர். நெருக்கடியும், ஏமாற்றமும் தருகின்ற இந்த மூன்றரை ஆண்டுகள் சமாதானம் மீதான நம்பிக்கையைத் தரவில்லை, சிறிலங்கா அரசு, மக்கள், படைத்தரப்பு என்பன பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து பேரினவாதத்தின் புதிய முகாம்களாகச் செயற்படுகின்றன என்பதையே நிரூபித்துள்ளன.

யுத்த அரங்கில் துப்பாக்கிகளும், மோட்டார் குண்டு வீச்சுக்களும் ஓய்வடைந்ததை மட்டுமே யுத்த நிறுத்தமாகப் படமிட்டு உலகிற்குக் காட்டியவர்கள் யுத்தத்தால் சாதிக்க முடியாதவற்றை சமாதானத்தின் ஊடாகச் சாதிக்க முயன்றதை மறைத்து விட்டனர். ஆழ ஊடுருவும் படையணியின் (LRRP) தாக்குதல்கள் மட்டுமே நிறுத்தப்பட்டன. அதன் செயற்பாடுகள் தகவல் திரட்டுதல், நிலை குறித்தல், தடங்கள் அறிதல் போன்ற பணிகள் மேலும் வேகம் பெற்றன. இராணுவ புலனாய்வுப் ப்ணிகள் புதிய வடிவங்களில் முடுக்கிவிடப்பட்டன. சிங்களப் பேரினவாதிகளின் மிகப்பிரதான இலக்காக, தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை சிதைக்கும் நோக்கமே எப்போதும் முதன்மை பெற்றிருந்தது.

1985 இல் தமிழர் தாயகக் கோட்பாட்டின் இதய பூமியான வடக்கும் கிழக்கும் இணையும் பகுதியில் வெலி ஓயா எனும் புதிய இராணுவ வலயத்தைப் பிரகடனப்படுத்தி வடக்கையும், கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்கும் இராணுவச் செயற்பாட்டை முடுக்கிவிடப்பட்டிருந்தது. இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கையும் கிழக்கையும் வெற்றிகரமாகப் பிரிக்க முடியாமல் போன நிலையில் புதிய வகையான தந்திரோ பாயங்களை சமாதானத்தின் சந்தர்ப்பத்தில் கையாண்டனர். புலிகளின் வடக்குத்தலைமை, கருணா அணி (Karuna Faction) என யுத்தமின்றி வடக்கையும், கிழக்கையும் பிரிக்கமுடியும் எனக் காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே பேரிடியாய் இறங்கியது.

"கருணாவின் வெளியேற்றம் எனும் பொன்னான சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி இலாபம் தரும் மூலதனமாக்கவில்லை என்றும் குற்றச்சாட்டை ஜாதிக ஹெல உறுமய வின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் சந்திரிகா அரசையும் அதனோடிருந்திருந்த ஜே.வி.பியையும் இன்று வரை கடுமையாக விமர்சித்து வருகிறார் என்றால் கருணாவின் வெளியேற்றம் தொடர்பில் சிங்களப் பேரினவாதிகள் எவ்வளவு கரிசனையுடனும் ஆவலுடனும் செயறபட்டனர் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இப்போது அகமுரண்பாடுகளின் மோதல்கள் எனப் பெயரிட்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே கருணா அணியாகச் செயற்படுகின்றனர். அது மட்டுமல்ல புலிகளைக் கேவலப்படுத்தும் பிரசுரங்களை இராணுவச் சோதனைச் சாவடியில் மக்கள் பார்வைக்கு ஒட்டுதல், புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை தகவல் திரட்டுதல் செயற்பாட்டின் கீழ் நடத்துதல் போன்ற செயற்பாடுகள் இந்த மூன்றரை வருடங்களில் ஒருபோதும் நிறுத்தப்படவில்லை. அந்தத் தகவல் திரட்டும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பலர் ஜே.வி.பி ஆதரவு நிலை நின்று யூ.என்.பி மற்றும் பொதுசன முன்னணியினருக்கும் எதிரான பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பது இராணுவத்தினர், மற்றும் ஜே.வி.பியினரின் எதிர்காலச் செயற்பாடுகளுக்குக் கட்டியம் கூறும் செய்தியாகிறது.

சர்வதேச யுத்தநிறுத்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்பட்ட நாடுகள் பலவற்றின் யுத்தநிறுத்தம், புரட்சிகர குழுக்களைச் சிதறடித்தமை, பலவீனப்படுத்தியமை வரலாற்றில் உண்டு. இந்த அடிப்படையில் கொலம்பியா FRAC அமைப்பின் அனுபவமே மிகப்பிந்திய அனுபவமாகும். மூன்று வருட யுத்தநிறுத்தத்தின் பின் திடீரென தாக்குதலை நிகழ்த்திய கொலம்பிய அரச படைகள் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பெருமளவு நிலப்பிரதேசத்தினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து வட்டனர். இவ்வாறான ஒரு அனுபவத்தை புலிகளிடமும் எதிர்பார்த்திருந்த சிங்களப் பேரினவாதிகளுக்குப் புலிகள் பலவீனப்படாதது மட்டுமல்ல, தமது பலத்தை அதிகரித்துள்ளமை பற்றிய தகவல்களே கிடைக்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அரசே பின்னர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சரியான முறையில் நடைமுறைப்படுதது வதிலிருந்து பின் வாங்கியது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்புவாழ்வைத் தோற்றுவிப்பதில் இருந்தும் பின் வாங்கியது. இராணுவ நலன்களை முதன்மைப்படுத்திய அவர்களால் இராணுவ இயந்திரத்தின் இயக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளி யேற்றப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தவோ, அல்லது கடல் வலயத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் சுதந்திரமான ஜீவனோபாயத் தொழில்களுக்கு அவர்களை மீளவும் அனுமதிக்கவோ அல்லது இராணுவத்தால் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன மக்களுக்கான நியாயமான தீர்வைக் கொடுப்பதற்கோ அவர்களால் முடியாமல் போய்விட்டது. பொருட்கள் மீதிருந்த தடைநீக்கம், பகல் பயணங்களும் மட்டுமே இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் விளைபொருட்களாயின.

இராணுவ இயந்திரத்தின் இயக்கத்தையே முதன்மைப்படுத்திய அரசினால், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான பகுதியான தமிழ் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு வடக்குக் கிழக்குக்கு வெளியே சிறிலங்கா இராணுவக் கட்டமைப்புடன் இணைக்கப்படுவர் என்பதை ஒருபோதுமே நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராக தமிழ் தாயகத்திலே இவர்கள் உபயோகிக்கப்படுகின்றனர் என்பதே உண்மையாகும்.

புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதையும் தமிழர் தேசியம், தாயகம் எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குக் கௌரவமானதொரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதையும் தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தமது பெரும்பான்மைக் கருத்தை முன்வைத்துள்ளனர்.

இப்போது பேரினவாதம், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை, சிறுவர்களைப் படையில் இணைத்தல் போன்றவற்றை பூதாகரமாக்கி முதலைக்கண்ணீர் வடிக்கின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை ஒன்றுதிரட்டி புலிகளுக்கு எதிரான அரசியல் மாற்றீட்டு அணி ஒன்றை உருவாக்குவதில் முனைப்பாக உள்ளார்கள்.

தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்களை, ஆயுத முனையிலும், காடைத்தனத்தாலும் ஒடுக்கிய இவர்களின் கடந்த அரை நூற்றாண்டு வரலாற்றை வழக்கம் போலவே இருட்டடிப்புச் செய்து விட்டனர்.

கிழக்கில் சிறுவர்களின் முன்னிலையிலேயே பெற்றோரைக் கொன்று சிறுவர்களை அநாதைகளாக்கியவர்கள், வடமராட்சி நாகர் கோவிலில் சிறுவர்கள் மீதே குண்டு வீசிக் கொன்றார்கள். இப்போது சிறுவர் உரிமை பற்றிப் பேசுகிறார்கள் என்றால் அதன் நீலித்தனத்தை எவ்வாறு குறிப்பிடுவது.

இன்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன் உடத்தலவின்னவில் பத்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தவர்கள், ஐந்து வருடத்தின் முன்பு பிந்துனுவெவவில் தடுத்து வைக்கப்பட்ட இருபத்தேழு தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்தவர்களின் மனித உரிமை மதிக்கும் பாங்கு, நடந்து முடிந்த நீதி விசாரணைகளின் நேர்மையற்ற தன்மைகள் மூலம் முழு உலகமுமே புரிந்துகொண்டிருக்கிறது.


1994 இல் சமாதானத்தை இந்தத்தீவுக்குக் கொண்டுவரப் போவதாகக் கூறி பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவோடு ஆட்சிப்பீடமேறியவர் சந்திரிகா அம்மையார். அது மட்டுமல்ல திரு. ரணில் விக்கிரமசிங்க கூட சமாதானத்துக்காகவே ஆட்சியில் அமர்த்தப்பட்டவர். அவ்வாறாயின் பெரும்பான்மை சிங்கள மக்கள் சமாதானத்தை விரும்புகிறவர்களா?

ஆம், சமாதானம் பற்றிய அவர்களின் கருத்து நிலைப்பாட்டில் இருந்தே அவர்கள் சமாதானத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களின் சமாதானம் பற்றிய கருத்து நிலைப்பாடு தான் என்ன? பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுவதைப் போன்று சாதாரண சிங்கள மக்களின் சமாதானம் என்பது வடக்குக் கிழக்குக்கு வெளியே குறிப்பாக, தலைநகரில் யுத்தம் பற்றிய அச்சமின்றி வாழ்வதேயாகும். குண்டு வெடிப்புக்கள் அற்ற ஒரு புறச் சூழலையே அவர்கள் சமாதானமாகக் கருதுகிறார்கள்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# நறுக்கென...

## சனாதிபதித் தேர்தலும் தேர்தல் ஆணையாளரும்



சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை அது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது.

சனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி விடுக்கும் அறிக்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் எதிராக ஐக்கிய தேசியக் கட்சி இதுவொரு சனநாயக மீறல் அதிகார வெறி என்றெல்லாம் எதிர்க்கணைகள் தொடுக்கும்.

இப்படித்தான் முன்னாள் சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நடைபெற்ற பனிப்போரைப் போல இலங்கையில் ஒரு பனிப்போர் நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் இதற்கொரு முடிவுகட்டுகிறேன் பார் என சிஹல உறுமய உயர் நீதிமன்றத்தில் ஆலோசனை கேட்டு ஒரு வழக்குத் தொடுத்தது.

ஆனால் நிலைமை மோசமாகப் போகிறதே எனப் பார்த்த சனாதிபதி சந்திரிகா தன்னையொரு நேர்மையான அரசியல் வாதியாகக் காட்டிக் கொள்ளும் வகையில் சனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டுமென உயர் நீதிமன்றில் ஆலோசனையைக் கேட்டு ஒரு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இப்படி சனாதிபதித் தேர்தல் தொடர்பான குத்துவெட்டு ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் தேர்தல் ஆணையாளர் சனாதிபதித் தேர்தல் இந்த வருடம் தான் நடைபெற வேண்டுமென அழுத்தம் திருத்தமாக உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். இதனையடுத்து இது தொடர்பான விசாரணைகளும் முடிவுக்கு வந்து தேர்தல் திகதி குறித்த முடிவு இன்று வெளிவரவுள்ளது.

இதற்கிடையில் தேர்தல் ஆணையாளர் சனாதிபதித் தேர்தல் இந்த வருடமே நடத்த வேண்டுமென்ற தனது அறிவிப்புக்கு மாறாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்குமானால் தேர்தல் ஆணையாளர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் ஆணையாளர் இவ்வாறு செய்வதற்குக் காரணம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வரலாறு என்பன மாற்றமடையுமாக இருந்தால் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லை என தெரிவித்துள்ளாராம்.

சபாஷ் சரியான போட்டி. சனாதிபதித் தேர்தல் தொடர்பான போட்டி ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணையாளர் என பெரும் மோதலாகத் தோன்றியுள்ளது.

இதற்கெல்லாம் பதிலாக நேர்மையாக பதவியேற்ற கணக்கோடு சனாதிபதி செயற்பட்டால் பிரச்சினை நீடிக்காது. ஆனால் சனாதிபதி சந்திரிகா எங்கே நேர்மையாகச் செயற்படப் போகிறார்.

## இரகசியப் பயணங்கள்



இலங்கையில் பல்வேறு வெளிநாட்டு தூதுவராலயங்கள் இருக்கின்றன. அங்குள்ள தூதுவர்களின் செயற்பாடுகளும் பல்வேறுபட்டன.

ஆனால் இந்திய தூதுவராலயத்தினதும் தூதுவரினதும் பணிகள் பெரும் இரகசியமானதாகவே உள்ளன.

இந்தத் தூதுவராலயத்தின் இரகசியப்பணிகள் என்பது இன்று நேற்றல்ல பலகாலமாகவே தீவிரம் பெற்றதாகவும் இரகசியம் மிக்கதாகவும் உள்ளன.

ஏன் இப்போது இங்கு அதைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது என்றால் அண்மைக்காலமாக பல்வேறு வெளிநாட்டு இராணுவ படைத்தளபதிகள் வடகிழக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு வரும் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் ஏனைய தூதுவர்கள் இரகசியப் பயணம் மேற்கொள்வது குறைவாகவே இருந்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியத் தூதுவர் நிருபமாராவ் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு மேற்கொள்ளும் விஜயங்களில் அதிகமானவை இரகசிய விஜயங்களாக இருக்கின்றன. அல்லது அவரின் விஜயத்தின் போது ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அல்லது விஜயத்தின் விபரங்கள் வெளியிடப்படுவதில்லை.

இந்த இந்தியத் தூதுவர் நிருபமாராவ் முன்னர் மன்னாருக்கு மேற்கொண்ட விஜயம் இரகசியம் மிக்கதாக இருந்தது. இப்போது யாழ்ப்பாணத்திற்கும் ஒரு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ஆனால் இந்த விஜயமும் இரகசியமானதாகவே உள்ளது.

இந்தியத் தூதுவரின் இந்த இரகசிய விஜயங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களையும் இந்தியா தொடர்பான சந்தேகப் பார்வையயுமே தோற்றுவிப்பதாக உள்ளது.

வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ளும் பயணங்களின் போது மக்கள் பிரதிநிதிகளையும் ஊடகவியலாள்களையும் சந்திக்காததே இத்தகைய சந்தேகங்களைத் தோற்றுவிக்கிறது.

இந்தியா இலங்கை விவகாரத்தில் தலையிடா கொள்கையை கடைப்பிடிப்பதாக கூறிக்கொண்டாலும் இரகசிய தலையீட்டை மட்டும் கொண்டிருக்கிறதா என மக்கள் பேசிக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்தியாவை தமிழ்மக்கள் தமது ஒரு நேச சக்தியாக பார்க்கிற போதும் இந்தியா ஏன் தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு நிற்கிறது?

## அனுதாப அரசியல்



அனுதாப அலையைக் கொண்டு அரசியல் நடாத்தும் வழக்கம் பொதுவாக எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

இதில் இந்த அனுதாப அலையைஅதிகமாக பயன்படுத்துபவர்களும் அதை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்துவதென்பதிலும் சிறிலங்கா முன்னோடியாகவே திகழ்ந்து வருகிறது.

இந்தவகையில் இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் ஜே.வி.பியினதும் பார்வை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மனைவி சுகந்தி கதிர்காமரின் திசையில் திரும்பியிருக்கிறது. அந்த வகையில் கதிர்காமரின் மறைவை அரசு இரண்டு விதமாக பயன்படுத்திக்கொள்ள முனைகிறது.

கதிர்காமரின் மறைவை சர்வதேச ரீதியாக தனக்கான இராஜதந்திர அனுகூலங்களாக பயன்படுத்த முனைகின்ற அதே வேளை உள்நாட்டு அரசியலில் கண்ணீர் வாக்குகளை கவர முனைகின்றது.

இதில் இப்போது ஜே.வி.பி கண்ணீரோடு சேர்த்து இனவாத வாக்குகளையும் பெற்றுக் கொள்ள முனைகிறது.

இவையெல்லாம் நாட்டிற்கு தேவையான ஆளுமையற்ற பிரதிநிதிகளை தெரிவுசெய்ய எடுக்கும் நடவடிக்கையாகவே நோக்க வேண்டியுள்ளது.

இதுவொரு உணர்ச்சிகரமான அரசியல் விளையாட்டாக இருந்தாலும் மக்களிற்கு அரசியல் தலைமைகள் செய்யும் ஒரு மோசடி நடவடிக்கையாகவே உள்ளது.

ஏனெனில் நாட்டின் அதிகார மையங்களுக்கு பொருத்தமானவர்களை நியமிக்க வேண்டியது முக்கியமாகும். இவற்றையெல்லாம் சிங்கள அரச பீடங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா என்றால் இல்லை.

வாழையடி வாழையாக ஒரு குறிப்பிட்ட மேல்தட்டு வர்க்கத்தின் கைகளுக்குள் மட்டுமே அரச பதவிகள் இருக்க வேண்டுமென்றே இவர்கள் விரும்புகின்றார்கள்.

அதாவது இந்த மேல் தட்டு வர்க்கம் ஆளும் தரப்பாகவும் ஏனையவர்கள் ஆளப்படும் தரப்பாகவும் இருக்க வேண்டுமென்பதே அதுவாகும்.

இதனை இன்னொரு வகையில் கூறுவதானால் நவநாகரிக பிரவுத்துவ ஆட்சிமுறையேயன்றி வேறில்லை.

எது எப்படியோ இராணுவ குலத்தைச் சேர்ந்த சுகந்தி கதிர்காமர் திருமணம் செய்ததன் மூலம் அரை அரசியல்அந்தஸ்து பெற்றார். இப்போது அவருக்கு முழு அரசியல் அந்தஸ்து வழங்கும் காரியங்கள் நடைபெறுகின்றன.

இப்போது இருக்கும் நிலைமையில் சுகந்தி கதிர்காமர் ஒதுங்கி இருந்தாலும் ஜே.வி.பிமற்றும் எஸ்.எல்.எப்.பிக்காரர்கள் விடமாட்டார்கள் போலுள்ளது.

## அநுரா பண்டார நாயக்காவும் அவரின் புதிய பணியும்



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விட்டுச்சென்ற வெளிவிவகார அமைச்சர் வெற்றிடத்துக்கு சனாதிபதி சந்திரிகா அநுராபண்டார நாயக்காவை நியமித்து தனது தம்பிக்கு முக்கிய பொறுப்பு ஒன்றை வழங்கியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் வெற்றிடத்துக்கு ஆனந்த சங்கரி, அரச சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்ததனபால என பலருடைய பெயர்கள் அடிபட்டாலும் இறுதியில் அநுரா பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் அநுரா பண்டாரநாயக்காவை அரசியலுக்குள் வலுப்படுத்துவதற்கான முயற்சியை இலகுபடுத்துவதாக இருக்கும் என சனாதிபதி சந்திரிகா கருதியிருக்கக்கூடும்.

எத்தனை நாளைக்குத்தான் அநுரா பண்டாரநாயக்காவும் உல்லாசப் பயணத்துறைக்கு பொறுப்பாக இருந்து உல்லாசத்தை மட்டும் நுகர்ந்துகொண்டு இருக்க முடியும். அரசியலின் இராஜதந்திர விளையாட்டுக்களில் முட்டி மோதுவதைப் பார்க்க சனாதிபதி சந்திரிகா பிரியப்பட்டிருக்கக் கூடும்.

இதேவேளை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வெளிவிவகாரப் பணி என்பது வெளிநாடுகளில் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை செய்வதும் புலிகளை வெளிநாடுகளில் தடைசெய்யக் கோருவதும் மட்டுமே பிரதான பணியாக இருந்தது.

இதே பாணியை மட்டும் தான் இப்போதைய வெளிவிவகார அமைச்சர் கோமாளி இளவல் அநுராபண்டாரநாயக்கா செய்யப்போகிறாரா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர்களின் பணி என்பது இது மட்டும்தான் என்பது எழுதப்படாத விதியாக நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் அநுரா பண்டாரநாயக்காவும் புதிதாக எதையும் செய்யப் போவதில்லை.

அடுத்து அநுரா பண்டாரநாயக்கா அமைச்சுப் பொறுப்பை கையேற்றவுடனேயே இந்தியாவுக்கு வருகை தருமாறு இந்தியா உத்தியோகபூர்வ அழைப்பு ஒன்றை விடுத்ததையடுத்து அதையேற்று அநுரா இந்தியாவுக்கு பயணம் ஒன்றை மேற்கொள்கிறார்.

அநுராவுக்கு இந்தப் பயணத்தின் முடிவில் இரட்டிப்புச் சுமை அதாவது இரண்டு கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கும் ஒன்று சிறிலங்காவுக்கான வெளிநாட்டமைச்சரின் பணி. இரண்டாவது இந்தியா விரும்பும் இலங்கைக்கான வெளிவிவகார பணி. இவை இரண்டையும் மேற்கொள்ள வேண்டியவராக அநுரா இருப்பார்.

இதனையே புதிய வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டார நாயக்காவுக்கு இந்தியப் பயணத்தில் கற்பிக்கப்படும்.

சரி இதையெல்லாம் கச்சிதமாக மேற்கொள்வதற்கு அநுராபண்டாரநாயக்கா நிலையாக நிற்கவேண்டுமே. ஏனெனில் அவர் ஒரு போதை பிரியரல்லவா?

வேழினி




# எமேர்ஜன்சி சிறிலங்கா

**1977 தொடங்கி 1994 வரை பதினேழு வருடகாலம் நீடித்த சனாதிபதிகள் ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, டி.பி. விஜயதுங்க ஆகியோரின் யூன்.என்.பி ஆட்சிக்காலத்தில் எமேர்ஜன்சி ஆட்சி மிகப்பெரியளவில் நீடித்தது. ஜே.வி.பியின் ஆயுதப்புரட்சி, தமிழ் இனப்படுகொலை, இந்தியப் படையெடுப்பு, தமிழர் தம் விடுதலைப் போர் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் அதன் போது நடைபெற்றன.**

**மாற்றம்** என்பது இயல்பு. ஆயினும் சிறிலங்காவின் அவசர காலப் பிரகடன ஆட்சி மாத்திரம் மாறாமல் தொடர்ந்தபடி இருக்கிறது. சிறிலங்கா ஆட்சிமுறை தனது அடிப் படை இயல்பை இன்னும் பேணிக் கொண்டிருக்கிறது. சிறிலங்கா அரசியல் தனது நல்ல தன்மையை இழந்து, சாறை நிராகரித்துச் சக்கையைப் போற்றி வருகிறது. எமேர்ஜன்சி என்பது ஒரு சடுதி நிகழ்வைக் குறிக்கும். சடுதி நிகழ்வை எதிர்கொள்வதற்காக அவசரகால விதிமுறைகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. சடுதி நிகழ்வின் மறைவோடு அவசரகால விதிமுறைகள் மீளப் பெறப்படுகின்றன. ஆனால் அவசரகால விதிமுறைகளின் துணையோடு ஆட்சி செய்யும் முறைதான் வழமையாக நடக்கிறது. சடுதி நிகழ்வு இருக்கோ இல்லையோ அவசரகால விதிமுறைகள் தொடர்ந்தபடி இருப்பதுதான் சிறிலங்கா வழமை. இதைத் தட்டிக்கேட்க யாருமில்லை. நீதித்துறை தன்னை வலுப்படுத்தாமல் ஆட்சியாளரின் ஏவலாளாகச் செயற்படுவது ஒரு சோக வரலாறு.

சிறிலங்கா சுதந்திரம் பெற்றபின் சென்ற 56 வருட காலத்தில் அரைப் பங்கிற்கு மேலான கால ஆட்சி எமேர்ஜன்சிப் பிரகடனத்தோடு அவசர கால விதிமுறைகளின் துணையோடு நடத்தப்படுகிறது. இப்படியான தொரு ஆட்சிமுறை ஆசியாவின் பிறிதோர் நாட்டில் நடப்பதைக் காண முடியாது. சுதந்திரம் பெற்ற ஐந்தாவது வருடத்திலேயே அவசரகால ஆட்சி அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்தார். பங்கீட்டு அரிசிக்கு வழங்கப்பட்ட அரச மானியத்தை அவர் நிறுத்தியபோது இடதுசாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இலங்கைத்தீவு முழுவதும் அரசுக்கு எதிரான கலகம் வெடித்தது. அப்போது தமிழீழ மக்கள் தம்மை இந்நாட்டின் குடிமக்களாக எண்ணிய காலம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற நகரங்களிலும் கொழும்புக்கு நிகரான மக்கள் கிளர்ச்சி தோன்றியது.

சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் இன்று பரவலாகப் பயன்படும் 'ஹர்த்தால்' (HARTAL) என்ற சொல், 1953 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியுடன் தோன்றியது. இது ஒரு இந்திய மொழிச்சொல். கதவடைப்பு என்பது இதன் நேர்க்கருத்து. ஆனால் இந்தியாவிலும் இலங்கையிலும் இச்சொல் வேறு பல அர்த்தங்களைத் தன்பால் கொண்டுள்ளது. இடதுசாரிகள் நடத்திய டட்லி காலக் கலவரம் ஹர்த்தால் என்று முதன்முறையாக அழைக்கப்பட்டது. இக்கலவரத்தில் பொலிசாரின் துவக்குச் சூட்டில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். டட்லி மனம் பொறாது பதவி விலகினார். நிறுத்தப்பட்ட அரிசி மானியம் மீண்டும் கொண்டுவரப்பட்டது. சேர்ஜோன் கொத்தலாவலயின் பிரதமர் பதவிக் காலம் என்று தொடங்கியது.

டட்லி புகுத்திய அரிசிக் கலவரங்களுக்கு எதிரான அவசரகாலப் பிரகடனம் முப்பது நாட்கள் மாத்திரம் நீடித்தன. பின்வரும் வரலாற்றுடன் ஒப்பிடும் போது அது மிகவும் குறுகிய காலம். ஆனால் அவசரகால நிலையைத் தாராளமாகப் பயன்படுத்தும் பாரம்பரியத்தைத் தொடக்கி வைத்தவர்கள் பண்டாவும், மனைவி சிறிமாவோவும்தான் என்பது வரலாறு. 1956 ஆம் ஆண்டின் இனக்கலவரம் வெடித்தபோது அதைக்கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு பண்டா மறுத்துவிட்டார். அம்பாறையிலிருந்து முஸ்லிம்களும், தமிழர்களும் விரட்டப்படும்வரை அவர் கலவரங்களை நீடிக்கவிட்டார். ஆனால் 1958 இல் மீண்டுமொரு இனக்கலவரம் தொடங்கிய போது பண்டா அவசர காலப் பிரகடனத்தைச் செய்தார். இது 27 மே.1958 இல் தொடங்கி 26 மார்ச் 1959 இல் முடிவுற்றது. 1958 ஆம் ஆண்டுக் கலவரம் விஸ்வரூபம் எடுப்பதற்கு பண்டா காரணமாவார்.

1958 ஆம் ஆண்டுக் கலவரம் தொடங்கிய முதல் மாதங்களில் நுவரெலியா மாநகரசபை மேயர் செனவிரத்தினா வாழைச் சோனையில் கொல்லப்பட்டார். தனிப்பட்ட காரணங்களால் எழுந்த பிணக்கின் காரணமாக இப்படுகொலை நடைபெற்றது. நன்றாக விசாரணை செய்யாமல் தமிழர்கள் செனவிரத்தினாவைக் கொன்றுவிட்டார்கள் என்று பொறுப்பற்ற விதத்தில் இலங்கை வானொலியில் பண்டா பேசினார். 1958 ஆம் ஆண் டுக் கலவரம் மிகக் கொடூரம் ஆவ தற்கு அவருடைய வானொலிப் பேச்சுக் காரணமாகியது. இக்கலவரத்தின் தன்மையை உணர்வதற்கு சிங்களப் பத்திரிகையாளர் தார்சி வித்தாச்சி எழுதி லண்டனில் வெளியிட்ட 'எமேர்ஜன்சி-58' என்ற விவரண நூல் துணை செய்கின்றது.

தனது ஆட்சிக்காலத்தில் பொது வேலை நிறுத்தத்தை எதிர்கொள்வதற்காகவும் பண்டா அவசர காலப்பிரகடனத்தைச் செய்தார். இது 25 மே 1959 இல் தொடங்கி 03 டிசெம்பர் 1959 வரை நீடித்தது. ஒரே ஆட்சிக்காலத்தில் இருமுறை அவசரகாலப் பிரகடனம் செய்த பொறுப்பு பண்டாவுக்கு உண்டு. இதை விட இன்னுமோர் முக்கியத்துவம் பண்டாவுக்கு உண்டு. வடக்குக் கிழக்கிற்கு முதன்முறையாக சிங்கள இராணுவத்தை அனுப்பிய சிறப்பு அவரையே சாரும். இது பற்றி தார்சி வித்தாச்சி பின்வருமாறு செய்தி வெளியிடுகிறார். 03 ஜூன் 1958 இல் நடைபெற்ற ஆளும் கட்சி மாநாட்டில் பண்டா " என்னுடைய படைகள் இப்போது வடகிழக்கில் தங்கி யுள்ளன. இந்த இரு மாகாணங்களிலும் இப் போது இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. இராணுவ ஆளுநர்கள் அங்கு ஆட்சி செய்கிறார்கள், ஆம் மண்டும் சொல்கிறேன் அவர்கள் இராணுவ ஆளு நர்கள்தான். இந்த இரு மாகாணங் களில் ஒரு தனி நிர்வாகம் அமைக்கும் முயற்சியை நான் தடுப்பேன்" ( EMERGENCYI '58 THE STORY OF THE CEYLON RACE RIOTS BY TARZIE VITACHI PUBLISHED BY ANDRE DEUTSCH.1958 )

கணவரைப் பின்தொடர்ந்து ஒரே ஆட்சிக்காலத்தில் இருமுறை அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து சிறிமாவோ சாதனை படைத்துள்ளார். சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் (1961 இல் தொடங்கியது) ஆயுதப்படையினர் ஆட்சியைக் கைப்பற்ற எத்தனித்தனர். இதை1961 ஆம்ஆண்டு கூ (Coup) என்பார்கள். இந்த முயற்சியைத் தொடர்ந்து 17 ஏப்ரல் 1961 தொடக்கம் 04 ஏப்ரல் 1963 வரை அவசரகாலப் பிரகடனத்தோடு சிறிமாவோ ஆட்சி செய்தார். 1964 இல் அரசியல் குழப்பங்கள் தோன்றியபோதும் அவர் அதே பிரகடனத்தின் உதவியோடு ஆட்சி செய்தார். அடுத்தும் பிரதமர் பதவிக்கு வந்த டட்லியும் தான் ஆட்சி செய்த சொற்ப காலத்தில் அவசரகாலப் பிரகடனத்தின் துணையை நாடினார். அவசரகாலப் பிரகடனத்தைத் துணைக்கழைக்காமல் ஆட்சி செய்த சிங்கள ஆட்சித்தலைவர்கள் இந்த நாட்டில் மிகக் குறைவு என்பது மிகப்பெரிய வரலாற்று உண்மை. இதற்கு அத்தாட்சியாக லண்டனில் இயங்கும் அரசியல் ஆய்வுப் பட்டறைக்காகத் தயாரிக்கப்பட்டபட்டியலை இங்கு பதிவு செய்கிறோம். (கட்டுரை அடிப்பாகத்தைப் பார்க்கவும்)

1970 இல் இடது சாரிகளின் துணையோடு ஆட்சியைப் பிடித்த சிறிமாவோ 1977 வரை பதவியிலிருந்தார். மக்களுக்காகக் குரல் கொடுப்போர் என்ற பெயர் பெற்ற இட்துசாரிகள் சிறிமாவோவின் பங்காளிகளாக மாறினர். சிறிமாவோவின் இக்கால ஆட்சியில் ஆறு வருடகாலம் அவசர கால நிலை இருந்தது. அமைச்சர் பதவி வகித்த இடதுசாரிகள் அவசரகால ஆட்சி வழங்கிய அதிகாரங்களை முழு அளவில் அனுபவித்தனர். 1977 தொடங்கி 1994 வரை பதினேழு வருடகாலம் நீடித்த சனாதிபதிகள் ஜெயவர்த்தனா, ஆர். பிறேமதாசா, டிபி விஜயதுங்க ஆகியோரின் யூன்.என்.பி ஆட்சிக் காலத்தில் எமேர்ஜன்சி ஆட்சி மிகப்பெரியளவில நீடித்தது. ஜே.வி.பியின் ஆயுதப் புரட்சி, தமிழ் இனப்படுகொலை, இந்தியப் படை யெடுப்பு, தமிழா தம் விடுதலைப்போர் எனப்பல்வேறு நிகழ்ச்சிகள் அதன் போது நடைபெற்றன.

ஜே.ஆர் காலத்தில் உருவாக்கப்பட்ட அவசரகால ஆட்சி விதிமுறைகளில் மிகவும் கொடூரமானது விதிமுறை இலக்கம் 17 என்பது சட்டவியலாளர்களின் முடிவு. "அதுவரை யாதொரு குற்றமும் செய்யாதவர்கள் அல்லது எப்போதாவது யாதொரு குற்றமும் புரியாதவர்கள்" ஆகியோரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கைது செய்து அடைத்து வைக்கும் சட்டவலுவை அது ஆயுதப் படையினருக்கும் பொலிசாருக்கும் வழங்குகிறது. இலக்கம் 17 வழங்கும் அதிகாரம் மிகவும் பயங்கரமானது. அரச பயங்கரவாதத்தின் வெளிப்பாடாக இடம் பெறுகிறது. எதிர்வரும்காலத்தில் குற்றச் செயல் புரியக்கூடியவர்களை சிறைப்பிடிக்கும் அதிகாரத்தை வழங்கும் இந்த விதிமுறைகளின் கீழ் பல அப்பாவித்தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டனர். முன்னாள் கொழும்பு மேயர் சிறிசேன குரே மீது இந்த விதிமுறை பாயவிட்டபோது அவர் உச்ச நீதிமன்றத்திற்கு எதிர்மனுச் செய்தார். நாட்டில் நடைமுறையில் இருக்கும் குற்றவியல் சட்டங்களுக்கு அமைவாக இல 17 அமுல் செய்யப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஒரு தமிழன் மனுச் செய்திருந்தால் இப்படியான உச்ச நீதிமன்றத் தீர்ப்புக் கிடைப்பது மிகவும் சந்தேகம். 1994 ஆம்ஆண்டு சந்திரிகா ஆட்சி தொடங்கிய போது எமேர்ஜன்சி ஆட்சி தொடர்ந்தது. 2002 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் அது நிறுத்தப்பட்டது. மூன்று வருடம் சென்ற நிலையில் பழைய குருடி கதவைத்திறவடி என்ற வரிக்கு அமைவாக மீண்டும் எமேர் ஜன்சி வந்துவிட்டது. எப்போது அகலும் என்று இப்போது சொல்ல முடியாது.

**அன்பரசு**

## எமேர்ஜன்சி ஆட்சி அட்டவணை-1953-2005

| தொடக்கம் | வரை | பிரதமர்/சனாதிபதி | பிரகடனத்திற்குக் காரணம் |
|---|---|---|---|
| 12.08.53 | 11.09.53 | டட்லி சேனநாயக்கா | ஹர்த்தால். |
| 27.05.58 | 26.03.59 | எஸ்.டபிள்யூ.ஆர்.டி. | பண்டா இனக்கலவரம். |
| 25.05.59 | 03.12.59 | எஸ்.டபிள்யூ.ஆர்.டி. | பண்டா வேலைநிறுத்தம். |
| 17.04.61 | 04.04.63 | சிறிமாவோ பண்டா | இராணுவ கூ (Coup). |
| 05.03.64 | 04.04.64 | சிறிமாவோ பண்டா | அரசியல் குழப்பநிலை. |
| 08.01.66 | 07.12.66 | டட்லிசேனநாயக்கா | வேலை நிறுத்தம். |
| 25.10.70 | 25.11.70 | சிறிமாவோ பண்டா | நெலும்தெனியாவில் ஜே.வி.பி. குண்டுத்தாக்குதல். |
| 16.03.71 | 15.02.77 | சிறிமாவோ பண்டா | 1ஆம் கிளர்ச்சி ஜே.வி.பி. |
| 29.11.78 | 28.05.79 | ஜே.ஆர்.ஜெயவர்த்தனா | இனக்கலவரம். |
| 16.07.80 | 15.08.80 | ஜே.ஆர்.ஜெயவர்த்தனா | ஜூலை மாத வேலை நிறுத்தம். |
| 17.08.81 | 16.01.82 | ஜே.ஆர்.ஜெயவர்த்தனா | அரசியல் குழப்ப நிலை. |
| 18.05.83 | 01.01.89 | ஜே.ஆர்.ஜெயவர்த்தனா | இன அழிப்பு நடவடிக்கைகள். |
| 20.06.89 | 04.04.94 | ஆர். பிறேமதாசா,டி.பி.விஜயதுங்க | 2 ஆம் ஜே.வி.பி கிளர்ச்சி. வட கிழக்கில் ஆயுதப்போர். |
| 04.11.94 | 04.04.96 | சந்திரிகா | வட கிழக்கில் ஆயுதப்போர். |
| 04.04.96 | பெப்ரவரி 2002 | சந்திரிகா | வடகிழக்கில் மாத்திரம் அவசர காலநிலை. |
| ஆகஸ்ட் 2005 | | சந்திரிகா | நாடு முழுவதும் அவரகாலநிலை. |

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 26. 08 . 2005

மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# அரசின் பின் கதவு வேலை..!

சிறிலங்கா அரசு இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தனக்குக் கிடைத்த வாய்ப்புக்கள் எல்லாவற்றையும் காலம் காலமாக புறந்தள்ளியே வந்துள்ளது.

அத்தோடு யுத்தத்தின் மூலமாக அல்லாது பேச்சுக்கள் மூலமாக தீர்வு காண்பதிலும் உண்மையான அக்கறையுடனோ அல்லது, நேர்மைத்தன்மையுடனோ நடந்து கொண்டதும் இல்லை.

தமிழ் மக்களின் மீது யுத்தத்தை திணிக்கின்ற அதே வேளை, ஒரு புறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக்கொண்டு பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணும் வாசல்களை இறுக மூடும் காரியங்களில் ஈடுபடுவதுடன் யுத்தமற்ற வழிகளில் தீர்வு காணும் மார்க்கங்களை மூடுவதில் தீவிரம் காட்டும் பொதுவான போக்கொன்றை அரசு தனது கரங்களில் வைத்துள்ளது.

இந்த நிலையில், மூன்றரை வருடகாலத்திற்கு மேலான இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான சமாதான வழிகளில் தன்னுடைய விசுவாசத்தினை அரசு காட்டவில்லை.

மாறாக, புரிந்துணர்வு உடன்படிக்கையின் முன்னுரையில் முதன்மையான இலக்காகக் கொண்ட "இனத்துவ முரண்பாட்டிற்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றை காணும் நோக்கத்திற்காக" எந்த வகையிலும் அரசு உழைக்கவும் இல்லை.

பதிலாக, தீர்வொன்றைக்காணாமலே புரிந்துணர்வு உடன்படிக்கையின் பலனான யுத்தமற்ற இலங்கையை மட்டும் நிர்வகித்துக்கொள்ள பிரியப்படும் அரசாக மட்டுமே செயற்பட்டு வருகிறது.

அரசின் இந்த நடவடிக்கையானது சீறிக்கிளம்ப உள்ளே கனன்று கொண்டிருக்கும் எரிமலைக்கு வெளியே நீர் ஊற்ற முயலும் செயற்பாடாகவே அரசின் இந்த செயற்பாடு இருந்து வருகிறது.

இத்தகையதொரு நிலையில் சர்வதேசத்தின் அழுத்தமான பார்வையில் நடைமுறையிலிருக்கும் சமாதான முயற்சியை எப்பாடு பட்டாவது சீர்குலைத்துவிட அரசு முயல்கிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மீதான தாக்குதலை யார் செய்தார்கள் என்பது இன்னும் சட்டரீதியாகப் புலனாகாத நிலையில் கதிர்காமர் மீதான தாக்குதலைப் புலிகள் மீது எழுந்தமானமாகச் சுமத்தி சமாதானத்திற்கான வாய்ப்பை அழித்தொழித்துவிட முனைவதோடு அதற்கான செயற்பாடுகளிலும் முனைப்புக்காட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய நாடுகளில் தடை செய்வதற்கான அழுத்தங்களை அந்நாடுகள் மீது சிறிலங்காவின் தூதுவராலயங்கள் மூலம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. அரசின் இந்த நடவடிக்கையானது அரசிற்கு சமாதான முயற்சி மூலமாக இன முரண்பாட்டிற்கு தீர்வு காணும் முயற்சியின் விருப்பமின்மை யையே காட்டுகிறது.

ஏனெனில், புலிகள் இயக்கத்தின் சர்வதேச ரீதியான கீர்த்தியையும், செயற்பாட்டையும் சிதைத்து விடுவதன் மூலம் சமாதானத்தின் வாசலை உள்ளிருந்து மூடாது வெளியிலிருந்து மூடுவதற்கான செயற்பாடாக இது அமையுமென அரசு கருதுகிறது.

அரசின் இந்த நயவஞ்சகமான அரசியல் இராஜதந்திர அணுகுமுறையில் பலியாகி சமாதானத்திற்குத் தீங்கு விளைவிக்க சர்வதேச நாடுகள் முயற்சிக்கமாட்டாது.

ஏனெனில் சிறிலங்கா அரசின் இந்த செயற்பாடானது நடை முறையிலிருக்கும் சமாதான முயற்சியை மட்டுமன்றி எதிர்காலத்தில் முன்னெடுக்கக் கூடிய சமாதான முயற்சிகளையும் முன்னேற்றங்களையும் பாதித்துவிடும்.

சர்வதேச சமூகம், இஸ்ரேல்,பலஸ்தீனிய பிரச்சினை முதல் தென்சூடான்,அச்சே முதற்கொண்டு வேகமாக யுத்தமற்ற முறையில் அமைதி வழியில் தீர்வு காண்பதில் முன்னேற்றம் கண்டும் வரும்நிலையில் தமிழ் மக்களின் போராட்டத்தையும் அமைதி வழியில் தீர்வுகாண விரும்புகிறது.

எனவே, சிறிலங்கா அரசின் அமைதிவழி முயற்சிக்கு எதிரான பின்கதவு வேலைகள் எவையும் சர்வதே சமூகத்தின் முன் எடுபடப் போவதில்லை என்பதே உண்மை.

அரசு புலிகளோடு நேரடியாகப் பேசுவதற்கு ஒழுங்குகளை செய்து தருமாறு நோர்வேயைக் கோரிவந்தது.

ஆனால் சிறிலங்கா அரசோடு நேடியாகப் புலிகள் இயக்கம் பேசுவதற்குரிய ஆரோக்கியமான சூழல் எதனையும் அரசு வைக்காத நிலையில் அரசு-புலிகள் நேரடியாகப் பேசுவது சாத்தியமானதொன்றாக இருக்கவில்லை.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட சரத்துக்களை அமுல்படுத்தும் வகையில் எந்தக் காரியங்களை ஆற்றுவதாக இருந்தாலும் சரிதான்.

சமாதான பேச்சுக்களை முன்னெடுக்க பேச்சுவார்தைக்குத் தயாரான நிலைக்கு வருவதாக இருந்தாலும் சரிதான்.

இறுதியாக ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கைச்சாத்திட்ட பொதுக்கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதாக இருந்தாலும் சரிதான் அரசு இணங்கிக்கொண்ட விடயங்களினை முன்னெடுக்காத நிலையே காணப்பட்டது.

பேச்சுக்களை எப்படியாவது குழப்பியடிக்க வேண்டுமென்ற காரியங்களில் ஈடுபடுகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான தாக்குதல் நடைபெற்றிருந்த சூழலில் அரசு விடுத்த இந்த அழைப்பை புலிகள் இயக்கம் நிராகரிக்கும் எனவும் புலிகள் நிராகரிக்கும் பட்சத்தில் அதனைப் பயன்படுத்தி ஒரு அனுதாப முகத்தோடு புலிகளின் செயற்பாட்டை விமர்ச்சித்துக்கொண்டு புலிகள் இயக்கத்திற்கு எதிராக பெருமெடுப்பில் இராஜதந்திர போர் ஒன்றை மேற்கொள்ள துணிந்த அரசின் நடவடிக்கையை புலிகள் இயக்கம் மிக இலாவகமாக முறியடித்ததைத் தொடர்ந்து இப்போது மாறு வழியைத் தேடத் தொடங்கிவிட்டது.

இறுதியாகக் கிடைக்கும் தகவல்களின்படி யுத்தநிறுத்த அமுலாக்கம் குறித்து பேசுவதற்குப் புலிகள் இயக்கம் இணங்கியிருக்கின்றபோதிலும் இந்தப் பேச்சுக்கள் இலங்கைக்குள்ளேயே நடைபெறவேண்டுமென அரசு புதிய குழப்பம் ஒன்றை ஏற்படுத்துவதாகத் தகவல்கள் வருகின்றன.



அவ்வாறு வெளிநாடு ஒன்றில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமானால் அதற்குப் புலிகள் இயக்கம் அரசுக்குச் சரியான காரணங்களை தெரிவிக்கவேண்டுமென கோருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த புதிய குழப்பமானது பல்வேறு நோக்கங்களை குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினையை இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் சர்வதேசத்தின் பார்வைக்குக் கொண்டு சென்று விட்ட முயற்சியை முறியடிக்கும் நோக்கம் கொண்டதாக இருக்கின்ற அதே வேளை இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் மேற்குலகின் அதிகப்பிரசன்னத்தை வெட்டிவிட முனையும் ஒரு நோக்கத்தையம் கொண்டதாகவுள்ளது. அரசின் பின்னணியில் இந்தப்பிராந்தியத்தில் அதிகரித்து வரும் மேற்குலகின் பிரசன்னத்தை விருமபாத சக்திகளின் பிடி இருப்பது போலவே தோன்றுகிறது.

## அரசு போடும் நாடகம்...!

***கதிர்காமர் மீதான தாக்குதல் நடைபெற்றிருந்த சூழலில் அரசு விடுத்த இந்த அழைப்பை புலிகள் இயக்கம் நிராகரிக்கும் எனவும் புலிகள் நிராகரிக்கும் பட்சத்தில் அதனைப் பயன்படுத்தி ஒரு அனுதாப முகத்தோடு புலிகளின் செயற்பாட்டை விமர்ச்சித்துக்கொண்டு புலிகள் இயக்கத்திற்கு எதிராக பெருமெடுப்பில் இராஜதந்திர போர் ஒன்றை மேற்கொள்ள துணிந்த அரசின் நடவடிக்கையை புலிகள் இயக்கம் மிக இலாவகமாக முறியடித்ததைத் தொடர்ந்து இப்போது மாற்று வழியைத் தேடத் தொடங்கிவிட்டது.***

இந்த நிலையில் வடக்குக் கிழக்கு பகுதியில் அரசு கட்டவிழ்த்து விட்ட மறைமுக யுத்தம் படிப்படியாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் அத்திவாரத்தையே ஆட்டம்காணச் செய்யும் வகையில் தீவிரம் பெற்ற சூழலில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் தொடர்பாக பேசுவதற்கு நோர்வே அரசின் ஊடாக புலிகள் இயக்கத்தை அரசு கோரியிருந்தது.

நோர்வே அரசு விடுத்த இந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட புலிகள் இயக்கம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்து பேசுவதற்கு இணங்கியது.

அரசு சமாதான முயற்சியை முன்னெடுக்கும் வகையில் எந்த நடவடிக்கையினையும் எடுக்காத நிலையில் புலிகள் மீதான அரச படையினரதும் அரச படையின் துணைக்குழுக்களினதும் தாக்குதல்கள் தீவிரப்பட்டிருந்த நிலையில் அரசு விடுக்கும் அழைப்பை புலிகள் இயக்கம் நிராகரிக்கும் என அரசு கருதியது.


ஆனால் அரசின் நிணைப்பிற்கு மாறாக புலிகள் இயக்கம் யுத்தநிறுத்த அமுலாக்கம் குறித்துப் பேசுவதற்கு இணங்கியதோடு நோர்வே அரசுக்கும் இது தொடர்பாக அறிவித்தது.

புலிகள் இயக்கத்தின் இந்த அறிவிப்பையடுத்து அதிர்ந்து போன அரசு: பதறியடித்து இப்பொழுது இந்தப் பேச்சுக்களை எப்படியாவது குழப்பியடிக்க வேண்டுமென்ற காரியங்களில் ஈடுபடுகிறது.

அத்தோடு அரசு போடும் இந்த தகிடுதத்த விளையாட்டானது அடிப்படையில் யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்துவதை நோக்காகக் கொண்ட ஒரு பேச்சுக்கான முயற்சியாக இது இல்லை என்பதையே காட்டுகிறது. இந்தநிலையில் அரசு எடுத்துள்ளதாகக் கூறப்படும் இந்த நிலைப்பாடானது புலிகள் இயக்கத்தை எந்த வகையிலும் பாதிக்காது. பதிலாக அரசையே அதிக நெருக்கடிக்குள்ளாக்கப்போகிறது.

ஏனெனில் ஏற்கனவே அரசின் சமாதான விரோதப் போக்கை மூன்றரை ஆண்டு காலத்துக்கு மேலான காலத்தில் பார்த்துவிட்ட சர்வதே சமுகம் இதன் பின்னணியை தெளிவாகவே புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

— புகழன்



நேர்நோக்கு

# சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி யின் பங்கு..?

சனாதிபதித் தேர்தல் எப்போது என்ற அறிவிப்பு அல்லது அது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்குகளுக்கான தீர்ப்பு இன்று உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்றது. இது பெரும்பாலும் தேர்தல் ஆணையாளரின் கருத்தை ஒட்டியதாகவே அமையும் எனக் கருதப்படுகின்றபோதிலும் உயர் நீதிமன்றத்துக்கு அதுகுறித்த சுயாதீனமான தீர்ப்பு வழங்க அதிகாரம் உண்டென்றும் சில சட்ட வல்லுனர்களால் வாதிடப்படுவதானது எதிர்வு கூறலை மட்டுப்படுத்தத் தான் செய்கிறது.

அதாவது தேர்தல் ஆணையாளர் தனது தீர்ப்பு இவ்வாண்டில் தேர்தலை நடத்துவதுதான் என்று கூறிவிட்டார். ஆனால் அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உள்ளதா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்கிறது.

இரண்டாவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இரகசியமாகச் சத்தியப் பிரமாணம் செய்து வைத்த பிரதம நீதியரசர்தான் இன்றைய தீர்ப்பை வழங்க இருக்கிறார். அவர் எதனை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலமாக எடுக்கப் போகிறார்? என்பது மறுபுறமாக இருக்கிறது.

இந்நிலையானது நீதிமன்றத் தீர்ப்பு இதுவாகத்தான் இருக்கும் என்பதை அடித்துக் கூற முடியாத நிலையைத் தோற்றுவித்திருக்கிறது எனலாம். ஏனெனில் சிறிலங்காவின் நூதனமான அரசியல் யாப்பும் நிர்வாகங்களும் புதிய சரித்திரங்களை- முன்னோடிகளை ஏற்படுத்துவது வழமையானதாகும்.

எவ்வாறாயினும், சனாதிபதித் தேர்தல் எப்பொழுது நடைபெறுவதாக இருந்தாலும் அதனை நோக்கிய நகர்வுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. அதாவது பிரதான கட்சிகள் இரண்டும் சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களை அறிவித்துவிட்டன. ஆனால் யாருக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்கும் என்பதை தீர்மானிப்பதில் சில காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

இதிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரிய அளவில் தடுமாற்றம் இல்லைப் போலவே தெரிகிறது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிதான் பெரிய குழப்பகரமான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது மீண்டும் ஜே.வி.பி யுடன் கூட்டு ஒன்றை உருவாக்கிக்கொள்வதா? இல்லையா? என்ற கேள்விக்கு அது விடைகாண வேண்டிய நிலையில் உள்ளது.

ஒருபுறம் பதின்னான்கு மாதம் ஜே.வி.பி யுடன் இணைந்து நடத்திய ஆட்சியின் போது அதன் அனுபவம் சர்வதே சரீதியாக வலியுறுத்தப்படும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி கொண்டுள்ள இறுக்கமான நிலைப்பாடு, மறுபுறம் ஜே.வி.பி யுடன் இணைந்து போட்டியிடாவிட்டால் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சம் என்பன அக்கட்சிக்கு இதனை முடிவு செய்வதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை சனாதிபதித்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு எதனையும் சாதித்து விட முடியாது என்பது அதற்கு நன்றாகவே தெரியும். அதன் இனவாத நடவடிக்கைகளுக்குக் கிடைக்கப் போகும் பரிசான வாக்குகள் தனித்து அதற்குமட்டும் கிடைத்து விடப் போவதில்லை. அதனைப் பங்கு போட்டுக் கொள்ள ஜாதிகஹெல உறுமய உள்ளது என்கின்ற நிலை யும் உள்ளது.

அதேவேளை இனவாதிகள் தெளிவாகச் சிந்திப்பார்களாயின் அவர்கள் சனாதிபதித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு வாக்களிக்கவும் முயலக்கூடும். ஏனெனில் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போட்டதில் அக்கட்சியும் சளைத்தது அல்ல.

அதே வேளை சிறிலங்காவின் தற்போதைய சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ச தான் ஒரு பௌத்த சிங்களவர் என்பதை தெளிவாக வெளிக்காட்டும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறார்.

எனவே ஜே.வி.பியின் தீவிர ஆதரவாளர்கள் தவிர்ந்த சிங்கள இனவாதிகள் சனாதிபதித் தேர்தலில் மகிந்தராஜபக்சவை ஆதரிப்பார்களே[illegible]ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியு[illegible] கூ[illegible]ச் சேராது வெளியே இருப்பதும் ஜே.வி.பிக்கு பயன் தருவதாக இராது. அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரை ஆதரிக்காது ஜே.வி.பி தனித்துப் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதாகி விடும் என்பதும் ஜே.வி.பிக்கு தெரியாததல்ல. அது ஜே.வி.பி க்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்து விடக் கூடியதாகும்.

ஏனெனில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவே சிறிலங்காவில் நிலைகொள்ளக் கூடியதாக இருக்குமோ என்பது கேள்வியாக அமைந்துவிடும்.

இந்நிலையில் ஜே.வி.பி- சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டு மீண்டும் சாதகமாகக் கூடிய நிலையே காணப்படுகிறது. ஆனால் இதற்கு இடஞ்சலாக ஜே.வி.பி பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் விதிக்கின்ற நிபந்தனை இருக்கலாம். ஆனால் ஜே.வி.பி அதனைக் கூடத் தளர்த்தி அதற்கு வேறு நியாயங்களைக் கற்பிக்க முயலலாம்.

ஆனால் அதனைக் கைவிடுவதாக வெளிப்படையாக மகிந்த ராஜபக்ச அறிவிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானது அல்ல. எனவே அது ஏற்கனவே செயலிழந்துவிட்ட நிலையில் அதனைச் செயலிழக்கச் செய்துவிட்ட பெருமையுடன் ஜே.வி.பி அந்த நிபந்தனையை வலியுறுத்தாது விடலாம்.

எனினும் இவ்வாறு ஒரு கூட்டு ஏற்படுவது சிறுபான்மையின மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சியின் பக்கமாகத் தள்ளுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மகிந்த ராஜபக்ச சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவராக இருக்கிறார். எனவே சமாதானம் தொடர்பில் அவர் சில செயற்பாடுகளை (குறைந்தது வாக்குறுதி களை வழங்குதல்) செய்ய வேண்டியவராக உள்ளார். அதில் ஒன்றாகவே ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணுவது தொடர்பான ஒப்பந்தத்தை செய்து கொள்வது என்று வெளிவந்த தகவலாகும்.

ஆனால் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதாயின் இந்த விடயத்திலும் அவர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்படமுடியும்.

இவை மட்டுமல்லாது வாழ்க்கைச் செலவு, விலைவாசி ஏற்றம், சம்பள உயர்வு போன்றவற்றி லும் கவர்ச்சி கரமான அறிவிப்புகள் சில அவருக்குத் தேவை. கடந்த தேர்தலில் அவரது கட்சி விடுத்த அறிவிப்புகளில் நிறைவேற்றப் படாதவை ஏராளமாக இருப்பினும் அத்தகைய அறிவிப்புகள் சிலவற்றை விடுப்பது அவருக்குப பிரச்சினையாக இராது. ஆக அவர் சமாளிக்க வேண்டியிருப்பது ஜே.வி.பியை மட்டுமே.

> **பதின்னான்கு மாதம் ஜே.வி.பி யுடன் இணைந்து நடத்திய ஆட்சியின் போது அதன் அனுபவம் சர்வதேசரீதியாக வலியுறுத்தப்படும் சமாதான முயற்சிக்கு எதிராக ஜே.வி.பி கொண்டுள்ள இறுக்கமான நிலைப்பாடு, மறுபுறம் ஜே.வி.பி யுடன் இணைந்து போட்டியிடாவிட்டால் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சம் என்பன அக்கட்சிக்கு இதனை முடிவு செய்வதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.**



வேலவன்

# தமிழ் ஊடகங்கள் மீதான அவசரகாலச் சட்டத்தின் பாய்ச்சல்

அவசரகாலச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் அது தொடர்பாக தமிழ் மக்கள் அதிக அச்சம் கொண்டனர்.

அவசரகாலச்சட்டத்தின் மூலம் செய்யக்கூடிய எல்லா அதிகாரப் பிரயோகங்களையும் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரச படைகள் மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருகின்றன.

சிறிலங்காவில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்துவதானது நாடு தழுவிய ரீதியிலானதாக இருந்தாலும் அதனுடைய கொடூர கரங்களின் பிடியில் நெரிக்கப்படுவது தமிழ் மக்களாகவே இருந்து வருகின்றனர்.

அதாவது அவசரகாலச்சட்டமாக இருந்தாலும் சரிதான் பயங்கரவாதச் சட்டமாக இருந்தாலும் சரிதான் அது இலங்கையில் தமிழ் மக்களுக்காகவே பிரயோகிக்கப்படுவது போன்று அதன் நடைமுறைகள் இருக்கின்றன.

இதனை உறுதிப்படுத்துமாற் போன்றே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான தாக்குதலையடுத்து கொண்டுவரப்பட்ட அவசரகாலச்சட்டம் தமிழ் மக்களை இலக்கு வைத்து பிரயோகிக்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

அத்தோடு, இந்த அவசரகாலச் சட்டத்தை கருத்தில் கொண்டு சிறிலங்காவின் இனவாத அரசியல் கட்சிகளும் தமது அரசியல் பழிவாங்கலுக்காக நுணுக்கமாக பயன்படுத்த முனைவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒரு புறம் சிறிலங்கா அரச படைகள் கொழும்பிலும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து சிறையில் தள்ளுகின்ற அதே வேளை இன்னொருபுறம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற அரச சார்பற்ற அமைப்புகளின் பணியினை முடக்கும் வகையில் படைத்தரப்பு தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மன்னாரில் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தொழில் கல்வியைப் பெற்று வந்த இளம் பெண்களை கடற்படையினர் திடீரென சுற்றிவளைத்து அங்கிருந்த பதின்மூன்று பெண்களை கைது செய்துள்ளனர்.

இன்னொருபுறம் கொழும்பில் ஜே.வி.பியினர் நடத்திய பேரணி ஒன்றை படம் பிடிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் ஜே.வி.பி யினரால் புலி முத்திரை குத்தப்பட்டு கடுமையாகத் தாக்கியதோடு அவரின் ஊடக உபகரணங்களையும் அபகரித்துக் கொண்டு புலி என பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.



சனநாயகத்தைப் பற்றி பேசும் இந்த இனவாத ஜே.வி:பி கட்சியினர் தமிழ் ஊடகவியலாளரை புலி சந்தேக நபர் என பிடித்ததோடு கடுமையாகத் தாக்கியுமுள்ளனர். இது அவசரகாலச் சட்டம் ஊடாக ஜே.வி.பியினருக்கு யார் சட்டத்தை கையிலெடுக்கும் உரிமையை வழங்கினர் என தெரியவில்லை.

அத்தோடு, ஜே.வி.பி யினர் பொலிசாரிடம் ஒப்படைத்த தமிழ் ஊடகவியலாளரைமீட்கச் சென்ற குறிப்பிட்ட ஊடக ஆசிரியர் பீட பிரதிநிதிகளால் கைது செய்யப்பட்டவர் ஒரு ஊடகவியலாளர் என உறுதிப்படுத்திய போதும் அவசரகாலச் சட்டத்தை காரணம் காட்டி விடுவிக்க மறுத்துள்ளனர்.

பொலிசாரின் இந்த நடவடிக்கையானது சிங்கள இனவாதிகளை தமிழ் மக்கள் மீது தமது வன்முறைகளை பிரயோகிப்பதற்கு ஊக்குவிக்கின்ற நடவடிக்கையாகவே உள்ளது. அதாவது ஒரு கட்சி தமிழ் ஊடகவியலாளர் மீது மேற்கொண்ட வன்முறையை மறைப்பதற்காக புலி முத்திரை குத்தப்பட்டதை ஏற்றுக்கொண்டு ஜே.வி.பியினரின் வன்முறைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

> ***பொலிசாரின் நடவடிக்கை சிங்கள இனவாதி களை தமிழ் மக்கள் மீது தமது வன்முறைகளை பிரயோகிப்பதற்கு ஊக்குவிக்கின்ற நடவடிக்கையாகவே உள்ளது. அதாவது ஜே.வி.பியினர் தமிழ் ஊடகவியலாளர் மீது மேற்கொண்ட வன்முறையை மறைப்பதற்காக புலி முத்திரை குத்தப்பட்டதை ஏற்றுக் கொண்டு ஜே.வி.பியினரின் வன்முறைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.***

இதன் மூலமாக அவசரகாலச் சட்டத்தின் அடுத்த பார்வை தமிழ் ஊடகவியலாளர்கள் மீது திரும்பப்போகிறதா என்ற சந்தேகம் வலுக்கிறது.

ஏனெனில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தமிழ் ஊடகங்கள் தமிழ்மக்களின் அவலங்களை வெளிக்கொண்டுவருவதில் ஒருமித்த செயற்பாடு இருந்து வருவது அரசை பல அசௌகரியங்களுக்குள் உட்படுத்தி வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனால், சர்வதேச ரீதியாகவும் அரசு நேரடியாக பல அழுத்தங்களை சந்திக்க வேண்டியிருந்தது.

இந்த நிலையில்தான் அரச படைகள் தமது கைகளில் கிடைத்த இந்த அவசரகாலப் பிரகடனம் என்ற கோடரியை பலமாக தமிழ் ஊடகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் மீது பிரயோகிப்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படாதவரை இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிதீவிரம் பெறப்போகின்றன.

ஆனால் இச்செயற்பாடானது அரசு நினைப்பதற்கு மாறாக எதிர்மறையான பலனையே அரசுக்குக் கொடுக்கப்போகிறது.

புகழூன்

# போகாத ஊருக்குக் காட்டப்படும் வழி

**நடைபெறவுள்ள பேச்சுக்கள் தற்போது நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையினை (mou) செம்மையாக அமுல்படுத்துவது பற்றியதே அன்றி வேறொன்றுமல்ல. அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மீளத்திருத்தி அமைப்பதற்கானதல்ல**

புசத்தியமூர்த்தி

தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும் சிறிலங்கா அரசுக்குமிடையே மீண்டு மொரு முறை நேரடிப் பேச்சுக்கள் நடைபெற வுள்ளதாக பரபரப்பாகத் தகவல்கள் வெளி வந்தவண்ணமுள்ளன. இது குறித்து உத்தியோகபூர்வமற்ற முறையில் தகவல் கள் வெளிவரத் தொடங்கியதுதான் தாமதம், ஊடகங்கள் ஆகா, ஓகோ என இதனைப் பெரிது படுத்தி செய்திகள், ஊகங்கள், ஆய்வுகள் என்பவற்றை வெளியிடத் தொடங்கிவிட்டன. அதன் பின்னர் தான் தெரி விக்கப்பட்டது, நடைபெறவுள்ள பேச்சுக்கள் தொடங்கவும் தொடரவும் அடிப்படைகளாகும.

இதை இப்போது சொல்லுவதற் கான தேவை என்ன? ஒரு 'நல்ல காரியம்' தொடங்கும்போது 'முழுவியளத்துக்கு ஆகாத' மாதிரி முன்னுக்கு நின்று 'ஏனடா பல்லி சொல்லுறாய்'? என்று கேட்கிறீர்களா?

அங்கேதான் இருக்கிறது விடயம். இந்த வாரத் தொடக்கத்தில் நோர்வேத் தரப்பால் வெளியிடப் ப்றியிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக் கை யின் ஆயுளையும் முடிவுக்குக் கொண்டு வந்து யுத்தத்துக்குச் செங்கம்பளம் விரிப்பதாக அமைந்துவிடுமென்பது நோர்வே யின் கணிப்பாகும்.

இந்த விடயத்தில் சிறிலங்கா





அரசின் நிலைப்பாடும் எதிர்பார்ப்பும் இதற்கு எதிரான திசையிலேயே அமைந் துள்ளது வெளிப்படையானது. இலங்கை இனப்பிரச் சினை விடயத்தின் துரதிர்ஷ்டமும் இதுவே. ஏனெனில் சிறி லங்காவின் சிங் களப் பேரினவாத அரசியற் தலை வர்களும் அவர் களை அண்டிப்

ரீதியான மதிப்பைத் தகர்த்துச் சிதைத்து அதற்கு, மறுதலையாக அவர்கள் மீது சர்வதேசச் சமூகத்துக்கு அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி புலிகளுக்கான சர்வதேசச் சூழலை நிர்ப்பந்தங்களால் பின்னுவதாகும்.

புதிய வெளிநாட்டமைச்சரை நிய மிக்கும் விடயத்தில் புலிகளை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தக்கூடிய ஒரு வரையே சிங்கள அரசு தேடியது பற்றிய செய்திகள் வெளியாகியிருந்தன. இதற் காகவே புலியெதிர்ப்புப் பிரசாரத்துக்காவே ஆனந்த சங்கரியை அப்பதவிக்கு அமர்ந்த வேண்டுமென பல குரல்கள் எழுந்திருந்தன. இப்பதவிக்கான அடுத்த நபராக அடிபட்ட பெயர் சிறிலங்காவின் உயர்நிலை இராஜதந்திரிகளில் ஒருவரும் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளருமான ஜயந்த தனபாலவுடையதாகும்.

இவருடைய மெய்க்கீர்த்தி மிகப் பெரியது. புலிகளை அமெரிக்கா தடை செய்ததானது முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் தனிப்பட்ட 'சாதனை' என அவராலேயே உரிமை கோரப்பட்டாலுங் கூட அதனைச் "சாதித்தவர்" உண்மையில் ஜயந்த தனபாலவே. ஐக்கிய நாடுகள் சபையின் உயர்நிலைப் பதவியொன்றை வகித்த தனபால அமெரிக்காவில் இருந்தபடியே இதனைத்திரைமறைவில் நிகழ்த்தி முடித்திருந்தார்.

ஆனால் இவரை அமைச்சராக்கு வது தேர்தல் சட்டங்களின் படி இடர்பாடுகள் நிறைந்ததாகையாலும் இன்ன பிற காரணங்களாலும் அநுரா பண்டார நாயக்கா அப்பதவியைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆக முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் மரணத்தின் பின்னான சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு புலிகளை இராஜதந்திர ரீதியாக ஒடுக்கவே சிறிலங்கா அரசு முற்படுகிறது. அதன் ஒரு பகுதியாகவே புரிந்துணர்வு உடன்படிக் கையைப் பூரணமாக அமுலாக்குவது பற்றிய பேச்சுக்களையும் அது கையாள முனைகிறது.

தற்போது நடை முறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையினை (mou) செம்மையாக அமுல்படுத்துவது பற்றியதே அன்றி வேறொன்றுமல்ல. அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மீளத்திருத்தி அமைப் பதற்கானதல்ல இந்தப் பேச்சு என்பதே இதனுடைய பொருள்.

ஆனால் பல்வேறு தரப்புக்களிலி ருந்தும் இந்த உத்தேசப் பேச்சுக்கள் பற்றி மிகுந்த எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட் டுள்ளன. இதிலிருந்து கட்டியெழுப்பப்படும் நம்பிக்கை, ஊடாட்டம் என்பவற்றுக்கூடாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பமாகும் என 'அழகிய கனவுகளை' உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் சிலர். உண்மையான கள நிலவரம் என்ன வாக இருக்கிறது?, பேச்சுக்களில் முகத் துக்கு முகமாக அமர்வதற்கும், அவ்வா றான பேச்சுக்களில் சுமுகமான சூழல் நிலவுவதற்கும் அடிப்படையான நிபந்தனை என்ன? பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்புக்களுமே பரஸ்பரம் மறுதரப்பி னரைக் கண்ணியப்படுத்துதல் என்பதே. இரு தரப்புக்களுக்குமிடையே நம்பிக்கையை உருவாக்கி அதன்விளைவாகப் பேச்சு மேசையில் துணிவான தீர்மானங்களை எட்டுவதற்கான தூண்டுதலைத் தரும். ஏனெ னில் தாம் முன்வைக்கும் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்ற நம்பிக்கையும், பேச்சுமேசையில் எட்டப்படும் முடிவுகள், தீர்மானங்கள் அதேஅர்த்தத்தில் நடைமுறைக் கிடப்படும் என்ற திடமுமே பேச்சுக்கள்

பட்டதாகக் கூறப்படும் கருத்தொன்று இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மிக முக்கியமானதாக விளங்குகிறது. சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் மரணத்தின் பின் ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக் கத்தைத் தடை செய்ய சிறிலங்கா அரசாங் கம் எடுத்துக்கொண்ட இராஜதந்திர

**பு.சத்தியமூர்த்தி**

முயற்சிகளை நோர்வே கண்டித்திருப்ப தோடு தமது அதிருப்தியையும் தெரிவித் திருப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு செய்வது எதிர்காலப் பேச்சுக்களுக்கான பாதையை அடைத்து விடும் என்பதை நோர்வே சுட்டிக்காட்டியுள்ள தாகவும் தெரியவருகிறது. விடுதலைப்புலி கள் இயக்கம் தடை செய்யப்படுவதானது எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான ஏதுக்களை இல்லாமற் செய்வதோடு; தற்போது தொத்துப்

பிழைக்கும் சிறுபான்மையின அரசியல் வாதிகளும் எப்போதுமே 'போகாத ஊருக்கு வழி தேடுபவர்களாகவே' இருந்தனர், இருக் கின்றனர்.

அவ்வாறில்லாவிடில், புரிந்துணர்வு உடன்பாட்டின் செயற்படுத்துகை பற்றிப் பேசவேண்டுமென சமாதான ஏற்பாட்டாளர் களூடாக ஒரு பக்கம் தகவல்களை அனுப்பிக்கொண்டே, மறுபுறம் தாம் யாருடன் பேசவேண்டுமென முயற்சி எடுக்கிறார் களோ அவர்களைத் தடைசெய்யும்படியான இராஜதந்திரக் கோரிக்கைகளை மேற்குலகிற்கு விடுத்திருக்குமா சிங்கள அரசு?

இதனுடைய உள்ளர்த்தம் என்ன வெனில் விடுதலைப்புலிகள் மீதான சர்வ தேச அழுத்தத்தை உச்சநிலையில் உருவாக்கி வைத்துக்கொண்டே அவர்களு டன் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் புலிகள் மீது தமது அரைவேக் காட்டுப் 'பொதிகளை' திணித்துவிடலாம் என்பதே. அதாவது புலிகளுக்கு உள்ள சர்வதேச

ஆனால் சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரின் மரணம் தொடர்பான விசாரணைகளின் ஆரம்பகட்ட "ஆர்ப்பாட்டங்கள்" முடிந்துவிட்ட நிலையில் 10 நாட்கள் கடந்தும் விசாரணையில் திருப்பமேதும் ஏற்படவில்லை எனப் பொலிஸ் அதிகாரிகள் சலித்துக்கொள் வதாகத் தகவல்கள் வந்துகொண்டி ருக்கின்றன. அதாவது அவரது மரணத் துக்குக் காரணமானவர்கள் குறித்து இன்னும் எதுவுமே கண்டறியப்படாதநிலையிலே சிறிலங்காவின் பொலிஸ் திணைக்களம் உள்ளது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத் தரப்போ மரணம் சம்பவித்து அடுத்த நிமிடமே புலிகள் மீது கையை நீட்டிவிட்டது.

இந்த அணுகுமுறைகள் அனைத் துமே வெளிக்காட்டுவது என்ன? இவர்கள் போகாத ஊருக்கு வழிகாட்டுகிறார்கள் என்பதோடு பிறக்காத குழந்தைக்குப் பெயரும் சூட்டுகிறார்கள் என்பதே.



# உலகத்தின் கண்களில் பலஸ்தீனியர்களின் நம்பிக்கை

**யூத ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலை உலக ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கும் பொருத்தமானதாகும். தமிழர்களின் வாழ்விடங்களையும், பூர்வீக குடியேற்றங்களை திட்டமிட்ட குடியேற்ற சிந்தனையினால் தகர்த்த சிங்கள பெரும் பான்மையினரும் இத்தகைய துயரத்தை ஒருநாள் சந்திப்பார்கள். கல்லோயா முதல் மணலாறுவரை நிரந்தரக் குடியேற்றங்களை கடந்த ஐம்பது ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் சிங்கள பெரும்பான்மையினர் யூதர்களைப் போன்று விலகவேண்டிய சூழல் ஏற்படும்.**

காஸாப் பகுதியிலிருந்து யூதக்குடியேற்றவாசிகள் வெளியேற்றப்படும் நிகழ்வு விசித்திரமான அரசியலாக காட்சிப்படுத்தப்படுகிறது. இஸ்ரேலிய அரசாங்கம் எதிர்கொண்டிருக்கும் மிக நெருக்கடியான சவாலாகவே தெரிகின்றது. ஏறக்குறைய முப்பது (30) ஆண்டுகளுக்கு முன்பு குடியேற்றப்பட்டவர்களும் மிகப் பிந்திய காலப்பகுதியில் குடியேற்றப் பட்டவர்களும் அகற்றப்படும் செயல் காட்சிப்படுத்தல் ஊடகத்தின் முன்பு அதிருப்தியையும், நெருடலையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது. காஸாப் பகுதியில் ஒரு பக்கம் துயரத்துடன் யூதர்கள் போராட மறுபக்கத்தில் பலஸ்தீனர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். காட்சி ஆக்கிரமிப்பாளர்களுக்கு அதிர்ச்சியானதாகவே அமையும். காஸா வெளியேற்றம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாட்டை அடி என்றே கூறலாம். அதனை சற்று விரிவாக அவதானிப்போம்.

யூத ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலை உலக ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கும் பொருத்தமானதாகும். தமிழர்களின் வாழ்விடங்களையும், பூர்வீக குடியேற்றங்களை திட்டமிட்ட குடியேற்ற சிந்தனையினால் தகர்த்த சிங்கள பெரும்பான்மையினரும் இத்தகைய துயரத்தை ஒருநாள் சந்திப்பார்கள். கல்லோயா முதல் மணலாறுவரை நிரந்தரக் குடியேற்றங்களை கடந்த ஐம்பது ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் சிங்கள பெரும்பான்மையினர் யூதர்களைப் போன்று விலகவேண்டிய சூழல் ஏற்படும்.

ஏற்கனவே மணலாற்றை விட்டு ஓடியவர்கள் மீண்டும் அப்பகுதியில் குடியேறியிருந்தாலும் மீண்டும் அகல வேண்டிய காலம் தவிர்க்க முடியாதது என்பதை காஸா வெளியேற்றம் காட்டியிருக்கிறது.

பலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டம் தோற்று போனாலும் அவர்களின் ஆயுதப் போர் முடிவுக்குவந்தாலும் காஸா நம்பிக்கையை மீளவழங்கியுள்ளது. அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்த யூத ஆட்சியாளர்கள் போராட்ட இயல்பை மாற்றிக் கொண்ட போதும் காஸா விடுதலையின் முதல்படியென அவர்கள் கருதுகின்றனர். பலவீனமான நிலையில் காஸா அவர்களுக்கு நம்பிக்கையை வழங்கியுள்ளது. பாதுகாப்பான அரசியலாகாது விட்டாலும் யதார்த்தம் அதுவாகவே தெரிகின்றது.




பலஸ்தீனர்களின் வரலாற்றில் இது ஒரு புதிய சகாப்தம் என்றே கூறவேண்டும். தங்கள் நிலம் தங்களிடம் மீளவும் கிடைத்ததை நினைவு கோரும் பலஸ்தீனர்கள் உலகத்தின் கண்களுக்குள் புதிய மணிகளை விதைத் துள்ளனர். ஆக்கிரமிப்புயுகம் எப்படியாயினும் தனது விலையை தானே தீர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதாகும். இதனால் ஆக்கிரமிப்புச் சக்திகளை நோக்கிய தாக்குதலும் அரசியல் யுத்திகளும் தீவிரம் பெறுவதோடு ஆக்கிரமிக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு உற்சாகம் தரவல்ல நிகழ்வாகவும் அமைந்துள்ளது.

வெறுமையும் ஆயுத மற்ற அரசியலையும் பிரயோகிக்கும் ஒரு தேசிய இனம் சாதித்த எல்லையை ஆயுதப் போரினால் சாதிக்கமுடியாதது என்பதல்ல. நிச்சயமாக ஆயுதம் ஏந்தியுள்ள தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள இனங்கள் ஒவ்வொன்றும் விடுதலையையும் ஆக்கிரமிப்பு சக்திகளிடமிருந்து பிரதேசங்களையும் வென்றெடுக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பலஸ்தீனர்கள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டதுடன் அமைப்புசார்ந்த போராட்ட உத்தியை மறந்திருந்தபோதும் போராட்டத்தை கைவிடவில்லை. கற்களாலும், தடிகளாலும் எதிர்ப்புப் போராட்டங்களாலும் தொடர்ந்து போராடிவந்தனர். யசீர்அரபாத்தும் அவரது PLO வும் ஆயுதரீதியில் போராட தயங்கியதோடு ஆயுதமற்ற அல்லது திணறடிக்க முடியாத சூழல் ஏற்பட்டதே அன்றி பலஸ்தீனர்களால் போராட்டம் நிகழ்த்தப்பட்டேவந்தது. மறுபக்கத்தில் தற்கொடைத் தாக்குதலின் வேகம் மிக நேர்த்தியாக இலக்குத் தவறாது தொடர வாய்ப்புக்கிடைக்கவே இவை இரண்டும் பலஸ்தீனமக்களின் அடைவுக்குக் காரணமாகும். இதனை புரிந்துகொள்ள மேலும் சில விடயங்களைப் பார்ப்போம்.

அண்மையில் அமெரிக்காவில் இரண்டு ஆய்வாளர்கள் தற்கொடைத் தாக்குதல் பற்றி சில ஆய்வுகளை மேற்கொண்டனர். அதில் 30 சதவீதமான தரவுகள் இலங்கைத்தமிழர்களின் தற்கொடைத் தாக்குதல் பற்றியதாகவே அமைந்திருந்தது. அவ்விருவரது ஆய்விலும் கண்டறியப்பட்ட விடயம் யாதெனில் தற்கொடைத் தாக்கு தல் என்பதெல்லாம் உலகம் கூறுவது போல் பயங்கரவாத நடவடிக்கையும் அல்ல. அவர்கள் வறியவர்களோ அல்லது வன்முறை இயல்புடையவர்களோ அல்ல என்றும் அவர்கள் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராகவே 99 சதவீதமான தாக்குதலும் நிகழ்த்தப்படுகின்றது என்பதாகும். அத்தகைய தாக்குதலுக்கு வலுவான காரணம் ஆக்கிரமிப்பு என்பதை மறுக்கமுடியாது. அதனால் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை விலக்கிக கொண்டால் இயல்பாகவே தற்கொடைத் தாக்குதல்கள் முடிவிற்குவரும் எனக் கூறுகின்றனர்.

அவர்கள் அமெரிக்காவுக்கு ஆலோசனை கூறமுயன்ற போதும் உலக ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும் பொருத்தமானதாகும். ஈராக்கிலிருந்து படைகளை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனர்களுக்கு நூறு வீதமான வெற்றியாக இல்லாது விட்டாலும் யூதர்களுக்கு நூறுவீதமான இழப்பாகும். ஏனெனில் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்ற வகையில் ஆக்கிரமித்த நிலத்தை விட்டு விலகுதல் என்பது அதுவும் யு,தாகள் விலகுவதென்பது அதிர்ச் சியான விடயமேயாகும்.

ஆனால் ஆக்கிரமிப்பு நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களான யூதர்கள் எத்தனை துயரத்துடன் விலகுகிறார்கள். அவர்கள் தமது இராணுவத்தை எப்படி எதிர்கொள்ள முயலுகின்றார்கள் என்பதை பார்க்கும் போது வாழ்விடம் தாயகம் என்பதன் அர்த்தம் விளங்கப்படுவதுடன் பிடுங்க முடியாத உறவு என்பதையே காட்டுகின்றது.

செவ்வாயிலும், சந்திரனிலும் மனிதன் நிலத்தை கூறுபோட்டு விற்பனை செய்யுமளவுக்கு வளர்ந்தாலும் பூமியுடன் அதாவது நிலத்துடன் கொண்டிருக்கும் உறவு எவ்வளவு அற்புதமானதென்பது தெரிகின்றது. நிலத்தோடு மனித பிணைக்கப்பட்ட வாழ்வு மிக நீண்ட லட்சக்கணக்கான ஆண்டுகளைக் கொண்டது. அத்தகைய மனித வரலாறு பலஸ்தீனர்களுக்கும், யூதர்களுக்கும், தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் பொதுவானது என்பதை மறுக்க முடியாது.

பலஸ்தீனர்களைப் போன்று தமிழர்களின் வாழ்வும் அரசியலும் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளது. இவ் ஆக்கிரமிப்பின் எல்லைகள் தடுத்து நிறுத்தப்பட்ட போதும் இன்னும் லட்சக்கணக்கான மக்கள் ஆக்கிரமிப்புப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இத்தகைய ஆக்கிரமிப்பு நிலத்தோடு முற்றாக பிடுங்காதுவிட்டாலும் காலப் போக்கில் அதற்கான சூழலையே ஏற்படுத்தும். எனவே ஆக்கிரமிப்பு நடவடிக்கை எதனையும் தமிழர்கள் எதிர்த்துப் போராடவேண்டிய நிர்ப்பந்த அரசியலின் பயன்பாடு காஸாவின் தெரிவாக உணர்த்தப்பட்டுள்ளது. தமிழர்கள் வாழ்ந்துள்ள பிரதேசத்தை ஆக்கிரமித்த சக்திகளை விரைவில் அகற்றமுடியும் என்பதையே காஸாச் சம்பவம் உணர்த்தியுள்ளது.

எனவே ஆக்கிரமிப்பு

ஐங்கரன்

என்பது மீளளிக்க வேண்டியதென்பது காஸாவில் யூதர்கள் கற்ற பாடமாகும். யூதர்கள் தந்திரோபாயமாக நகர்த்தினாலும் அவர்களின் அகண்ட யூத இராட்சியம் என்ற கனவு தகர்ந்து விட்டது. அவ்வகையான யூத இராட்சியத்தை அமைக்க முடியாத நிலையை நிர்பந்தம் ஏற்படுத்தியதுடன் ஆக்கிரமிப்பாளர்களுக்கான எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது. சர்வதேச நாடுகளில் அனுபவங்களில் அடங்கும் புதிய விடயமாக காஸாச் சம்பவம் அமைந்திருக்கின்றது.

# நாரந்தனைக் கிராமம் மீண்டும் மிளிருமா?

**தீவகம்** பல செழிப்பான சிற்றூர்களையும் தீவுக்கூட்டங்களையும் கொண்ட பரந்த பிரதேசம். தீவக மக்களையும் அவர்களுடனான தொடர்புகளையும் யாழ் நகருடன் இணைக்கின்ற பெரும் பணியை பண்ணைப் பாலம் செயலாற்றி வருகின்றது. இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்ட தீவகத்தின் அநேக பகுதிகளில் 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மக்கள் இல்லை. தம் வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் அதனை அண்மித்த இடங்களில் குடியேறினர். இன்றுவரை முழுமையாக தம் வாழ்விடங்களிற்கு இவர்கள் திரும்பவில்லையென்பது கசப்பான உண்மை.



புத்திஜீவிகள், கல்வியாளர்களிற்கு அப்பால் பெருமளவான விவசாயிகளையும் பெரும் பயன்தரும் விவசாய நிலங்களையும் கொண்டமைந்த தீவகம் 1985 ஆம் ஆண்டுடன் தன் தனித்துவத்தை தொடர்ச்சியாக இழக்கத் தொடங்கி ஒரு தசாப்தத்திற்குள் பல நெருக்கீடுகளிற்கு உள்ளாகி தன் அடையாளத்தை இழந்தது.

இந்திய இலங்கை இராணுவங்களின் ஆக்கிரமிப்பு அடாவடித்தனங்களிற்கு தீவக மக்கள் மட்டுமன்றி வளம் கொழிக்கும் விவசாய நிலமும் உட்பட்டது. விவசாய நிலங்கள் பயன்படுத்தாமல் தரிசாக விடப்பட்டன. பல நிறுவனங்கள், கல்வியாளர்கள், உறவுகள், உறைவிடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினர். இடம்பெயர்ந்து 15 வருடங்களாகியும் போர் ஓய்ந்து 3 வருடங்கள் கடந்தும் கூட தீவகத்தின் பல கிராமங்கள் அடிப்படை வசதி வாய்ப்புகள் ஏதுமின்றியுள்ளன. சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் வாழ் விடங்களில் தமக்கான பாதுகாப் பான இடம் என்ற போர்வையில் தஞ்ச மடைந்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாரந்தனை மூன்றுகிராம சேவையாளர் பகுதிகளாக பிரிக்கப்பட் டுள்ளது. கே. 55, 57 இலக்கங்களையுடைய கிராமங்களின் இன்றைய நிலை தொடர்பாகவே இங்கு நோக்கப்படுகிறது. இருளில் மூழ்கியுள்ள இக்கிராமங்களிற்கான வீடுகளும், வீதி களும்,விவசாய நிலங்களும் பாவனையின்றி தன்நிலை இழந்து கிராமங்களிற்கான அடையாளங்கள் இழக்கப்பட்டு வருகின்றன.



"என்ன இங்கால இருக்க வரப் போறியளோ...? இல்ல வீட்ட ஒருக்கா பார்த்திட்டுப் போவமெண்டு. எங்கட இடம் எப்ப தான் பழைய நிலைக்கு வருமோ. நாங்கள் எங்கட அடையாளத்தைச் துலைச்சிட்டு வேற இடத்தில இருக்கேக்க யார்... தான்" (இச்சம்பாசனை இக்கட்டுரைக்கான தகவல்களை சேகரிக்கும் போது ஊரவர்களில் இருவர் பரிமாறியவை)

மேற்படி பகுதிகளில் 50% மானவர்கள் இன்னமும் மீள் குடியமரவில்லை. இவர்கள் தம் சொந்த நிலங்களைவிட்டு வேறு இடங்களில் இருந்தபோதிலும் மீள் குடியமராமைக்கான காரணங்களை முன் வைக்கின்றார்கள்.



அரச தனியார் வேலை வாய்ப்பு, கல்வி வியாபாரம், இராணுவ ஆக்கிரமிப்பும் நெருக்கீடும் எனத் தொடர் கின்றன. சொந்த இடங்களிற்கு திரும்பாமைக்கான காரணங்களாக அடிப்படை வசதி வாய்ப்புக்களைக் கூட முழுமையாக அனுபவிக்க முடியாதவர்களாகவே இங்குள்ளவர்கள் உள்ளனர். இதனால் இடம்பெயர்ந்த மக்கள் உறவினர் நண்பர்களது வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலுமாக தமது வாழ்க்கையை நகர்த்துகின்றனர். அநேகர் யாழ் நகரையும் அதனை அண்மித்த பகுதிகளிலுமே உள்ளனர்.

சீரான வீதி, போக்குவரத்துவசதி, மின்சாரம், போதிய கல்வி, மருத்துவ வசதி, தொழில் வாய்ப்புகள் என இவற்றை எதிர்பார்த்திருக்கின்றனர். இக்கிராம மக்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் உரிய முறையில் பங்கிடப்படுவதில்லை. விவசாயக் காணிகள் தரிசாகுவதும், வீடுகள், பொது இடங்கள், வீதிகள் தூர்ந்து போய்க் கிடப்பதுடன் பயன்படுத்த முடியாத நிலையில் முட்புதர்கள் நிறைந்துள்ளன. இவற்றில் கால் நடைகளின் நடமாட்டமே காணப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் மீள்குடியமர்ந்தவர்களிற்கு 25000/= பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அரச சார்பற்ற நிறுவனத்தால் வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டதாகவும் மக்கள் விபரிக்கின்றனர். நாங்கள் கூலித்தொழிலாளர்கள் எங்களிற்கு நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. வசதியான ஒரு சிலர் நிவாரணம் பெறுகின்றனர். உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. ஆனால் சேதமடைந்த, அழிவடைந்த சொத்துக்களிற்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கும் இதுவரை எதுவித உதவியோ நஷ்டஈடோ வழங்கப்படவில்லையென மக்களின் குமுறல்கள் தொடர்கின்றன.

தீவுப் புகையிலை என்றால் இலங்கையின் எப்பாகத்திலும் விற்பனை செய்யலாம் என்ற நம்பிக்கைக்கு அப்பால் புகையிலைப் பயிர்ச்செய்கையினாலேயே புகழையும் சிறப்பையும் பெற்றது தீவகம். கார்த்திகை என்றவுடன் தீவக மக்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குவர். தொடர்ந்து சித்திரை மாதம் புகையிலை வெட்டும் வரை ஒரே கலகலப்பான கடின உழைப்பாகவே இருக்கும், தொடர்ந்து ஒரு இரு மாதங்கள் என எங்கும் புகையிலை மயமாகவே இருக்கும்... ஆனால் இவை கடந்த 15 வருடங்களிற்கு முற்பட்டவை. இன்று இவற்றின் ஒரு பகுதியே இடம்பெறுகின்றது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வலம்புரி இராணுவ நடவடிக்கையினால் சொத்துக்கள், சொந்தங்களை இழந்து இடம் பெயர்ந்தவர்களாக நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளில் தங்கினர். 1999 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில குடும்பங்கள் மட்டும் மீள் குடியேறின. இன்னும் சிலர் 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீள் குடியேறியுள்ளனர். இங்கிருந்த மக்கள் தொகையில் 50% த்திற்கும் குறைவானவர்களே இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சொந்த வீடுகள் பொலிவிழந்திருக்க வாடகை வீட்டில் இருக்கின்ற நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கிராமசேவையாளர் என இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தே தமது கடமைகளிற்கு செல்கின்றனர். இதிலிருந்தே நாரந்தனை வடக்கு வாழ் மக்களின் நிலையை உணர்ந்து கொள்ள முடியும். கிராம சேவையாளர் யாழ்ப்பாணத்தில் இருந்து தமது கடமைக்குப் போய் வருவதினால் மக்கள் அவசர தேவைகளை உரிய நேரங்களில் நிறைவேற்ற முடியாமல் அவதிப்படும் சம்பவங்களும் அடிக்கடி இடம் பெறுகின்றன.

**இரா-வின்**

நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, நாரந்தனை கணேசா வித்தியாலயம் இவற்றில் க.பொ.த சாதாரண தரம் வரையே கற்க முடியும். உயர்தரம் கற்க விரும்பினால் ஊர்காவற்றுறை அல்லது யாழ்ப்பாணம் போகவேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் இல்லை. இரவு நேர கல்வியோ வேறு சில மேலதிகக் கல்வி வாய்ப்புக்களோ இல்லை. மாணவர்களில் கல்வி கற்பவர்களைவிட இடைவிலகியவர்களே அதிகம். போதிய வழிகாட்டல்கள் கல்வித் தூண்டல்கள இன்மையும், குடும்ப வறுமையும் இளவயதுத் திருமணங்களுமே இடைவிலகலிற்கான காரணங்களாகவுள்ளன.

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையும் தனியார் பேருந்துகளுமே சேவையை வழங்கினாலும் அவை போதுமானதாக இல்லை. பண்ணைச் சந்தியில் இருந்து ஊர்காவற்றுறை வரையான (பேருந்து சேவை 777) றோட் போடப்பட்டதில் இருந்து புனரமைக்கப்படாமல் இருந்ததே அதிகம். ஒரு புறத்தில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றால் மறுபுறத்தில் வீதியில் குழிகள் தோன்றிவிடும். இந்நிலையே தொடர்கின்றது. பண்ணைப் பாலமும் அடிக்கடி சேதமடைவதும் புனரமைப் பதுமாகவே உள்ளது. இதைவிட கிராமங் களிற்கான உள்வீதிகள் புனரமைக்கப்பட்டு 25 வருடங்களிற்கு மேல் எனக் குறிப்பிடும் மக்கள் தார் போட்டு செப்பனிட்ட அடையாளத்தையே வீதியில் காணவில்லையென சுட்டிக் காட்டுகின்றனர் வேதனையுடன்.

இரவில் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே. மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதுவும் பிரதான வீதிக்கு மட்டுமே. உள்ளே இருப்பவர்கள் இருட்டில் தான். (பண்ணைச் சந்தியில் இருந்து மண்கும்பான் வரையான பகுதியிலுள்ள காவலரண்களிற்கு 24 மணிநேரமும் வழங்கப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது) ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையே இவர்களிற்கும் தஞ்சம். ஆனால் நோய்களிற்கு பெரும்பாலும் யாழ் போதனா வைத்தியசாலைக்கே போக வேண்டும். சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகள், கருத்தரங்குகள் இடம் பெறுகின்றமை பருவ காலத்தில்தான். விளையாட்டு நூலகப் பொழுது போக்கு வசதிகள் எவையும் இல்லை.

இந்தக் கிராமம் சகல வழிகளிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கிராமத்தை புனரமைத்து புதுப் பொலிவுடன் மிளிர வைக்க அரச அதிகாரிகளோ, அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளோ தான் முன்வர வேண்டுமென்பதில்லை. முதலில் சொந்த நிலங்களை ஒவ்வொரு குடும்பங்களும் புனரமைக்கும் போது கிராமம் புனரமைக்கப்படும். அதன் பின்னர் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளலாம்.

தம் அடையாளத்தை கலைத்து பிறிதொரு இடத்தில் அடையாளத்தை தேடுபவர்களாக தீவக மக்களில் அநேகர் உள்ளனர். கூலிவேலையும் குடும்பச்சுமையுமென இருப்பவர்களும் நடுத்தர குடும்பங்களும் கல்விச் சமூகமும் சிந்தித்து சமூக மாற்றத்திற்கான தேடலை மேற்கொள்ள வேண்டும். ஒரே சமூகக் குழுமமாக ஒன்றிணைந்து தமது நிலைமைகளையும் தமக்கும் தம் கிராமத்திற்கும் தேவையானவற்றை ஒரே குரலில் வெளிப்படுத்த வேண்டும்.

தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை உருவாகிறார்கள். கிராம ரீதியான விழிப்புணர்வுச் செயற்பாடுகளிற்கு தன்னலமற்ற தலைமைத்துவம் வேண்டும். தலைமைத்துவம் முன்வரும் போதே தேவைகள் முன்மொழியப்பட்டு கிராமப் புனரமைப்பு அபிவிருத்திக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும். இவை இடம் பெற இன்னும் எத்தனை வருடங்கள் தான் எஞ்சியிருப்போர் காத்திருப்பதோ. நாரந்தனை நாகரிக மாற்றத்திற்கோ நவீன மாறுதலிற்கோ உட்பட வேண்டியதில்லை. தனக்கான தனித்துவத்துடன் மிளிர வேண்டும். சம்பந்தப்பட்டோர் கை கோர்ப்பதன் மூலம் இதனை செயற்படுத்தலாம்....

# காரசாரம்

## நாட்டின் அபிவிருத்திக்கு எங்களை அர்ப்பணிக்க வேண்டும்

***எம் மண்ணின் ஓரங்குல நிலமும் பயனற்றுப் போகாமல் எப்போது விவசாயத்துக்குப் பயன்படப்போகிறது. செய்கை பண்ணாமலே எந்த இலக்குக்கு உரியதென வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு அப்பால் அவை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன• கேள்விகள் அனைத்துக்கும் உழைப்போர் முன்வராமையே காரணம். கண்ணுக்கு அப்பால் எங்கோ ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு, அல்லது எமக்குக் கிடைக்கும் பணத்துக்கு எவ்வளவு கரிசனையாக வேலை செய்கிறோம். அதையே எங்கள் நாட்டுக்குச் செய்ய ஏன் முன்வருகிறோமில்லை.***

ஒரு காலத்தின் கட்டளையாக கேளிக்கைகளிலிருந்து ஒதுங்கி, எப்போதும் ஒரு மனநிலை இறுக்கத்துடன் வாழ்ந்தவர்கள் வன்னி மக்கள். கிழக்கில் இதைவிட மோசமான நிலை இன்றும் உள்ளது. இன்னமும் திருத்தப்படாத வீதிகள், போக்குவரத்து வசதிகளற்ற கிராமங்கள், வேலை வாய்ப்புகளற்ற மக்கள்குழு, உற்பத்திகளைக் கைவிட்ட தரிசு நிலங்கள் தேங்கித்தான் உள்ளன.

ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு காரணம் சொன்னாலும், பல இலட்சக் கணக்கான இளைஞர் தொகையைப் பட்டியலில் வைத்திருந்தாலும், எம்மிடம் உழைக்கும் வலுவுள்ளவர்கள் இப்போது இல்லை என்பது மனவருத்தத்துக்குரிய ஒன்றுதான்.

முன்னெல்லாம் பெண்கள் கூட செய்ய முடிந்த செய்து வந்த வேலைகளை ஆண்கள் செய்யமுடியாது என்பதை எண்ணும்போது நாடு எங்கே போகிறது. என்ற வேதனை எழத்தான் செய்கிறது.

அண்மையில் ஒரு பலசரக்குக் கடைக்கு மா மூட்டைகள் வந்திருந்தன. ஒரு கனரக வாகனத்தில் வந்திருந்த அந்த மூட்டைகளைக் கடைச்சிப்பந்திகள் எவரும் இறக்க முன்வரவில்லை. காரணம் "எங்களால மாமூட்டை இறக்கேலா வேற ஏதுமெண்டாச் சொல்லுங்கோ."

மா மூட்டை இறக்கினால் உடலில் உடையில் மாபடியும். பார்ப்பவர்கள் மூட்டை இறக்கினாயா என்று கேலி செய்வார்கள் என்பதா அல்லது இயலாதா என்றால் இரண்டும் தான் என்ன வெட்கக்கேடு.

இதேசமயம் வயது முதிர்ந்தவர்கள் ஒரு கொழுக்கியும் கையுமாக ஓடியோடி மூடை சுமப்பதை சந்தையில் காணலாம். அதுவும் மொத்த வியாபாரம் நடக்கும் பகுதியிலிருந்து கடைவரை சுமந்து கொண்டு நடக்கிறார்கள். இளைஞர்களுக்கு இயலாமை எங்கிருந்து வந்தது.

நகரில் கோழித்தீன் விற்கும் கடையொன்றிற்கு தெற்கிலிருந்து கோழித்தீன் மூடைகள் வந்திருந்தன. அதை ஏற்றி வந்த வாகனம், காலை ஒன்பது மணியிலிருந்து மூடைகளை இறக்குவதற்காக கூலியாட்கள் இல்லாமல் நின்றது. சுமார் ஒரு மணிவரை ஆட்கள் வரவில்லை. பின்னர் என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

சில நேரங்களில் முக்கியமான வேலைகளைச் செய்ய இளைஞர்கள் முன்வருவதில்லை. போலிக் கௌரவத்தை எண்ணிக்கொண்டு இதுமாதிரி வேலைகளைச் செய்வதால் ஆடையில் அழுக்குப் படிந்துவிடும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

விவசாயத்திலேயே தங்கியுள்ள எங்கள் மண்ணில்தான் ஒரு விவசாயி என்று கூறும் இளைஞர்களை விரல்விட்டு எண்ணவேண்டியுள்ளது. ஒருகட்டடத் தொழிலாளியின் கையாளராகவோ மரத்தளபாடத் தொழிலாளியின் உதவியாளராகவோ இருப்பதை யாரும் பெருமையாகச் சொல்லவில்லை. கூலி வேலையாட்களின் பற்றாக் குறையை நன்கு பயன்படுத்தும் ஒரு சிலர் அமோகமான வருமானத்தைப் பெற்றாலும், முடாக்குடியர்களாகக் குடித்தழிக்கிறார்கள்.

சகல இளைஞர்களும் முன்வந்து உடலுழைப்பைச் செய்வதில்லை. உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்காக பெருஞ்செலவில் உடற்பயிற்சி, நடைப் பயிற்சி, ஓட்டம் எனக் காலத்தைச் செலவிடும் ஏராளமான இளைஞர்கள் கூடத் தத்தமது வீட்டுவேலைகளைச் செய்வதில்லை. அதற்காகக் கூலியாட்களையே எதிர்பார்க்கின்றனர்.

காரணம் வேலைசெய்வது கௌரவக் குறைச்சல் என்பதால்தான். உண்மையிலேயே வெளிநாடுகளில் எம்மக்கள் உழைத்து அனுப்பும் பெருவாரியான பணம் உடலுழைப்பின் விளைச்சல்தான். அதே பணம் இங்கு பயன்படுத்தப்படுவோரை சோம்பேறிகளாக்கி வைத்திருக்கிறது. அம்மா,அப்பா படம்பார்க்க, குடிக்க, பட்டுச் சேலைகட்ட, நீகைநட்டு வாங்க, கோயில் விரதங்களுக்குப் போக, நண்பர்களுடன் சல்லாபிக்க, தொலைபேசி வைக்க, தம்பி தங்கைகளுக்கு ஓட்டல்களில் சாப்பிட, ஓயாது சுற்றித்திரிய, புதுப்புது உந்துருளிகள் வாங்க, நண்பர்களுடன் அரட்டை அடிக்க, அண்ணா அக்காவுக்குத் திருமணத் தேவைகளுக்கு எனச் சகல தேவைகளையும் வெளிநாட்டிலிருக்கும் பிள்ளைகளின் பணமே நிரவி விடுகிறது. உள்ளூரில் அவர்கள் தேவைக்கு அவர்கள் உழைக்க வேண்டிய தேவையில்லை. ஏதோ பக்கத்தூருக் குப்பயணம் போவதுபோல சிங்கப்பூர், மலேசியா, ஒஸ்ரேலியா, லண்டன் என ஊர்ப்பயணங்கள் கூடச் செய்கிறார்கள். எப்படி உழைப்பில்லாமல் நமது நாடு முன்னேறப் போகிறது. உடலுழைப்பைச் செய்வது இயலாது என்றபோது எமது பகுதிக்குள் தென்னிலங்கையிலிருந்து பெருமளவு இளைஞர்கள் வன்னியுள் வந்து வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வன்னி வாழ் இளைஞர்கள் படிப்படியாக ஆடம்பர மோகத்துள் ஆழ்ந்துபோய் விடுவார்களோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.


அழகுசாதனப் பொருட்கள் விற்கும் கடையொன்றின் உரிமையாளர் சுகயீனமுற்றிருந்ததால் அவரது கடையை மூடியிருந்தார். அவருக்கு உயர் கல்வியை இடைநிறுத்திய மகன்கள் இருந்தனர். அவருடைய மனைவி கடையை மூடி வைத்திருப்பது குறித்து மனம்வருந்தினாலும் " பிள்ளையளக் கடையிலவிட எனக்கு விருப்பமில்ல" என்றார். ஏன் அவர்களுக்கு மரியாதையில்லையாம்.

ஏதோ ஒரு வெள்ளைச் சட்டை உத்தியோகம் பாக்கவென்றே அவர்களை வளர்ப்பதாக அவர் பெருமைப்பட்டார். மேலும போராட்ட காலத்தில் கேளிக்கைகளுக்கு இடம்கொடுக்காமல் நாட்டின் வெற்றி ஒன்றே குறிக்கோளாக இருந்தவர்களின் பிள்ளைகள், புதிய புதிய திரைப்படங்கள், ஆடம்பர வாகனங்கள் என அலைவதும் நடக்கிறது. பெரும்பாலான வீடுகளில் மின்விசிறி இல்லாமல் எதுவும் செய்ய முடிவதில்லை. எட்டுப்பேர் பத்தடி யுஎன்னெச்சியார் கூட்டுக்குள் ஒருபுறம் வாழ- நான்குபேர் எட்டு அறைகளும் மாலும் கொண்ட வீடு போதாது என்று அலுத்துக் கொள்கிறார்கள். கால்களை மண்ணில் வைப்பதே உறுத்துகிறது.

தமிழில் ஒரு முதுமொழி உண்டு. "கோழி மேய்க்கிறதானாலும் கோறணமேந்தில மேய்க்கோணும்" என்று. இதே போன்று இன்னும் எங்கள் மண் விடுதலை அடையவில்லை. இந்த விடுதலைக்கு நாம் பொருளாதார விடுதலையையும் பெற்றாகவேண்டும். உடலுழைப்பைக் கை விட்டுவிட்டு முற்று முழுதாக யந்திரங்களில் தங்கிநிற்கும் நிலை எம் மண்ணுக்கு இன்னும் வரவில்லை. பெரும்பாலும் தனவந்தர்களே கையாளக்கூடிய இயந்திர முறைகளுக்கு அளவான உற்பத்தி இன்னும் எம் மண்ணில் நடைபெறவில்லை.

எம் மண்ணின் ஓரங்குல நிலமும் பயனற்றுப் போகாமல் எப்போது விவசாயத்துக்குப் பயன்படப்போகிறது. செய்கை பண்ணாமலே எந்த இலக்குக்கு உரியதென வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு அப்பால் அவை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன• கேள்விகள் அனைத்துக்கும் உழைப்போர் முன்வராமையே காரணம். கண்ணுக்கு அப்பால் எங்கோ ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு, அல்லது எமக்குக் கிடைக்கும் பணத்துக்கு எவ்வளவு கரிசனையாக வேலை செய்கிறோம். அதையே எங்கள் நாட்டுக்குச் செய்ய ஏன் முன்வருகிறோமில்லை.

கூலித்தொழிலாளர்களை ஒரு அமைப்பாக இணைத்து அவர்களை வழிநடத்தி, அவர்களுக்கான நிரந்தரக் கூலியையும் உறுதி செய்ய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இன்று வவுனியா மாவட்டத்தின் உடலுழைப்பாளர்கள் ஏராளமாக வீதி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கும் கூட தொழிலில் பாதுகாப்பில்லை என்பது கசப்பான விடயம்.



ஒட்டு மொத்தமாக எங்கள் மண்ணில் தொழில்கள் அதாவது வேலை வாய்ப்பின்மை என்பது நிலவுகிறது என்று சொல்லவே முடியாது. ஆட்பற்றாக்குறையே நிலவுகிறது. முன்பு ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளைப்பற்றி ஒன்று சொல்வார்கள் பாலன் பஞ்சம் பத்துவரியம் என்று. இன்று பாலன் பஞ்சம் இருபத்தெட்டு முப்பது வருடமும் ஆகிறது. பத்துவயதில் தந்தையுடன் வயலில் இறங்கிய பிள்ளைகள் இருந்தகாலம் இன்றில்லை.

ஆனால் இருபத்தெட்டு வயதானாலும் கல்விக்காகத் தாய் தந்தையரைச் சார்ந்துள்ள பிள்ளைகள்தான் இன்றுள்ளனர். மேலும் தமது பிள்ளைகள் தாம் செய்கிற தொழிலைச் செய்துவிடக் கூடாது என்பதில் எல்லாத் துறை சார்ந்தவர்களும் கவனமாக இருக்கிறார்கள். இப்படி நகரத்தில் தொழில் முடங்கிப்போய் நிற்பது என்பது முற்றுமுழுதாக மக்களைப் பாதிக்கும். என்னவோ. இனி மூடை ஏற்றி இறக்கும் வேலைகளுக்கும் அவரவர் தமக்கு பாரந்தூக்கிகளைப் பயன் படுத்தும் காலம் வந்துகொண்டிருக்கிறதா...?

சாதாரணமாக வாகனங்கள் செல்லவே போதாமல் இருக்கும் எமது வீதிகளில் இப்படி வரப்போகும் காலத்தைத் தாங்க ஏதாவது மாற்று வழிகள் தோன்றுமா? எல்லாவற்றுக்கும் மேலாக இறக்குமதியிலேயே பெரும் சுகங்காணும் நாங்கள் விரலுக்குமேலாக வீங்கி வெடித்துவிடத் தயாராகி வருகிறோமா? இளைஞர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக தம்மை அர்ப்பணிக்க முன்வருவார்களா? எதிர்கால ஈழம் என்னசெய்யப்போகிறது.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

அட,அட,அட. அப்பப்ப எங்கட அநுராத்தம்பியும் அழகாத்தான் அறிக்கைவிடுறார். என்ன, எனக்கெதிரி, எதிரிக்கு நண்பன். எண்ட மாரி. விளங்கேல்லயே- எதிரிக்கு நண்பன் எனக்கும் எதிரி. இப்ப சரியே. என்ன குழப்பிப்போட்டனே. சரி அப்ப நேர சொல்லுறன்- வேற ஆரட்டையும் பறையாதை. உவர் கதிராமர் செத்துப் போனாரெல்லே.

ங. உது புலியள்தான் செய்ததெண்டு எல்லாரும் ஒற்றைக்கால்ல நிக்க அநுராத்தம்பி நூற்றுக்கு நூறு எனக்கு புலியள்ள சந்தேகமில்லை எண்டிருக்கிறார். என்னடா சாத்தான் வேதமோதுது எண்டே பாக்கிறியள். உப்பிடித்தான் சோல்பரி யாப்பு வந்த காலத்தில பண்டார நாயக்காவும் தமிழருக்கு மொழியில சரியான அந்தஸ்தக் குடுக்கத்தான் வேணுமெண்டு சொன்னவர். பதவிக்கு வந்த உடன ஒரு குட்டிக்கரணம் அடிச்சு நிமிந்தாரே பாக்கோணும். சனாதிபதியா ஆர் வந்தாலும் அவர் இல்லாத பொழுது பிரதமமந்திரி அவரது கடமைகளை செய்ய அதிகாரமுள்ள ஆள்தானேயடா அந்த வகையில எதிர்கால பிரதமமந்திரியா இருக்கிற நேரம் தனக்கு எதிரா ஒருதரும் வந்திடக்கூடாதெண்ட கவனம் போல,

கதையோட கதை ரணிலர் ஒரு கதை சொல்லியிருக்கிறார் கவனிச்சியே. தான் இந்த பேச்சுவார்த்தைய ஓடியாடி செய்துகொண்டிருந்த நேரம் இந்தப்பக்கமா ஒரு படுகொலையளும் நடக்கேல்லயாம். இரண்டுவரியமா தான் கட்டிக்காத்த அமைதிய அம்மா போக்கடிச்சுப் போட்டாவாம். எண்டு- திருவள்ளுவரும் ஒரு குறள்ள சொல்லியிருக்கிறாரடா. நோய் வந்தவன் நோய்க்கு மருந்து செய்யிறத விட நோய் நாடிக்கு மருந்து செய்யிறதுதான் நல்லது. எண்டு- "நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"

நீ என்னத்தைச் சொல்லு உந்தக் கோதாரியில போவார், சனத்தையும் பழுதாக்கி வச்சிட்டு, இப்ப அந்தரப்படுகினங்கண்டியோ. ஒரு காலத்தில இனவாதம் பேசினவை இன்னம் பிடிவாதமா இனவாதங்கதைச்சுக் கொண்டிருந்தா உவைக்குப் பாரிசவாதந் தானே வரும். விமல் வீரவன்சவுக்கு வந்திருக்கிறது வித்தியாசமான சரவணைவாதம் அவர் இடதுசாரிக்கும் நெளியிறார் இருக்கிற கதிரைக்கும் நெளியிறார் சும்மா பம்பரக் கண்ண சுழட்டிச் சுழட்டி இலங்கையின்ர மேலாதிக்கம் முழுக்கத் தன்னட்டத்தான் உள்ளமாதிரி துள்ளுறார். தென்னிலங்கை சனத்துக்கு சண்டை வந்தாச் சாகப் போறது ஆரெண்டு வடிவாத் தெரியும்.

அதாலதானே, சமாதானங்கதைச்ச சந்திரிகாவ தென்மாகாணசபைக்கு தெரிவு செய்துவிட்டதுகள். இப்பவும் இவை இனவாதங் கதைக்கக் கதைக்க அதுகளுக்கு வயித்தில புளிகரையாதே. யாழ்ப்பாணத்துக்க உவையடபிள்ளையள் நிராதரவா நிக்குதுகள் என்ன- பனங்காமத்துக்காலயும் வட்டக்கண்டலாலயும் ஓடித்தப்பி ஊர்க்கடைவழிய சாரம் வாங்கிக் கட்டிக்கொண்டு உடுப்பு மாத்தினது வன்னிக்க நிண்ட படை. யாழ்ப்பாணத்துக்க நிக்கிற படையளுக்கு இந்தியாதானே கெதி. கடலில குதிச்சு கதைய முடிக்காம இடையில விட்டது நீங்கள். இப்ப... அவை கடக்கரையிலும் கடைத்தெருவிலயும் சீனவெடி கொளுத்திப்போட, முடிஞ்சலுவலே, எங்கட பொடியளட்ட அடையாளக்காட்டப் பறிக்கவும் தேவைப்பட்டா கடத்தவும் முடிஞ்ச அலுவலே.

உங்க என்னடா நடக்குது. வவுனியாவில பொம்பிளப் பிள்ளையளின்ர தங்கிடத்தை குண்டு கழட்டிப் போட்டவையாம். நினைக்க வெக்கமாக்கிடக்கு. ஆயுதத்தோட பொடிபொட்டையள் வர உடுத்த சீலையோட ஓடித்தப்பினவை. இப்ப சும்மா நிக்கிற பிள்ளையளச் சுரண்டிப் பாக்கினமே. இல்ல தெரியாமத்தான் கேக்கிறன்... போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்ன புளியாவரஞ் செய்யுதே. எங்கயன் சுத்திச் சுத்தி அவன் இந்தியன் அமைதிப்படை செய்தமாரி இலங்கை அரசாங்கத்துக்கு முட்டுக்குடுக்கவே நிக்கினம். ங.யாழ்ப்பாணத்தில ஒரு படிக்கிற பொடியன் சொல்லியிருக்கிறான் உங்கட நடவடிக்கை முழுக்க முடக்குவம் எண்டு.

அந்தளவுக்கு சனங் கசந்து போயிருக்குது. அதுகளும் ஆர்ப்பாட்டம் பேரணியெண்டு செய்து அலுத்துப் போய்த்தானே ஆயுதப் பயிற்சியெடுக்குதுகள். பழையபடி வேதாளம் முருங்கமரத்தில ஏறுது. எங்ககொண்டே விடுமோ தெரியாது. பில்லி ஏவல்பேயள் தமிழற்ற மண்ணில நிண்டு போகுந்தனைக்கும் அலுப்புத்தான். இதைக் கலைக்காம நாங்கள் என்ன செய்தாலும் அது கிணத்துக்க போட்ட கல்லுத்தான். மெல்ல மெல்லப் பாயுற தண்ணி கல்லுருவப் பாயவேணும் . .




# ஏமாற்றுத்தனம்...

ச.முருகானந்தன்

பறங்கி மலையின் இடப் புறமாகநூறு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட உவர்மலை எஸ்டேட் இருக் கிறது. சீராகப் பராமரிக்கப்படாத அந்த தேயிலைத் தோட் டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மும்முரமாக வேலை யில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

உதட்டில் வெற்றிலைச் சாயம் இறங்கி கோடுகளாய் விழுந்திருக்க, பல பெண்கள் கொழுந்து பறித்துக் கொண்டிருக்க, இன்னுமொருபுறத் தில் ஆண்கள் செடிகளுக்குக் கவ் வாத்து பண்ணிக்கொண்டிருந்தனர். அதிகாலைப் பனிநீங்கி சூரியன் உச் சிக்கு வர அந்த ஆகாத வெயிலில் ஒட்டிய கன்னங்களும், இடுங்கி குழிவிழுந்த கண்களுமாய், இயந்திர மாய்மாறி வேலையில் மூழ்கியிருந்தனர்.

'பற்றி' கரி கலந்த சாணி யால் மொழுகியபோல ஓர் அழுக்குக் கறுப்பு அவர்கள் மேல் சாம்பலாய் பூத்திருந்தது. சிறுவயதிலிருந்தே, பரம்பரை பரம்பரையாக ஆத்ம சுத்தி யுடன் உழைத்துவரும் இவர்களது கடின உழைப்பை யாருமே என் றுமே அங்கீகரித்ததில்லை.

முத்தையா கிழவன் தலை யில் முண்டாசாகக்கட்டியிருந்த துணியை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக்கொண்டார். தோட்டங் களைப் பங்கிட்டு பெரும்பான்மை மக்களுக்குக் கொடுத்ததால் வேலை யிழந்து இருக்க நிரந்தர இடமுமற்ற இந்தத் தொழிலாளர்களின் வயிற் றைக் கழுவி வாழ இந்த சிறுதோட் டம் தான் இப்போது சில காலமாக ஏதோகை கொடுத்துக்கொண்டிருந் தது.

நூற்றாண்டுகளுக்கு முன்னர் பச்சைவயல் கனவுடன் படகேறி, தமிழகத்திலிருந்து வந்து கடும் உழைப்பினால் இந்த மலைகளைப் பொன் விளையும் பூமியாக மாற்றி இலங்கையின் உச்ச ஏற்றுமதி வர்த் தகத்தினால் அதியுயர் அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் தேயி லைத் தோட்டங்களை உருவாக்கி பராமரித்து அங்கேயே தொழில் புரிந்து அம்மண்ணிற்கே உரமாவதை முத் தையா கிழவனின் பாட்டன் கதை கதையாகச் சொன்னபோது, சிறு பிள்ளையாக இருந்து கேட்டிருக்கி றான். இன்று வரை நேர்மையாக உழைத்தும் தம் வாழ்வில் சிறு விடிவு தானும் வரவில்லையே என்ற ஆதங் கம் அவனுக்கு! எதிர்காலமும் நம்பிக் கையின்றி சூனியமாகத் தெரிந்தது.

காலம் காலமாக அவர்களது உழைப்பு சுரண்டப்படுவது மாத்திர மன்றி, அடிக்கடி பேரினவாதத்தாக்கு தலுக்கு உள்ளாகி இருக்கும் அற்ப சொற்ப உடமைகளையும் இழந்து படும் அவஸ்தைகளையும் கிழவ னால் தாங்கிக்கொள்ளமுடிவதில்லை. வடக்கில் பட்டாசு வெடித்தால் கூட இங்கே தமிழர் என்கிற ஒரே காரணத் திற்காக இந்த அப்பாவித் தொழி லாளர்கள் தாக்கப்படுவது இப்போதெல் லாம் அடிக்கடி நிகழும் சம்பவங்கள்.

இப்போது அதிகவேலை வாய்ப்பு மின்றி உவர் மலைப் பிரதேசத்தில் தொழில்புரியும் முத்தையா கிழவனும் சக தொழிலாளர்களும் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு வரை பறங்கிமலைத் தோட்டத்தில் தொழில் புரிந்தவர்கள்தான். அந்த நாட்களிலும் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக் காதுவிட்டாலும் கூட மாதத்தில் பெரும்பாலான நாட்களுக்கு வேலை கிடைத்தது.

அரசு கொண்டுவந்த காணி உச் சவரம்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஒரு தமிழ் தனவந்தரின் உடமையாக இந்த பறங்கி மலைத் தோட்டத்தை அரசு சுவீகரித்து நிலமற்றவர்களுக் குப் பகிர்ந்தளித்த அந்தக்கால கட்டத் தில் தமக்கும் காணி கிடைக்கும் என முத்தையாவும் சக தொழிலாளர் களும் பகல் கனவு கண்டார்கள். ஆனால் காலம்காலமாக அங்கிருந்த அவர்கள் புறக்கணிக்கப்பட்டு மலை யடிவாரக் கிராமத்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கே அக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அரசியல் செல்வாக்கு இருந்தமையினால் பண்டாவுக்கு நூறு ஏக்கர் காணி கிடைத்தது.

காணி சுவீகரிக்கப்பட்ட தனால் வேலையிழந்து இருக்க இட மின்றித் தவித்த தொழிலாளர்களில் சிலருக்கு பண்டா தஞ்சமளித்தான். அவன் தொழிலாளர்களில் இரக்கப் பட்டு இக்காரியத்தைச் செய்ய வில்லை. தேயிலைத் தோட்ட மலை களில் இவர்களைப் போன்றவர்களை விட்டால் தொழில்புரிய வேறு பொருத் தமானவர்களைத் தேட முடியாது என்கிற சுயநலம்தான் முக்கிய காரணம்.

ஆரம்ப காலத்தில் தோட் டம் செழிப்பாக இருந்தமையினால் தொழிலாளர்களுக்கு கணிசமாக வேலை கிடைத்தது. காலப் போக் கில் பண்டா தேயிலைத் தோட்டதைப் பராமரிப்பதிலும் அதிக அக்கறை செலுத்தாமையினால் அவனது தோட் டத்தில் உற்பத்தி குறைந்துகொண்டே வந்தது.

குறுகியகால லாபத்தை யீட்டவும் தோட்டத்தொழிலாளர் களுக்கு ஊதியம் கொடுப்பதைக் கட்டுப்படுத்தவும் நினைத்தானே யன்றி, தொலை நோக்குடன் அவன் செயற்படவில்லை.

இதனால் தொழிலாளர் களுக்கு அந்தத் தோட்டத்தில் வேலை குறைந்து கொண்டே வந்தது. எனினும் வேறு இடங்களில் வேலை கிடைக்காததால் அவர்கள் இங்கேயே ஒன்றிப் போயி ருந்தார்கள்.

காலப் போக்கில் பண்டா முத லாளி அவர் களது கூலி யைக் கூட நேரகாலத்திற் குக் கொடுக் காமல் கடத் தினான் மேலும் வாழ்க்கைச் செலவு அதி கரிப்புக்கு ஏற்ப அரசாங்கம் சம்பளத்தை உயர்த் தியபோதும், இவன் அவ் அதிகரிப் பைத் தொழிலாளர்களுக்கு வழங்கா மல் தட்டிக்கழித்தான். இது தொடர் பாக தொழிற்சங்கத்திற்கு அறிவித்தும் கூட எதுவும் நடக்கவில்லை.

முத்தையா கிழவன் தன்னைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்வதற் காக திட்டியில் வந்து அமர்ந்தபடி வெற்றிலைச் சரையைப்பிரித்து, தனக்கு ஏற்ற அளவில் வெற்றிலை, பாக்கு, பாணிப்புகையிலை, சுண் ணாம்பு அனைத்தையும் கலந்து வாயில திணித்து கொடுப்பில் வைத்து சப்பியபடி உள் உமிழ்ந்தான் மனம் ஒரு நிலையில் இன்றித்தவித்தது. ஆழ்ந்த கவலையின் தாக்கத்தால் அசந்து போய் நாடியை ஒரு கையால் தாங்கியபடி வேதனை ததும்பும் முகத்துடன் சிந்தனையில் மூழ்கியபடி மலையுச்சி வரை நோக்கினான்.

கொழுந்து பறித்துக் கொண் டிருந்த மரிக்கொழுந்தின் மீது அவனது பார்வை பதிந்தது. முப்பது வயதை எட்டும் அவனது மகள் உருக் குலைந்து போயிருந்தாள். இளமைக் குரிய மொழு மொழுப்பு எதுவுமின்றி காட்சிதரும் மரிக்கொழுந்தைப் பார்க்கப் பார்க்க அவனது பெற்ற மனது பத்தி எரிந்தது.

கஸ்ரத்தின் மத்தியிலும் மகளைச் செல்லமாக வளர்த்து, அந் தத் தோட்டத் தொழிலாளர் மத்தியி லேயே நாலு எழுத்துப் படித்து, குடி கூத்து எதுவும் இல்லாதிருந்த இலட்சு மணனை அவளுக்கு மணம் முடித் துக்கொடுத்தான். அவன் எதிர்பார்த் தது போலவே அவனும் மரிக்கொ ழுந்தை அன்பு மழையில் குளிப்பாட் டிய போது முத்தையாவும் மகிழ்வில் திழைத்தான்.

இலட்சுமணன் உலகம் அறிந்தவனாக இருந்தான். இதனால் அநீதிகளைக் கண்டு வெகுண்டெழு வான். பண்டா முதலாளியின் வீட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவர்களது உறவுப்பெண்ணான சரஸ்வதியுடன் முதலாளியின் மூத்த மகன் தகாத முறையில் நடந்த போது, சரஸ்வதி கண்ணீர் பொங்க தனக்கு நடந்த அவலத்தைக் கூறிய தைக்கேட்டு வெகுண்டெழுந்த இலட்சுமணன் நியாயம் கேட்டு முத லாளியிடம் சென்ற போது, அவனது மகன் இவனைத் தாக்கவந்தான். அவனை அடித்துக் கிடத்தி விட்டுத் தான் இலட்சுமணன் திரும்பினான்.

எனினும் பண்டா முதலாளி பொலிசிடம் போகவில்லை. பணம் கொடுத்து பொலிசை விலைக்கு வாங்க முடியுமெனினும், குடும்ப மானம் கருதி வாளாவிருந்தான். ஆனாலும் சமயம் பார்த்து அவன் இலட்சுமணனைப் பழி வாங்கினான்.

ஒருநாள் இலட்சு மணன் மலையில் செடிகளுக்கு உர மிட்டுக் கொண்டி ருந்த போது பொலி சார் அவனைப் புலிப் பயங்கரவாதியின் உளவுப் பிரி வினைச் சேர்ந்தவன் என்று கூறி கைதுசெய்து கொண்டுபோய் சித்திர வதை செய்தனர்.

மரிக்கொழுந்து குய்யோ முறையோ என்று கதறினாள், பொ லிஸ் நிலையம் சென்ற முத்தையா மருமகன் பற்றி விசாரித்தான். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் படி அவனை மேல் விசாரணைக்குக் கொழும்பிற்கு அனுப்பிவிட்டதாகவும், பிணை வழங்கமாட்டார்கள் என்றும் அறிந்து மனம் நொடிந்தான்.

இலட்சுமணன் எங்கே சிறைவைக்கப்பட்டிருக்கிறான் என்ற தகவலை இன்றுவரை அறியமுடிய வில்லை. அவன் உயிரோடு இருக் கிறானா, இல்லையோ என்று கூடத் தெரியாது மரிக்கொழுந்து நொடிந்து போனாள். அவளது வாழ்வின் இள மைக்கால வசந்தங்கள் எல்லாம் கண் ணீரில் கரைந்து கொண்டிருந்தன.

வட கிழக்கில் ஏற்பட்ட யுத் தத்தின் தாக்கத்தினால் இலங்கை யின் பொருளாதாரமே சீரழிந்து விட்ட நிலையில், அதன் தாக்கம் வெகுவாக நாடெங்கும் பிரதிபலித்தது. குறிப்பாக வழமையிலேயே வறுமையோடு போரா டிக்கொண்டிருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு இதனால் படு பாதாழத்திற்கு சென்றுகொண் டிருந்தது. வீட்டிலுள்ள பொருள் பண்டங்களை விற்று சீவிக்கும் அள விற்கு அவர்களது வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்த நிலையில் மரிக்கொ ழுந்துவின் வாழ்வே வரண்ட பாலை வனமாகிவிட்டது.

இந்த நிலையில் பண்டா வின் அடாவடித்தனமான நடவடிக் கையால் வெறுப்புற்ற முத்தையா தொழில் ஆணையாளருக்கு பண்டா வின் கூலி ஏய்ப்பைப்பற்றி மனுக் கொடுத்திருந்தான். புதிதாக வந்திருக் கும் தொழில் ஆணையாளர் தொழி லாளர்களை புரிந்துகொண்டவர் என் றும், அனுதாபம் கொண்டவர் என்றும், அறிந்திருந்தமையினால் முத்தையா வுக்கு இந்த எண்ணம் தோன்றியது. உரிய முறைப்பாட்டைச் செய்திருந் தான். எனினும் இன்றுவரை நட வடிக்கை எதுவும் எடுக்கப்படாதது ஏமாற்றமாக இருந்தது.

அவன் யோசித்துக்கொண் டிருந்த போதே மலையேற்றத்தில் வாகனம் ஒன்று இரைந்தபடி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. வண்டி வந்து நின்றதும் அதிலிருந்து பண்டாவும் தொழில் ஆணையாளரும் இறங்கி வருவதைக்கண்ட முத்தையா மகிழ்ந்தான்.

பண்டா ஆணையாளரிடம் இதமாகப் பேசினான். "இது சின்ன தோட்டமுங்க ... தேயிலைச் செடி களும் ரோதாக வளரல்ல. பராமரிப் பதே கஷ்டம்... கொழுந்தும் ரொம்பக் குறைவுங்க இந்த நிலையில் இது களுக்குக் கூலி கொடுத்தே கட்டுபடி யாக லிங்க... நீங்களே பாருங்க... இந்த வயசானவங்க கூட வேலை செய்யு றாங்க... அதோட சின்ன பயலுக... விளையாட்டுப் பய லுக இவனுக் கும் ஆள் கணக்குப் போட்டு கூலி கொடுக்கிறேனுங்க"

"ஒரு நாளைக்கு எவ்வளவு கணக்கென்று கொழுந்து சேகரிக் கணுமென்று கட்டுப்பாடு இல்லை யா? " ஆணையாளர் கேட்டார்.

"அப்படித்தாங்க... ஆனா இவங்க வேலை சுத்தமில்லிங்க.. கொழுந்தோட இலைகளையும் ஒடிச்சுப்போட்டு விடுவாங்க... பண்டா பதட்டத்தோடு பதில் சொன்னான்.

முத்தையாவுக்குக் கோபம் வந்தது " நாம பிறந்தது முதலே தேயிலைச் செடியோடு கிடந்து மாயு றோம்... முதலாளி நம்ம தொழிலில் பிழை காணுகிறார்... அதிகாலையில் பனியென்றும்,குளிரென்றும் பாராமல் நேரத்துடனேயே மலையேறுகிறோம்... அப்புறம் மழைபெஞ்சா என்ன வெயில் கொளுத்தினா என்ன மலையில என்ன ஒதுங்கவா இடமிருக்கு?... அட்டைக்கடி வேற..."

ஆணையாளர் முத்தை யாவை நோக்கினார் "எவ்வளவு கொழுந்து பறிக்கிறீங்க...?' " உச்ச அளவுக்கு மேலாகவே பறிக்கிறோம். கூடினால் எதுவுமில்லை. எப்பவா வது குறைஞ்சா கூலியைப் பிடிச் சிடுறாங்க. இது பெரிய அநியாய முங்க ஐயா..."

முத்தையா குரல் தளதளக்கக் கூறினான் " மழை பெஞ்சு குழப் பினால்தான் குறையுமுங்க... நம்ம சனங்க தொழில்ல வஞ்சகம் செய்ய மாட்டாங்க..."

ஆணையாளர் அவன் சொல்வதைக் கவனத்தில் எடுத்தபடி " இங்கே வேலை செய்பவர்களுடைய சுறுசுறுப்பைப் பார்த்தால் திருப்தியாக இருக்கு" என்றபடி பண்டாவைப் பார்த்தார். பண்டா அசடு வழியச் சிரித்தபடி " உங்களைக்கண்டவுடனே வேலையில் சுறுசுறுப்பாயிட்டாங்க" என்றான்.

" உம்மைப் பற்றி முறைப் பாடு வந்திருக்கு" என்று ஆழமாக பண்டாவை நோக்கவே, அவன் பதற்றத்துடன்." முறைப்பாடா ஐயா? என்ன எழுதியிருக்காங்க..."

ஆணையாளர் சிரித்தார்... "நீர் இங்கே வேலைசெய்யுற தொழி லாளர்களை அடிமைகள் மாதிரி நடத்துகிறீராம். கூலி மிகவும் குறைவாகக் கொடுப்பதுடன், வேலை யும் போதியளவு நாட்கள் கொடுப்ப தில்லையாம்..."

" சுத்தப் பொய்யுங்க ஐயா..."

" இந்த தேயிலைத் தோட் டம் இருக்கிற இலட்சணத்திலையே தெரியுதே... முன்பு என்ன மாதிரி யிருந்த தோட்டங்களெல்லாம் கை மாறிய பிறகு முறையான பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து போயிருக்கு... இவங்களுக்கு வேலையைக் கொடுத்து தோட்டத்தை வடிவாகப் பராமரிக் கலாமே?'

"அதுக்கு வரும்படி போதா துங்க ஐயா"

"பராமரிச்சால் தானே வரும் படி வரும். உலகத்தில முதலாவதாக இருந்த இலங்கைத் தேயிலை ஐந்தா வதாகப் பின்னடைந்ததற்கு தோட்டங் களைப் பிரிச்சுக் கொடுத்தது தான் காரணம். குறுகிய கால அரசியல் நோக்கத்தினால் இந்த நாடே பாழாகிக் குட்டிச்சுவராகுது... வடக்கு கிழக்கில நிம்மதியாக காலம் காலமாக வாழ்ந்த தமிழர்களோட யுத்தம் புரியுறோம். இதனால நம்ம நாட்டில அமைதியும் நிம்மதியும் பறிபோகுது. அதோட ஏழை நாடாகி கடனில் மூழ்கியிருக் கிறோம்..." ஆணையாளர் பெரும் பான்மை இனத்தவராதலினால் தைரி யமாக மனதில் பட்டதைக் கூறினார். இதையே ஒரு தமிழன் கூறியிருந்தால் நிகழ்வதே வேறாயிருக்கும்.

பண்டா மனதில் கறுவிக் கொண்டான் " இனத்துரோகி... நம்ம அரசாங்கத்தையும் கிண்டல் செய்கி றான்..." இனத்துவேச ரீதியிலேயே அவனது மனது சிந்தித்தது. அதிலும் ஆணையாளர் தொழிலாளர்களுக்குச் சார்பாகக் கதைத்தது அவனுக்கு அவர் மீது வெறுப்பினை ஏற்படுத்தி யிருந்தது. எனினும் இப்போது ஆணையாளரைச் சமாளித்து அனுப் பாதுவிட்டால் அப்புறம் தொல்லை தான் என்பதும் பண்டாவுக்கு புரிந்தது.

" இந்த தொழிலாளரை நான் ஒருக்கா விசாரிக்கணும்..." ஆணையாளர் சொன்னதும் "அதுக் கென்ன ஐயா.. தாராளமாக விசாரி யுங்க... டேய் முத்தையா... இதோ பாரு...மலையில் வேலை செய்கிற வேலையாட்களை எல்லாம் கூப்பிடு.. ஐயா கதைக்க வேணுமாம்"

முத்தையா அனைவரையும் கூப்பிட்டான். கொழுந்து பறித்துக் கொண்டும் கல்லாத்து செய்து கொண்டுமிருந்த தொழிலாளர்கள் இறங்கி வந்து ஆணையாளரைச் சுற்றி நின்றார்கள். கூடத்திலே நின்ற மாரியப்பன், தனது எதிர்த்த லயத்து செங்கமலத்தைப் பார்த்துக் கண்ணடித் தான். இளமைப் பூரிப்புடனிருந்த அவளும், அவனை வெட்டிப் பார்த்து விட்டு நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். குழிவிழும் கன்னத்தையும், அவளது இதழோரப் புன்னகையையும் ரசித்தபடி பெரு மூச்சுவிட்டான் மாரியப்பன்.

ஆணையாளர் தொழிலாளர் களைப் பார்த்து "



## நூல் நயம்

நூலின் பெயர்:-கொண்டுவந்த சீதனம்,
வெளியீடு:- பிரியா பிரசுரம்,
64, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி மட்டக்களப்பு,
விலை:-ரூபா 175.00

# கொண்டு வந்த சீதனம்

நாடறிந்த எழுத்தாளர் முல்லை மணியின் தேர்ந் தெடுக்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு இது. இதுவரை பதின்மூன்று நூல்களை வெளியிட்டுள்ள இவரின் இரண்டா வது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இத்தொகுதியின் 14 சிறுகதைகள் உள்ளன. சிறுகதைகள் அனைத்தும் பரந்த மனிதநேயத்தினை வெளிப்படுத்துகின்றன.

கொண்டுவந்த சீதனம், உதயங்களும் அஸ்தமனங்களும், மீண்டும் தொடங்கும்...., ஆச்சியின் பயணம், காதல்...காதல்....காதல், பொட்டு, ஒரு தோட்ட நிலம், கொடுக்கிற தெய்வம், ஒரு கலியாணத்தின் கதை, ரியூசன் மாஸ்ரர், வாரிசு, பார்மகளே பார், ஒரு பாலத்தின் கதை அழுத்தங்கள் என்னும் தலைப்புக்களில் கதைகள் அமைந்துள்ளன.

இவற்றில் உதயங்களும் அஸ்தமனங்களும், ஒரு தோட்ட நிலம்,கொடுக்கிற தெய்வம், வாரிசு ஆகிய நான்கு கதைகளும் வர்க்கமுரண்பாடு சம்பந்தமானவை.

ஆச்சியின் பயணம், பொட்டு ஆகிய இருகதைகளும் போர்க்காலத் துன்பங்களோடு தொடர்புடைய யதார்த்த வாதக்கதைகள். பொட்டு மிக அருமையானசெய்தி ஒன்றைச் சொல்கிறது. வவுனியாவிற்கு வியாபாரத்துக்காகச் சென்ற கணவன் திரும்பி வரவில்லை. அவனுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. மனைவி வள்ளிக்கொடி சுமங்கலியாகவே பொட்டுடன் திகழ்கின்றாள். றெட்பானாவிடம் உதவி கேட்டபோது போர்க்கால விதவைத்திட்டத்தின் கீழ் உதவி செய்யவேண்டுமாயின் பொட்டுப் போடுவதை நிறுத்திக் கணவன் இறந்துவிட்டான் எனச் சத்தியக்கடதாசி முடிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகின்றது. அப்படிச் செய்ய வள்ளிக்கொடி மறுக்கிறாள்.

'ஆச்சியின் பயணம்' நவாலிக் குண்டு வீச்சையும் வவுனியா பாஸ் நடைமுறைக் கொடுமையையும் சித்திரிக்கின்றது. இது ஒரு வரலாற்றுப் பதிவு.

கொண்டுவந்த சீதனம், ஒரு கலியாணத்தின் கதை, ரியூசன் மாஸ்ரர் என்பவை தனிமனித உணர்வுகளோடு சமூகப்பிரச்சினைகளையும் சொல்ல முனைபவை. உலகத்தோடு ஒட்டி வாழத்தெரியாத கட்டுப் பெட்டியான வரலாற்று விரிவுரையாளர் கள ஆய்வின் போது ஒரு கல்வெட்டை காண்கிறார். ஒரு இளம் பெண் அக் கல்வெட்டிற்கு உரிமை பாராட்டிய போது, அதனைப் பெறுவதற்காக தன் வைராக்கியத்தை விட்டு அப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறார். அந்தக் கல்வெட்டே சீதனமாக அந்தப் பெண், கொண்டு வருகிறாள். இலங்கையில் சோழர் ஆட்சிக்காலத் தடயங்களை இக்கல்வெட்டு உணர்த்துகிறது.




உதயங்களும் அஸ்தமனங்களும் ஆதிக்கசக்திகளிலிருந்து விடுபட்டு இலங்கை நாராயணன் குளத்து அலைகரையில் காடுவெட்டி கழனியாக்கி முன்னேறத்துடிக்கும் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் மீது வஞ்சம் தீர்க்கும் ஆளும் வர்க்கத்தின் திட்டம் பற்றியது.

இந்நூலாசிரியரின் முதிர்ந்த எழுத்தாற்றலால் தனது கதைகளுக்கு உயிர் கொடுத்து பாத்திரங்களுக்கு உணர்வு கொடுத்து கதைகளைச் சலிப்பின்றி வாசிக்கக் கூடியவாறு எழுதியிருக்கிறார். தனது எழுத்துத்துறை அனுபவத்தையும் வாழ்க்கை அனுபவத்தையும் தனது கதைகளிலே துல்லியமாகக் காட்டியுள்ளார்.

இவர் கதைகளை நடாத்திச் செல்கின்ற விதம் மிகவும் சிறப்பானது. ஒரு கலியாணத்தின் கதையைத் திருமணம் செய்வதற்கு பெண்கள் மீது நுட்பமாக நொட்டை சொல்லும் வாலிபனின் நண்பனாக மாறிக்கதையை நகைச்சுவையுடன் நகர்த்துகிறார்.

பேச்சு மொழியும் பிரதேச வழக்கும் கதைகளை உயிர்த்துடிப்புடையவை ஆக்குகின்றன.

**அகளங்கன்**

---

சரி இப்ப சொல்லுங்க... இங்கே வேலை செய்யுறதுக்கு எவ்வளவு கூலி கொடுக்கிறாங்க...?" என்று கேட்டார்.

சொன்னார்கள், ஆணையாளர் பண்டாவின் பக்கம் திரும்பி "பார்த்தீர்களா?" என்பது போல கண்டிப்புடன் நோக்கினார். பின்னர் அவர்கள் பக்கம் நோக்கி " உங்களுக்கு இந்தக் கூலி போதாதா?" என்று கேட்டார்.

" ஆமாய்யா... நீங்கதான் பார்க்கிறீங்களே... கந்தலும் வெளிறலுமாக நாம போட்டிருக்கிற உடுப்புகள்! ஒவ்வொருத்தன் மார்பிலேயும் எத்தனை எலும்பெண்ணு எண்ணிப்பார்க்க முடியுமுங்க... எத்தனையோ நாட்கள் எங்க வீட்டு அடுப்பில பூனை உறங்குமுங்க... காய்கறித் தோட்டம் போடக்கூட முதலாளி அனுமதிக்கிறாரில்லை..." மாரியப்பன் இள ரத்தத்துக்கேயுரிய துடிப்புடன் கூறினான். பண்டா அவனை முறைத்துப் பார்த்தபடி ' அடுத்தது இவனைத் தான் பூசா -சிறைக்கு அனுப்பி வைக்கணும் கெதியில" என்று மனதில் கறுவிக் கொண்டார்.

" சரி... ஓரளவுக்கு உங்க கஷ்டம் புரியுது... உங்களுக்கு உரிய சம்பளத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன்." என்று கூறி விடை பெற்ற ஆணையாளரை நன்றியுடன் கைகூப்பி வழியனுப் பினார்கள் தொழிலாளர்கள்.

ஆணையாளருடன் வாகனத்தில் ஏறிக்கொண்ட பண்டா தனது மலையடிவார வீட்டிற்கு வந்து பகலுணவை முடித்துக்கொண்டு போகலாம என்று அழைத்தான். முதலில் மறுத்தாலும், அவன் தோட்டத் தொழிலாளர்களின் கூலியை ஒழுங்காகக் கூட்டிக்கொடுப்பதாகக் கூறியதும் சம்மதித்தார்.

பண்டாவின் வீட்டில் ஆணையாளருக்குக் கோழிப் புரியாணி விருந்துபசாரம் நடந்தது. உணவு முடிந்ததும் பண்டாவின் கையிலிருந்த ஒரு என்வலப்பணம் ஆணையாளரின் கைக்கு மாறியது. முதலில் மறுத்தாலும் பின்னர் வாங்கிக்கொண்டார் ஆணையாளர்.

" ஐயா... நாம ஒண்ணுக்குள்ள ஒண்ணு...அவங்க வந்தேறு குடிகள்... இப்போ நாடே தமக்கெண்ணு நிக்கிறாங்க... நம்மட இளைஞர்களை நாட்டைக்காக்கப் புறப் பட்ட வீரர்களை எல்லாம் குரூரமாகக் கொல்லுறாங்க"என்று கூறிய பண்டா சிறிது இடைவிட்டு தொடர்ந்தான் " இவங்களுக்கு இடம் கொடுத்தால் மலையகத்தையும் தமிழீழத்தின் ஒரு பகுதியிண்ணு முடிச்சிடுவாங்க.." பண்டா சொல்லச் சொல்ல ஆணையாளரின் மனதிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

தான் தொழிலாளர்களின் காவலன் என்பதையும் மறந்து அதற்கு மேலாக பண்டா சாம்பல் தட்டியதனால் இனரீதியில் சிந்திக்க ஆரம்பித்தார். பண்டாவைப் பகைத்தால் அரசியல் செல்வாக்கினால் அவருக்கும் கஸ்ரப்பிரதேசத்திற்கு மாற்றம் கிடைக்கும் என அலுவலகத்தில் தலைமை எழுதுனர் கூறியதும் அவருக்கு நினைவில் வந்தது.

ஆணையாளர் வந்து சென்று மாதங்கள் சில கடந்தும் எதுவித பலாபலனும் கிட்டாமையினால் முத்தையாவும் ஏனைய தொழிலாளர்களும் ஏமாற்றத்திற்கு உள்ளாகினர். அந்தத்தோட்ட இளைஞர்களும் விரக்தியடைந்தனர்.

தாத்தா... "இனி அடுத்த நடவடிக்கையில இறங்க வேண்டியது தான்..." என்று கூறிய மாரியப்பன் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க முயன்று கொண்டிருந்தான்.

தொழிற்சங்கத் தலைவரைச் சென்று சந்தித்து விட்டுத் திரும்பிய மாரியப்பனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. " அம்மா... பசிக்கு... சோறு போடுங்க" என்று கூறியபடி வெளியே வந்து கைகளைக் கழுவினான். எதிர்த்தலயத்து இஸ்தோப்பிலிருந்து செங்கமலம் புன்னகைப் பூக்களினால் தூது விட்டாள். பதில் சிரிப்பை உதிர்த்து கண்களினால் பேசிவிட்டு உள்ளே வந்து சாப்பிட ஆரம்பித்தான் மாரியப்பன்.

ஒரு வாய் உண்டிருக்க மாட்டான் தடதடவென நாலைந்து பொலிஸ்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள். சாப்பிட்டுக்கொண்டிருந்த மாரியப்பனை இழுத்தபடி "கொட்டியா" என்று கூறி உதைத்தனர். விழுந்த மாரியப்பனை இன்னொருவன் பூட்ஸ் காலால் உதைந்தான். மாரியப்பன் வேதனையில் முனகினான். மாறி மாறி அவனை அடித்து உதைத்து கொற கொற என்று இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினார்கள்.

தாயும், சகோதரிகளும், செங்கமலமும் வாய்விட்டுக் கதறி அழுது மன்றாடினர். ஓடிச்சென்ற தாயாரை ஒருவன் தள்ளி விட்டடவே அவள் நிலத்தில் விழுந்து பள்ளத்தில் உருண்டாள். எங்குமே சோகமயம்!

அவனைக் காலவரையறையின்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறை வைத்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மூலம் அறியமுடிந்தது.

மாரியப்பனின் மீள் வரவுக்காக அவனது தாய் சகோதரிகளும், காதலி செங்கமலமும் கண்ணீருடன் காத்திருந்தனர்.

இலட்சுமணனின் வரவை எண்ணி தான் விதவையா இல்லையா என்பது கூடப் புரியாமல் தனது குழந்தைக்கு அப்பாவைப் படத்தில் மட்டுமே காட்டியபடி மரிக்கொழுந்து காத்திருந்தாள்.

சம்பள உயர்வை எண்ணி முத்தையா கிழவனும் அந்தத் தோட்ட தொழிலாளர்களும் காத்திருந்தனர்.

காத்திருப்பு.... காத்திருப்பு... காத்திருப்பு....காத்திருப்புக்கள் தொடர்கதையாய் தொடர்கின்றன.

ஓநாய் ஓநாய் என்று கதறும் ஆட்டிடையனின் ஞாபகம் முத்தையா கிழவனின் ஞாபகத்திற்கு வந்தது. "புலி புலி" என்று அப்பாவிகளை பிடித்துக்கொண்டு போகிறார்கள். நிஜப்புலி ஒரு நாள் வரத்தான் போகிறது என்று நினைக்கும்போதே கிழவனின் முகம் பிரகாசமடைந்தது.

---

## அவை...மீண்டும்

ஓ...அதோ
அந்த
சிறைக்கதவுகள்
திறக்கப்படும்...ஒலி

சிறைச் சுவர்கள்
தமக்குள்... ஏதோ
புரியாத பாசையில்
பேசிக் கொண்டன.

சிறைவைக்கப்பட்டவர்கள்
எங்கோ
மறைந்து போனார்கள்
என; ஆம்
அந்த சிறைச் சுவர்கள்
மௌனத்திற்குள்
கரைந்து போனது
திரும்பவும்
தமிழ் இனத்தின்
இரத்தக் கறைகள்
படிவதற்காய்
அவை மீண்டும்
வெள்ளையடிக்கப்படுகின்றன.

**ரமணன்**

---

## நியாயமா?

நாளைய
பயணிப்புகள்
இன்றைய
சூரியனின்
ஆயுதங்கள்...
இரை மீட்டலுக்காய்
புற்களை
விரைவில் கடிக்கும்
மாடுகள்...
எதிர்கால
தேவைக்காய்
இப்போதே
கருக் கொள்ளும்
மேகங்கள்...
நாளைய இரவுக்காய்
சூரியனிடம்
ஒளி பெறும்
நட்சத்திரங்கள்...
ஊர்ந்து ஊர்ந்து
மாரி மழைக்காய்
உணவு சேர்க்கும்
எறும்புகள்...
இன்னும் இன்னும்
எல்லாமே
எதிர்காலத்துக்காய்
இயங்க...
ஆறாமறிவையும்
வைத்துக்கொண்டு
நீ மட்டும் ஏன்
அடுத்த விநாடியை
அறிய மறுக்கிறாய்
மனிதா?....

**ஆ-சுதர்ஷிகா**

---

## உறவு

உறவு
தொடுக்கிறது காற்று
இதழ்களின்
பலம்,பலவீனம்
புரிந்து கொண்டு.
ஒரு தடவை மறுத்து
இன்னொரு தடவை
அதிலே மகிழ்ந்து விடும்
கிளைகள் மனம்.
வேர் பிடுங்கி
உயிர் நடும்
மலர்களின் புன்னகை.
வலி எடுக்க
வேதாந்தம் தொட்டு
விலகுகின்றபோது
இறுகப் பற்றிக் கொண்டு
நெரிந்து விடுகிறது
காற்று
இப்போது
புன்னகைகளை முறித்தெறிந்து
மூச்சிறுகி
இணையும் உறவு.

**ப.அருள்நேசன்.**

## சொற்சிலம்பம் - 101

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | பி | ட | டு | ன | தூ | பு |
| மா | கு | ல் | பா | ந் | மி | ல |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | வ |
| ஜெ | னா | ப | லி | னை | சீ | இ |
| ம் | ட் | தா | ஷி | ர் | லி | நா |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | வு |
| ங் | வ | கே | ன் | கி | த் | ஹி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 99 இன் விடைகள்

01. ஹிரோசிமா.

02. லண்டன்.

### சொற்சிலம்பம் - 99 இன் பரிசுக்குரியவர்

ம.குமுதன்,
இல:130, பாடசாலைவீதி,
பண்டாரிகுளம்,
வவுனியா.

### சொற்சிலம்பம் - 99 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.சதுஷா, வாடியடி, பூநகரி.

02. தோ.அமெலினா, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

03. த.தமிழன்பன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

04. வேஜினி, மடத்தடி, யாழ்ப்பாணம்.

05. ஜெ.அர்ஜீனன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

06. K.காதீசன், நுணாவில், சாவகச்சேரி.

07. திவாகர், சிவநகர், உருத்திரபுரம்.

08. நிலாவரசி, அரசடிவீதி, நல்லூர்.

01. தமிழீழத்தில் காணப்படும் அதிக நச்சுத்தன்மை கொண்ட பாம்பு இனம் எது?

01) ....................................

02. உலகில் மிகப் பெரிய அரண்மனையைக் கொண்ட நாடும் மிகச் சிறியநாடும்?

01) ....................................

சொற்சிலம்பம்-101
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ....................................

முகவரி :- ....................................

....................................

## கைவண்ணம்



கா.தாட்சாயினி,
கிளி/புனித திரேசா ,பெ.க.





# பூரான்

பூரான் பூச்சி போல உள்ள முதுகெலும்பற்ற உயிரினம். இதன் உடல் தட்டையாகவும் நீளமாகவும் இருக்கும். பார்ப்பதற்கு கம்பளிப்பூச்சி போலவே இருக்கும். இதன் உடல் பல கண்டங்கள் உள்ளன ஒவ்வொரு கண்டத் திற்கும் மேல்தட்டும் கீழ்தட்டும் உண்டு. இவை இரண்டும் பக்கவாட்டில் மெல்லிய புறத்தொலி ஒன்றினால் இணைக்கப்பட்டிருக்கும். தலையில் ஒரு சோடி உணர்கொம்புகளும் பல சாதாரண கண்களும் உள்ளன. ஒவ்வொரு கண்டத்திலும் ஒரு சோடிக்கால்கள் உள்ளன. வாய் உறுப்புகளில் ஒரு ஜதை அரை தாடைகளும் இரண்டு ஜதை துருவுதாடைகளும் உள்ளன.

பொதுவாக இவை 2.5 செ.மீ நீளம் வரை இருக்கும்.வெப்பமண்டலப்பகுதிகளில் காணப்படும் ஒரு சில இனங்கள் 20முதல் 25 செ.மீ. நீளம் வரை உள்ளன. சாதாரணமாக இதன் உடல் 35 கண்டங்களை உடையது. எனினும் இனத்திற்கு இனம் இந்த எண்ணிக்கை 17முதல் 173வரை இருக்கும்.

சில இனங்களின் தலைப்பகுதியின் கீழ் அமைந்துள்ள கால்கள் நச்சுக் கொடுக்குகளாக அமைந்துள்ளன. தனது இரையான சிறிய விலங்குகள், பூச்சிகளை செயலிழக்கச்செய்ய இந்த நச்சை இது பயன்படுத்துகிறது. வெப்பமண்டலப்பகுதிகளில் காணப்படும் ஒரு சில இனங்களின் நச்சைத் தவிர



மற்றவற்றினால் மனிதர்களுக்கு எவ்வித தீங்கும் இல்லை.

இவை முட்டையிடும் வகையைச் சேர்ந்தவை. பூரான் கற்களின் அடியிலும், மரக்கட்டைகளின் அடியிலும் இருண்ட இடங்களிலும் வசிக்கும். இது ஒரு இரவு இரைதேடி. இது கிலாப்போடா வகுப்பைச் சேர்ந்தது.

## விடுகதைகளும் விடைகளும்

01. இரட்டைப் பிறவிகள்தான் ஒருத்தி உயர்ந்தால் ஒருத்தி தாழ்வாள் அது என்ன?
02. கடுகு, மிளகு கலக்காத ரசம் கடித்தால் உறைக்காத ரசம் அது என்ன?
03. அடிக்கடி தவிக்க விடுவான்; அள்ளித் தர ஓடி விடுவான் அவன் யார்?
04. உப்பைத் தின்றவன் உறங்காமல் அலைகிறான்- அவன் யார்?
05. உலகுக்கெல்லாம் ஒரே போர்வை அது என்ன?
06. ஓயாமல் வேலை செய்வான் உறங்கினால் எழுப்ப ஆளில்லை அவன் யார்?

விடைகள்:-
1. தராசு, 2. அதிரசம், 3. பசி
4. கடல் அலை, 5. வானம், 6.இதயம்

## படத்தில் நான்கு தவறுகள் உள்ளன கண்டுபிடியுங்கள்




## மீனின் ஆசை




(தொடரும்)



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 14

### பகுதி -61

"நீங்கள் அவங்கள அவதானிச்சனீங்கள். அவங்கள் சொன்னதக் கேட்டனீங்கள். ஆனா அவங்க உங்கட உணர்வுகளப் புண்படுத்தினதால அவங்களோட கதைக்க விருப்பமில்ல.... அப்பிடித்தானே?" என்று நான் சொன்னேன்.

"ஓமோம். ஆக்கள் சுத்த மோசம். அதால அவயளோட நான் கதைக்கிறயில்ல. ஆனா ட்றக்கோட கதைப்பன். அதுக்கு போயிற்று வா எண்டும் சொல்லுவன்"

"ட்றக்கால உங்கட உணர்வுகளப் புண்படுத்தக் கூடிய எதயும் சொல்ல ஏலாது... அப்பிடித்தானே?" என்று நான் கேட்டேன்.

"ஓம் ட்றக் அப்பிடியெதயும் செய்யாது" டிப்ஸ் சொன்னான்.

மணல் பெட்டிக்கு நடந்து சென்றவன் அதன் விளிம்பில் அமர்ந்துகொண்டு விரல்களை மணலுக்கூடாக அளைந்தான். ஒரு பொம்மைப் போர் வீரனை இழுத்தெடுத்து கையில் வைத்து நீண்ட நேரமாக அதையே பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு மண்ணை நோக்கித் திரும்பி தன் கையால் ஒரு குழியைத் தோண்டி அந்த பொம்மை வீரனை அதில் புதைத்து விட்டான். மணல் கும்பத்தின் உச்சியில் ஒரு பொம்மை ட்றக்கை வைத்து விட்டான். ஒரு சொல்லுக் கூடப் பேசாமல், தனது உணர்வுகளை நிகழ்த்திக் காட்டுவது போல் இந்தக் குறியீட்டு வெளிப்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

பிறகு ஒரு சிறிய வாளி, பிளாஸ்ரிக் கோப்பை, ஒரு கறண்டி, ஒரு சட்டி, ஒரு அரிதட்டு என்று எடுத்துக் கொண்டான். அவற்றை மேசைமீது ஒழுங்காக அடுக்கிக் கொண்டான்.

"இப்ப நான் பலகாரம் சுடப் போறன்" என்று அறிவிப்பாகச் சொன்னான். இண்டைக்குச் சமையலாளுக்கு விடுமுறை. அதால நான் பலகாரம் சுடப்போறன். என்ர கவலைகள மறக்க அது உதவும்" என்றான்.

பிறகு மணலை அளந்து கோப்பையில் கலக்கத் தொடங்கினான்.

"நான் மாவையும் சீனியையும் கொழுப்பையும் எடுப்பன். அரிதட்டை எடுத்து மாவை அரிப்பன். மூண்டு தரம் அரிப்பன். இப்படித்தான் அரிப்பன். மாவை மென்மையாகத் தான் இப்பிடி அரிக்கிறது டிப்ஸ்... இது பலகாரத்த ருசியாவும் ஆக்கும். கொழுப்பையும் சேர்ப்பன் வெண்ணெய்யைத்தான் சிலநேரங்களில கொழுப்பெண்டு சொல்லுறது. வேற பொருள்களையும் இப்பிடி கொழுப பெண்டு சொல்லுறது. பன்றிக் கொழுப்பு, மாஜறின், மரக்கறி எண்ணெய்யையும் இப்பிடிச் சொல்லுறவை."

அவன் தான் ஒரு பாத்திரமாகவே ஆகிவிட்டிருந்தான்.

"இப்ப நான் பாலைச் சேர்க்கப்போறன். வெதுப்புற அடுப்பை முதலே சூடாக விடுகிறதுக்கெண்டு அப்போதயே அத மூட்டி விட்டதக் கவனிச்சனியோ டிப்ஸ்? இப்ப நான் பலகாரம் வெட்டுற அச்சுகள எடுக்கப் போறன். அதுகளில பலவடிவங்கள் இருக்குது. இது முயல், இது நட்சத்திரம், இது பூசணிக்காய், உனக்கு இதில எது விருப்பம்? உனக்கு ஏதாவது விருப்பமா இருந்தா அத என்னட்டத்தா. அல்லது இந்தப்பக்கம் தள்ளிவிடு. நான் சொல்லுறது உனக்கு விளங்கும் எண்டு நினைக்கிறன். அச்சு எண்டா என்னெண்டு விளங்கும் தானே? இந்த முயல் பலகாரத்தயா சுடச் சொல்லுறீங்கள். சரி நான் இப்ப மாவைத் தட்டிப்போட்டு, இந்த மரக்குழவியால உருட்டி மெல்லிசாக்கிப் போட்டு, நீ தெரிஞ்சு தந்த அச்சால வெட்டப் போறன்.

அவனுடைய பலகாரக் கலவை இறுக்கமாக வரவில்லை. அவன் நிமிர்ந்து என்னைப் பார்த்தான். " உண்மையான பலகார மாவெண்டா நல்ல பசை யா இருக்கும்" என்றவன்,தொடர்ந்து, "ஆனா நான் இதுகளும்



அப் பிடித்தான் எண்ட மாதிரி நடிக்கப்போறன். அதுகள நான் முயல் அச்சால சரிசெய்யப் போறன் இப்ப தட்டில போட்டுத்தான் சரிக்கட்ட வேணும். உண்மையான பலகாரம் எண்டா முதலே வெட்டி விடலாம்" என்றான்.

"எனக்கு விளங்குது" என்றேன் நான்.

" இப்ப நான் முதலே சில நேரங்களில சூடாயிருக்கிற அடுப்பில இதுகள வைக்கப்போறன்" என்றான். விளையாட்டு அடுப்பில, மணல் பலகாரங்களை வைத்த தட்டை வைத்தான். " இப்ப நான் எங்கயாவது இருந்துகொண்டு பலகாரங்கள் வேகும் மட்டும் காத்திருக்கப்போறன். மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந்து கொண்டு தனது 'ஒக்ஸ்போட்' சப்பாத்துகளின் நூலை அவிழ்த்துத் தளர்த்திவிட்டான். பிறகு சப்பாத்துகளைக் கழற்றிவிட்டு, மணல் பெட்டிக்குள் ஊர்ந்து இறங்கி பாடத்தொடங்கினான்.

நான் இதில இருக்கிற வேளை
பலகாரங்களே வேகுங் கள்.
காலுறையை நான் கழட்டும் வேளையிலே.
கால்களின் மேலே மணலைச் சொரிகையிலே.
கால் விரல்கள எண்ணும் வேளையிலே.
நீங்கள் வேகுங்கள் பலகாரங்களே.
ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து



# மூடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம்:- வி.பி.யோசப்

ஒரு காலில விரல் ஐந்து
ஒன்றுக்குப் பிறகு என்ன வரும்?
நான் என்ன சொன்னேன்?
யோசி! யோசி! யோசி!
மீண்டும் சொல்கிறேன்.
என்னைப் பார் நல்லாய்க் கேள்
ஒன்று, இரண்டு மூன்று,நாலு, ஐந்து.
நான் சொன்னது கேட்டதா?
இப்ப நீ சொல்லு!
ஒன்று...ஒன்று...ஒன்று.
சொன்னது கேட்கயில்லையா?
வடிவாக் கேள்.
மொக்குப் பொடியா
ஒன்று... இரண்டு...இரண்டு! இரண்டு!
சரி இப்ப சொல்லு.
ஒன்று...இரண்டு...மூன்று...நாலு...ஐந்து
சரி...சரி...சரி. கெட்டிக்காரன்
இந்தா உனக்கு ஒரு பலகாரம்.

அவன் சிரித்தான். " அப்ப... ஒரு காலில ஐஞ்சு விரல்களும் மற்றக் காலில ஐஞ்சு விரல்களுமாக சேர்த்து இரண்டு காலிலலையும் பத்து விரல்கள்" என்று சொன்னவன். " உனக்கு எதையும் கற்றுக் கொள்ள முடியாதா? அல்லது உனக்குத் தெரிஞ்சும் எனக்குச் சொல்லாம இருக்கிறியா?" என்று சொல்லிக் கொண்டான்.

" சில வேளைகளில உங்களுக்கு மறுமொழி தெரிஞ்சிருக்கும், ஆனா நீங்க சொல்லுறயில்ல அப்படித்தானே?" என்று நான் கேட்டேன்.

"எனக்கு எப்ப பதில் தெரிகிறது எப்ப பதில் தெரியவில்ல எண்டு எனக்குப் புரியிறயில்ல" அடிக்கடி தன்மீது திணிக்கப்பட்டிருக்கக் கூடிய குழப்பத்துக்கு வாய் மொழி வடிவம் கொடுக்கும் விதத்தில் அவன் சொன்னான். அவன் மல்லாக்காக மணலில் படுத்துக்கொண்டான். தனது கால் விரல்களால் வாயைத் தொடும் வரை உடலை வளைத்துக் கொண்டே வந்தான். " எனக்கு என்னென்னவெல்லாம் செய்யமுடியுதெண்டு பாத்தீங்களா?" என்றவன். "என்னால இரண்டா வளையமுடியுது. ஆனா எனக்கு அத எப்படிச் செய்யுறதெண்டு யாரும் சொல்லித் தரயில்ல." குப்புற உருண்டு கொண்டவன் எழுந்து நின்று மணலில் மேலும் கீழுமாகத்துள்ள ஆரம்பித்தான். மேசையை நோக்கி ஓடிச்சென்றவன், சூப்பிப் போத்தலை எடுத்துக்கொண்டு மீண்டும் மணல் பெட்டிக்கு ஓடினான். கீழே படுத்துக்கொண்டு சிறிய குழந்தையொன்றைப்போல் சூப்பிப் போத்தலை உறிஞ்சினான் தன் கண்களை மூடிக்கொண்டான்.

" நான் குழந்தையாக இருந்த போது..." என்று தொடங்கினான்.

அவன் ஏதாவது சொல்லுவான் என்று நான் காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவன் சொல்ல வந்ததைச் சொல்லவில்லை.

" சரி... நீங்கள் குழந்தையா இருந்த போது எண்டனீங்க... அப்ப என்ன நடந்தது?"

" நான் குழந்தையா இருந்த போது..." மீண்டும் தொடங்கியவன் திடீரென்று எழுந்து அமர்ந்து கொண்டான். " இல்லை... இல்லை... இல்லை" என்றான். வேகமாக மணல் பெட்டியை விட்டு அவன் வெளியேறினான்.

" நான் ஒரு குழந்தையில்லை. நான் ஒருபோதும் குழந்தையா இருக்கயில்ல"

" இப்ப நீங்க குழந்தையில்லை. அதோட எப்பவாவது குழந்தையா இருந்தனீங்க எண்டு நினைக்கவும் விரும்பவில்லை. அப்படித் தானே?" என்றேன்.

அறைக்குக் குறுக்காக நடந்து சித்திரம் வரையும் பீடத்தை நோக்கிச் சென்றான். "இந்தப் பீடத்தில பதினொரு வேற வேற நிறங்களில தீந்தைகள் இருக்குது. இந்த வெவ்வேற நிறங்கள் வேற வேற உள்ளீடுகள கொண்டு செய்யப்பட்டவை. அது உங்களுக்குத் தெரியுமா?"

"அதுகள் அப்பிடியோ செய்யப்பட்டிரு[illegible]கு?" என்று நான் கேட்டேன்.

"ஓம்" என்ற அவன் அமைதியிழந்தவனாக அறையில் சுற்றிவந்தான்"

" மணல் பெட்டிக்கு வெளியிலதான் நீங்கள் நிற்கப் போறீங்களெண்டால், உங்கட சப்பாத்துக்களையும் காலுறையையும் போட்டுக் கொள்ளலாமே" என்று நான் சொன்னேன்.

" ஓம் என்ர கால்கள் சரியாக் குளிருது இந்த நிலம் இண்டைக்குச் சரியாக் குளிருது." என்று அவன் பதில்சொன்னான்.

அவன் தன் காலுறைகளை போட்டுக் கொண்டான்.

தனது சப்பாத்துகளையும் அவற்றினுடைய நூல்களையும் என்னிடம் தந்து கொண்டே, " எனக்கு உங்கட உதவி தேவையெண்டா நீங்க உதவி செய்வீங்க. எனக்கு உதவி தேவையில்லாத நேரத்திலும் நீங்கள் உதவி செய்ய வேணுமெண்டு நான் விரும்பினா நீங்கள் உதவுவீங்கள்" என்றான்.

" அப்பிடித்தான் எல்லாம் நடக்குதாக்கும்" என்று சொன்னேன்.

(தொடரும்)



# உருக்கு மரங்கள்

எமது பிரதேசத்தின் நகரப் பகுதி வீதியோர மரங்கள் மின்சார வளங்கள் காரணங்களுக்காக நூற்றுக் கணக்கில் அழிக்கப்பட்டுள்ளன. சரியாகச் சொன்னால் நான்கு கிலோ மீற்றர் நீள வீதிக்கு மட்டும் 122 பெரிய பச்சை பாலை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.

மின்சார வழங்கலிற்காக இன்னும் பல பாலை மரங்கள் அழிக்கப்பட வேண்டி வரலாம். அபிவிருத்தி அவசியத்தின் அடிப்படையில் இது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால் திருத்தம் செய்ய முடியாததா? என்பது முக்கியமான கேள்வியாகும்.

தமிழீழத்தின் இலையுதிர் காடுகள் பொருளாதார ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுவதில் பாலை மரங்களிற்கு (Manilkara) பெரும் பங்கு உண்டு. அவற்றின் நிழல், குளிர்ச்சி என்பன பொருளாதார நலன்களுக்கு அப்பாற்பட்ட மேலதிக கடமைகளாகும். மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு எமக்கு நீண்ட கால சேவை செய்துவரும் பாலைமரங்களை அழித்து விட்டோம். ஆனால் அவற்றின் 'சேவைக் காலம் இன்னும் தீர்ந்துவிடவில்லை. அவற்றின் உற்சாகமும் சமூக சேவை விருப்பும் தீர்ந்துவிடும் முன்னரே நாம் அவற்றை தீர்த்துக்கட்டிவிடுகிறோம். அகற்றப்படும் மரங்கள் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டாலும் அவை 25 வயதில் ஓய்வு பெற்றுவிட்ட நிலை தான்.

மின்சாரத்தேவை அவசரம் பற்றி யாவரும் அறிந்தே உள்ளோம். அரசியல் காரணங்களுக்காக தொடர்ந்தும் நாம் இருட்டில் இருக்கவேண்டியதில்லை. 'வெளிச்சம்' வழங்குவதில் முனைப்புடன் இருக்கும் சேவை நிறுவனங்கள் மீது மக்களுக்கு பெரும் கடமைப்பாடு உண்டு என்றாலும் பிரதிகூலங்கள், அனுகூலங்களை மிஞ்சிவிடக்கூடாது என்பதே பிரச்சினையாகும்.

வீதியோர மரங்களைப் பெருக்குவதில் மேலைநாடுகள் பெருத்த அக்கறை காட்டிவருகின்றன. அவற்றை சிதைக்காமலே மின்சாரக் கம்பிகளை 'நிலக்கீழ்ப் போக்கு முறை'யில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இது போன்ற நடவடிக்கைகளை நாமும் எடுத்தல் மூலம் 'கூழையும் குடித்து மீசைகளையும் காப்பாற்றலாம்' தற்காலிகத்தை வளர்த்தலை விடவும் நிரந்தரங்களை பேணுவதில் கவனம் செலுத்துவோம்.


எமது நலனில் அக்கறை காட்டும் மரங்களின் (?) சேவை நீடிப்புக்கு ஆதரவு வழங்குவோம். அவற்றின் சேவை வளரவும் வாழ்த்துவோம்.

'சூழல் குளிரச்செய்வோம், தேசம் மிளிரச் செய்வோம்'

**உந்த சுனாமித்தண்ணி வந்து எல்லா இடமும் வெள்ள மாகிக் கிடந்த நேரத்தில எங்கட மருத்துவப்பிரிவுக் காரர் தானே முழுக்க முழுக்க நிண்டு கவனமாய் எல்லாம் செய்தவை. அவையள் நிண்ட இடங்களில எங்கையாவது சனத்துக்கு கடல்தண்ணியால தொற்றுநோய் ஏற்பட்டு இழப் புகள் நேர்ந்ததோ ? இல்லைத்தானே! இந்தியாவில மகாராஸ்டிரா மாநிலத்தில அடிச்ச மழை யைத்தொடர்ந்து ஏற்பட்ட வருத்தங்களால இதுவரைக்கும் 224 பேர் செத்திருக்கினம். நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடாக ஆக முதலே நல்லதொரு நிலைக்கு வந் திருக்கிறம்**

# ஏ9 – ஏரம்பு

உலா 47



வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! சேச்சே! இப்பிடி கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ளை எவ்வளவு உல்லாசமாய் திரிஞ்ச மனுசன் ஒரேயடியாய் போயிட்டிதே! என்ன இருந்தாலும் சந்திரிகாவின்ரை வலக்கையின்ரை வாழ்நாள் இப்பிடியாயீட்டிதே! ஆளாளுக்கு அரச தரப்பில ஒவ்வொருததரும் புலியள் தான் செய்ததவையெண்டு சொல்லினம். சந்திரிகாவும் ரூபவாயினியில வெள்ளைச்சீலையோட வந்து, மூஞ்சையை நீட்டிக்கொண்டு 'முதற்கட்ட விசாரணையளில இருந்து புலியள் தான் செய்தவை எண்டு எங்களுக்குத் தெரியிது' எண்டு சொல்லிறா.

எனக்கொண்டுமாய் விளங்கேல்லை. அதென்னண்டு பாருங்கோ, விசாரணை தொடங்க முன்னமே அப்பிடி அரசாங்கம் சொல்லிது? ஒரு வேளை அரசாங்கத்துக்கு ஞானக்கண், பூனைக்கண் ஏதாவது இருக்குமோ? சனாதிபதிக்கு ஒண்டு அப்பிடித்தான்! ஆனாலும் நடுராத்திரி இருட்டுக்குளை நடந்ததைக் கண்டு பிடிச்சதாச் சொல்லிறவை, ஏனாம் பிந்துனுவெவவில நடந்த பட்டப் பகல் படுகொலையளை சாட்சியள் இல்லையெண்டு குற்றவாளியளை விடுதலை செய்தவை? உதென்ன சேட்டை விடிற, பேய்ப்பட்டம் கட்டிற விசர்க்கதை! எங்கட சனம் இப்ப முந்தி மாதிரி இல்லை.

சும்மா நடக்க வேண்டியதைப் பார்க்காமல் அலட்டிக்கொண்டிருந்தால் சனமே சேர்ந்து சாத்திப் போடும். அதுகும் அண்டைக்கு இணுவிலில நடந்த சம்பவத்துக்கு 'தற்செயலான விபத்தும், மிருகத்தனமான கொலையும்' எண்டெல்லே அரச பத்திரிகையள் தலைப்புக் கொடுத்ததுகள். காலாகாலமாய் தமிழரைப் பலியெடுத்த பழக்கத்திலை எங்கட உயிர்கள் அவையளுக்குப் பெரீசாய் படேல்லைப்போல!

400 பேரைச் செம்மணியில கொன்று புதைச்ச மிருகங்களுக்கு பதவி உயர்வு. ராஜபக்ஸவுக்கு வேற வழியில்லாமல் மரணதண்டனை எண்டு நீதிமன்றத்திலை சொல்லிப் போட்டு, நிறைவேற்றாமல் ராஜபாது

சனத்தின்ரை வயித்தெரிச்சல் சும்மாவிடுமோ இல்லையோ? அந்த வயித்தெரிச்சல் தான் அழிச்சிட்டிது.

இன்னுமொரு விசயம் எனக்கு வடிவாய் விளங்கேல்லை: யுத்த நிறுத்த காலத்தில இழக்கப்பட்ட அதியுயர் முக்கியஸ்தர் இருந்தும் நாங்கள் சமாதான முயற்சியளைத் தொடருவோம், எண்டெல்லாம் அரசாங்கம் சொல்லிது. 1994ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த கதிர்காமம் அதி முக்கியஸ்தர் எண்டால் 1983 இல போராட்டத்தில இணைஞ்சுகொண்ட எங்கட தளபதி கேணல் சங்கர் எவ்வளவுக்கு முக்கியமானவர் !

நீதி, நியாயம் எண்டால் அது எல்லாருக்கும் ஒரேமாதிரியாய் இருக்கோணும். மற்றது அவரொருத்தர் ஜயந்த தனபால எண்டவர் ஐ.நா. செயலராய் வர வெளிக்கிட்டவர். அவர் சொல்லிறார் ஒண்டரை வருச

மாய் கருணா குழு அரசாங்கத்துக்குத் தெரியாமல் தனிய காத்தைக் குடிச்சுக்கொண்டு ஒளிச்சிருக்கிதாம். நல்ல காலம் உப்பிடியொரு கேஸ் போயிருந்தால் ஐ.நா. சபை இன்னும் பயங்கரமான படுகுழிக்கிள்ளை பொறிஞ்சிருக்கும், அருந்தப்பு!

ஆ.. நான் நாட்டுப்பிரச்சினையைச் சொல்ல வெளிக்கிட்டதில என்ரை பிரச்சினையைச் சொல்ல

தொங்கிற உடுப்புகளிலை லண்டனும், கலிபோர்னியாவும், சிக்காகோவும், சாக்குபாயும் தான் தெரியிதெண்டு. ஆனால் அந்தப் பொடியன்ரை ரீ-சேர்ட்டில 'take me tonight (இன்றிரவு என்னை எடுத்துக் கொள்)' எண்டு கிடந்திச்சிது. போய்

தள்ளி விழுத்தீட்டு, நாலு மிதி மிதிக்கோணும் மாதிரிக் கிடந்திச்சிது. மாடு மாதிரி வளர்ந்த ஜென்மத்துக்கு வெட்கம், கிட்கம் இல்லாமல் இல்லாமல் போயிட்டிதே ! சிலநேரம் அர்த்தம் தெரியாமல் போட்டிருக்குதோ எண்டும் நினைச்சனான்.

ஆனாலும், அவற்றை கலாதியான வெளிக்கிடலைப்

முன்வைக்கிறீங்கள். எனக்கும் முன்வைக்கிறதுக்கு கொஞ்ச விசயங்கள் இருக்கிது. ஆனாலும், வேலைப்பழு காரணமாய் எழுதிறதுக்கு நேரமில்லை. தயவுசெய்து எனக்காக நீங்கள் இதுகளை எழுதோணும்", எண்டு கெஞ்சிக்கேட்டார். "என்ன டொக்ரர்! இது வீட்டுக்கு வீடு வாசற்படி போல இருக்கிது. உங்களுக்கு இல்லாததே ! சொல்லுங்கோ !".

"இண்டைக்கு மருத்துவப் பணியில ஈடுபட்டிருக்கிற எங்கட தரப்பின்ரை சுமையளை ஒரளவுக்கெண்டாலும் நோயாளியளாய் வாற ஆக்களும், அவையின்ரை சொந்தக்காரரும் புரிஞ்சு கொள்ளோணும். ஏற்கெனவே சிங்கள பேரினவாதத்தால சீரழிக்கப்பட்டிருக்கிற எங்கட கல்விப்பாரம்பரியம் ஏதோ தன்னைச் சுதாகரிச்சு வளர்றதுக்கு தலைப் பட்டுக்கொண்டிருக்கிது. ஆசிரியர் பற்றாக் குறையளுக்கு மத்தியில ஏதோ இருக்கிறவைதான் தங்களால முடிஞ்சளவுக்கு நல்லமாதிரிச் செய்யினம்.

சில பெற்றோர்மார் ஆசிரியர்மாரைக் குற்றம் சொல்லிறது, குறை கண்டுபிடிக்கிறதிலையே கண்ணாயிருக்கினம். எத்தினை நெருக்கடியளுக்கு மத்தியில 40, 50 பிள்

கோணும் எண்டுகொண்டு கலைத்துறை இல்லாட்டி வர்த்தகத்தைத் தான் எடுத்துப்படிக்கினம். இந்தப் போக்குக்கு பெற்றோரும் தான் உடந்தை! எல்லாரும் தங்கட தங்கட வல்லமைக்கேற்றபடி படிச்சு முன்வரோணும். கூடவே சமூகத்துக்கு அத்தியாவசியமாய் இருக்கிற மருத்துவத்துறையின்ரை அவசியத்தை உணர்ந்து அதையும் படிக்கோணுமோ இல்லையோ? ஒரு வயசுக்கு மூத்தவர் நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம்".

"ஓமோம் டொக்ரர் நீங்கள் சொல்லிறது மெத்தச்சரி. கணிதம், விஞ்ஞானம் போன்ற துறையளில திறமை இருக்கிற பிள்ளையள் சுகமாய் பாஸ் பண்ணிறதுக்காக மற்றதுகளுக்குத் தாவாமல் சமூகத்தின்ரை தேவையளை உணர்ந்து படிக்கோணும். வெறுமனே பட்டமே எங்கட வாழ்க்கையாகாது. எங்களால என்ன முடியிது எண்டிறதுதான் முக்கியம்.

இல்லைப் பாருங்கோ! உந்த சுனாமித்தண்ணி வந்து எல்லா இடமும் வெள்ளமாகிக் கிடந்த நேரத்தில எங்கட மருத்துவப்பிரிவுக் காரர்தானே முழுக்க முழுக்க நிண்டு கவனமாய் எல்லாம் செய்தவை. அவையள் நிண்ட இடங்களில எங்கையாவது சனத்துக்கு கடல்தண்ணியால தொற்றுநோய் ஏற்பட்டு இழப்புகள் நேர்ந்ததோ ? இல்லைத்தானே!

ஆனால், இந்தியாவில மகாராஸ்டிரா மாநிலத்தில அடிச்ச மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வருத்தங்களால இதுவரைக்கும் 224 பேர் செத்திருக்கினம். நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடாக ஆக முதலே நல்லதொரு நிலைக்கு வந்திருக்கிறம். அதை இன்னும் வளர்த்தெடுக்கிறதுக்காக நீங்கள் சொல்லிற

# முன்னோடியான கட்டுமானங்கள் எமது தேசத்தில் இருக்கிறது

காப்பு குடுத்துக் கூட்டிக்கொண்டு திரியினம். ஆளாளுக்கு சர்வதேசங்களில இருந்தெல்லாம் கண்டனமும், கவலையும் தெரிவிக்கினமாம்.

இல்லை தெரியாமல் தான் கேட்கிறன். பிந்துனுவெவ விசயத்தில அப்பட்டமான அநியாயத்தீர்ப்பு வெளியிடப்பட்டதுக்கு பக்கத்திலை இருக்கிற 'பெரிய சனநாயகமோ' அல்லாட்டா கோபி அனானோ ஏதாவது வாய் திறந்தவையோ ?

சரி அதுதான் கிடக்கட்டும். சுனாமி அடிச்சு 8 மாதம் தாண்டீட்டிது. பொதுக்கட்டமைப்பை வேண்டுமெண்டே முடக்கி வைச்சிருக்கிறதுக்கு உந்த 2 தரப்பும் வாய்திறக்கயில்லை. பாவம் சனங்கள் இன்னும் நிரந்தரமாய் குடியிருக்கிற வசதியில்லாமல் முகாம்களில கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கினம். அதுகளுக்கொரு தீர்வைக்காணயில்லை. பெரீசாய் வந்திட்டினம் கண்டிக்கிறதுக்கு நான் சொல்லிறன் கதிர்காமர் என்னண்டு செத்ததெண்டு. பாவம் சனம் ஆயிரமாயிரமாய் முகாம்களில கஸ்ரப்படுகிதுகள். அந்தச் சனத்துக்கு தாங்கள் செய்யாட்டியும் பரவாயில்லை. அடுத்தவன் செய்யிற உதவியளையும் தடுத்துக்கொண்டு, தமிழ்ச்சனத்துக்கு அநியாயம் புரியவெண்டே 14 மாதத்துக்கிள்ளை 24 சர்வதேச நாடுகளுக்கு 35 மில்லியன் ரூபா செலவில சுத்தியடிச்சுத் திமிர் காட்டினால்

மறந்திட்டன். எல்லாரும் என்னைப் பேசினம் பாருங்கோ! நான் ஒரே குறை, குற்றம், நொட்டையள் தான் சொல்லிக்கொண்டிருக்கிறனாம். இது ஏதோ ஒரு பொல்லாத வியாதி எண்டொரு இங்கிலிஸ் பேரும் சொல்லிப் பயப்பிடித்திச்சினம். நான் வேணுமெண்டு ஒருத்தரையும் குறையள் சொல்லிறேல்லை. ஏதோ மனச் சாட்சிக்கு ஒத்துவராத விசயங்கள் கண்ணுக்கும், காதுக்கும் முன்னால வரேக்கிளை என்ரை வாய் சும்மா கிடக்கிறேல்லை.

உப்பிடித்தான் அண்டைக்கு ஏ9 ஆல போய்க்கொண்டிருக்கேக்கிளை வலு வாட்டசாட்டமாய், கலாதியாய் வெளிக்கிட்ட இளந்தம்பி ஒண்டு மோட்டர்சைக்கிளிலை வந்து, ஒரு கடையடியில இறங்கீச்சிது. உற்றுப் பார்த்த எனக்கு தலை சுத்தத்தொடங்கீட்டிது. எட என்னடா கறுமமாய் கிடக்கிது! உலகமே ஒரு நிமிசத்துக்கு விளங்காமல் போயீட்டிது எனக்கு!

நான் முந்தியே உங்களோட கதைச்சனான் தானே: தமிழை வளர்க்கிறதெண்டு நினைச்சுக்கொண்டு சில கடையள் பத்தாக்குறைக்கு 2 சுழி 'ன' வரவேண்டின இடங்களிலை பதிலாய் 3 சுழி போட்டு 'ண' எண்டு வேற தமிழை வளர்க்கினம் எண்ட விசயம். ஆனால், உந்தக் கடையளில

பார்த்தால் அப்பிடித் தோன்றேல்லை. மானம் காக்கிறதுக்காக போடிற உடுப்பு மானம் போறதுக்குக் காரணமாய் இருந்திடக்கூடாதோ இல்லையோ? எனக்குத் தெரியும், என்ரை குஞ்சுகள் நீங்கள் என்னை விளங்கிக்கொள்ளுவியள். ஆனால், இந்தச் சமூகம் அப்பிடியில்லையே. ஏதோ வாய்க்குள்ளை நுழையாத பெயரை வேற சொல்லி 'குறை சொல்லிற வருத்தம்' எண்டு பயப்பிடித்திப் போட்டிது. அதுதான் போனகிழமை டொக்டரிட்டைப் போனனான்.

என்ரை வியாதியை டொக்ரரிட்டை விபரமாய் சொன்னன். அந்தாள் விழுந்து, விழுந்து சிரிச்சிது. "ஐயோ ! ஐயோ ! அப்பு ! எவ்வளவு நாளைக்குப் பிறகு இப்பிடி வாய் விட்டுச் சிரிக்கிறன் தெரியுமே? நல்ல பகிடி விட்டீங்கள்". "என்ன டொக்ரர்! நான் பயந்துபோய் வந்து சீரியஸாய் கதைக்கிறன். நீங்கள் நிலைமை புரியாமல் சிரிக்கிறீங்கள்", வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நான் கேட்டன். "பேந்தென்ன குறை, குற்றம் சொல்லாமல் ஆராவது இருக்கினமோ? அதிலையும் நீங்கள் சொல்லிறதிலை ஒரு சமூக அக்கறையும், மனித நேயமும் இருக்கிது.

நியாயமான குறை, குற்றங்களைத் தான் மாற்றங்கள் ஏற்படோணும் எண்ட விருப்பத்திலை

ளையளை ஒரு வகுப்பிலை வைச்சு அவையள் படிப்பிக்க வேண்டியிருக்கிது. சிலநேரம் பொறுமையிழந்து அவையள் ஆத்திரப்பட்டு திட்டலாம், அடிக்கலாம். அது சரியெண்டு நான் நியாயப்படுத்த முயற்சிக்கேல்லை. ஆனால், பெற்றோர் சமூகம் ஆசிரியர்களுக்கு இருக்கிற சுமையை உணர்ந்துகொண்டு, ஏதாவது நடவடிக்கையளை முன்னெடுக்கோணும்.

ஒரு ஆசிரியருக்கு 20-25 பிள்ளையள் எண்டதை மீறாமல் ஒரு அளவு வைச்சிருந்தால் முன்வாங்கார் மட்டுமில்லாமல் முழுவாங்காரும் முன்னேறலாம். எல்லாப்பிள்ளையளின்ரை குறை, நிறையளையும் கவனத்தில எடுத்து நல்லமாதிரி பாடங்களை நடாத்தலாம்". "நீங்கள் சொல்லிறது விளங்கிது டொக்ரர். அரசாங்கம் மேலதிகமான ஆசிரியர்மாரை நியமிக்காமல் இருக்கிது. அதுக்கு தாய்தகப்பன் என்ன செய்ய?".

"சமூகத்தில இருக் கிற ஓய்வுபெற்ற சந்ததி இதுக்காக சேவைநோக்கில முன்வந்து, அவையளையின்ரை தராதரத்துக்கு ஏற்றமாதிரி கற்பிக்கலாம் தானே! ஏன் சொல்லிறன் எண்டால் மருத்துவத்துறையிலையும் பெரிய ஆட்பற்றாக்குறை நிலவிது. A/L படிக்கிற மாணவர்களும் சுகமாக கம்பஸுக்கு தெரிவா

மாதிரி கற்பித்தல்களிலை இருக்கிற சுமையைக் குறைச்சு, கூடுதலான ஆட்கள் எல்லாத்துறைகளிலையும் படிக்கிறதுக்கு கல்விச்சமுதாயமும், பெற்றோர்களும் ஆவன செய்யோணும். உங்கட விருப்பம் விளங்கிது".

"மற்றது டொக்ரர்கள் மட்டுமில்லாமல் ஆண், பெண் வேறுபாடில்லாமல் தாதி வேலைக்கும் கூடுதலான ஆட்கள் முன்வரோணும். தாதிப்பணி பெண்களுக்கு மட்டும் உரியதில்லை. இரண்டு தரப்பாரும் முன்வந்து பயிற்சி பெற்றால்தான் நோயாளியளை வடிவாகப் பராமரிக்க முடியும். மக்களுக்கு சேவைசெய்யிற எல்லாத் தொழில்களையும் மேன்மையாய் மதிச்சு எல்லாரும் இந்தத்துறையைக் கட்டியெழுப்புவோம் இதுதான் என்ரை கோரிக்கை", எண்டுகொண்டு என்ரை கையைப் பற்றினார் டொக்ரர்.

"உங்கட மனம் எனக்கு விளங்கிது டொக்ரர். வெறுமனே குறை சொல்லிற ஆட்களிட்டை, உங்கட மனக்குறையை கட்டாயம் எடுத்துச் சொல்லிறன் எண்டுகொண்டு அவரிட்டை இருந்து விடைபெற்றன், கூடவே இப்ப உங்களிட்டை இருந்தும் ! கவனமாய் இருங்கோ பேந்து சந்திப்போம் !

# ‘சிவபூமி’ சிறுவர் மனவிருத்திப் பாடசாலை

“பிறப்பிலேயே மனவளர்ச்சிக் குறைபாட்டுடன் பிறந்த எம் இனிய குழந்தைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அன்பர்களினால் இப்பாடசாலை நிறுவப்பட்டுள்ளது. இவ் அற நிலையத்தை சூரியன் சந்திரன் உள்ள காலம் வரை பேணிப் பாதுகாத்து நல்லமுறையில் வழிப்படுத்தி இச்சிறார்களை வாழ வைக்குமாறு கருணையுள்ளம் கொண்ட இனிய மானிடர்களை மனதார வேண்டுகின்றேன்”

என 2004 ஆம் ஆண்டு யூலைமாதம் 2 ஆம் திகதி சிவபூமி என்னும் சிறுவர் மனவிருத்திப் பாடசாலையை ஆரம்பித்தபோது சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்தார்.



இன்றைக்கு ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் இப்பாட சாலை பல்வேறு விதங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த 01-08-2005 அன்று அதன் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற்றது.

இறையருளாலும், பெரியோர்களின் ஆசியாலும் உருவாக்கப்பட்ட சிவபூமிப் பாடசாலை முதலாவது ஆண்டு



நிறைவை மகிழ்வுடன் பூர்த்தி செய்கிறது. எங்கள் பாடசாலையில் 84 பிள்ளைகள் இனிய மகிழ்வுடன் கற்றுவருகின்றனர். தாயகத் திலும் பிறநாடுகளிலும் வாழும் அன்பர்கள் வழங்கும் பேருதவியால் சிவபூமி அறக் கட்டளைப் பணிகள் நிறைவாக நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக் கின்றது சிவபூமி அறக்கட்டளை நிர்வாக சபை.

கடந்த ஒரு வருட காலமாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்துள்ளது என்றால் இதற்கு ஒரு மறுபக்கம் உண்டு. அதாவது இவ்வளவு பிள்ளைகள் இருந்திருக் கிறார்கள் இன்னமும் அதிகம் உள்ளார்களா? என்பது நெஞ்சைத் தொடும் கேள்விகளாகும்.

எங்கள் பாரம்பரியம் என்று சொல்வதா? பழக்கம் என்று சொல்வதா?இப்படியான பிள்ளை களை மூலைக்குள் இருத்தி வேடிக்கைப் பொருளாக்கி நசுக்கு வது அல்லது அப்பிள்ளைகளை இம்சைப்படுத்துவது இதுதான் பொதுவான வழக்கமாக இருந்தது.

உண்மையில் இவ் வாறான பிள்ளைகள் தனித்துக் கவனமெடுத்தால் அவர்கள் தனித்துவமாக மிளிருவார்கள் என் பதை எத்தனைபேர் உண ருவார்கள்.

வெளிநாடுகளில் இவர்களுக்கென தனித்துவமான செயற்பாடுகள் உள்ளதை எம்மால் அறிந்து கொள்ளும் போது, எங்களது இவ்வகை யான பிள்ளைகளை தனித்துக் கவன மெடுக்கவேண்டிய தேவையை நாம் உணர வேண்டாமா?

பொதுவாகவே பிள்ளைகள் முன்பள்ளிக்காலத்திலேயே இருந்து தனித்துக் கவனமெடுக்கப்பட வேண்டியவர் கள். அவ்வாறு தனித்துக் கவனமெடுக்கும் போது தான் அவர்கள் ஒளிரும் பொன் ஆவார்கள்.

குழந்தைகள் மாற்றத்தை நாடும் ஆக்கபூர்வமான கற்பனையாளர்கள். சுறுசுறுப்பானவர்கள்.எனவே இவர்களுக்கு ஒரு தனிப்பட்ட சூழலை ஏற்படுத்தவேண்டும். ஆனால் இச்சூழல் இவர்களை அச் சுறுத்தக் கூடாது. விளைவுகளை நினைவுபடுத்தக் கூடாது. அறிவுரைகளைக் கூறக்கூடாது. மாறாக இது இவர்களின் நட வடிக்கைகளை வழிகாட்டி நடத்தவேண்டும் என்கின்றார் பிரபல மனோதத்துவ நிபுணர் ஷ.அமனஷ்லீலி.

எல்லாக் குழந்தை களுக்கும் பொருத்தமான விதிஇது. மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகள் மட்டில் எப்படியாக அமையும்.

இவர்கள் இன்னமும் கூடுதலாகக் கவனம் எடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை சிவபூமிப் பாட சாலையை பார்வை யிடும் போது உணரலாம்.

அதனை மெய்ப்பித்தது முத லாண்டு நிறைவு நாளில் அவர்கள் நடாத் திய கலை நிகழ்ச்சிகள். ஆடல், பாடல் அபிநயத்தோடு ஆனந்தமாக, சிவபூமி மாண வர்கள் உள்ளார்கள் என்பதை அன்றைய நிகழ்வு புலப்படுத்தியது.

அன்றைய நிகழ்வு மாத்திரம் அல்ல. சிவபூமி மாணவர்களால் நடாத்தப்பட்ட வாணிவிழா கூட அவர்களது திறமையைக் காட்டியது.

என்றென்றும் மனிதாபிமானம் மிக்க ஆசிரியராக இருக்க வேண்டுமெனில் குழந்தையோடு குழந்தை யாக வாழவேண்டும் என்று மனோதத்துவ நிபுணர் கூறுகின்றார்.

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்” என்ற மகுட வாசகத்தைக் கொண்ட சிவ பூமியின் ஆசிரியர்கள் பிள்ளைகளோடு பிள்ளை களாகவேமாறி அவர் களை உற்சாகப் படுத்து கின்றார்கள்.



இவ்வாறான நட வடிக்கைக்கு சிவபூமி நிர்வாகம் கொடுக்கும் முக்கியத்துவம் பாராட் டுக்குரியது. அதனால்தான் 5 ஆசிரியர் களுடனும் 23 மாணவர்களுடனும் தொடங்கிய இப்பாடசாலை 13 ஆசிரியர்களையும் 84 மாணவர்களையும் கொண்டதாக மாறியுள்ளது.

அது மாத்திரம் அல்ல பாடசாலை அதிபரும்,ஆசிரியர் குழுவும் வருமான நோக்கமின்றி சேவை நோக்குடன் செயற்பட்டு வருவதும் பிள்ளைகளை மிகுந்த பற்றுதலுடன் பராமரித்துச் செயற்படுவதும் சிறப்பானதாகும். இதைவிட முக்கியமானது இந்த மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளைப் பராமரிக்கும் பயிற்சிகளை கணிசமான ஆசிரியர்கள் கொழும்புக்குச் சென்று பெற்றுக்கொண்டுள்ளனர். கணனிப்பயிற்சியும் பெற்ற இவர்கள் மேலும் பயிற்சிகளைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளதாக அறியப்படுகின்றது.

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் சமூகத்திற்கு ஒரு சுமையாக குடும்பங்களுக்கு ஒரு மன வேதனைக்கான காரணிகளாக அமை யாது தடுப்பதுதான் சிவபூமியின் கடமை அல்ல. சிவபூமி இப்பிள்ளைகளை சமூகத்தின் பொறுப்புமிக்க பிள்ளைகளாக நாளைய நம்பிக்கைகளாக மாற்ற முனைந்துள்ளது.

முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் ஒரு சிறு உரையாற்றிய மாணவனும் நடமாடிய பெண்பிள்ளையும் இன்னும் பல நிகழ்ச்சிகளை செய்த பிள்ளைகளும் அதனையே உணர்த்தினர்.

கலை இலக்கியச் செயற்பாடுகள் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளை ஆற்றுப்படுத்த, மேம்படுத்த ஒருசெயற்பாடாகக் கைக்கொள்ளப் பட்டு வருகின்றது.

கடந்த 18 ஆண்டுகளாக கூத்துப் பட்டறையில் பயிற்சி பெற்று தற்போது தியேட்டர் லேப் என்ற அமைப்பின் மூலம் நாடகப் பயிற்சிகளை மேற்கொண்டுவரும் இந் தியா ஆந்திராவைச் சேர்ந்த நாடக கலைஞர் ஜெயரா தனது நாடகக் கலையை மனவளர்ச்சி குன்றிய குழந்தை களுக்கு சிகிச்சை முறையாகவும் பயன் படுத்தி வருகின்றார்.

அது மாத்திரமல்ல தமிழகக் கவிஞர் வைத்தீஸ்வரன் குழந்தைகளுக்காக எழுதியுள்ள கவிதைகள் அத் தகைய குழந்தைகளிடம் குறிப்பிடத்தக்க மாற்றங் களை ஏற்படுத்தி உள்ள தாக அறியப்படுகின்றது.

**மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் சமூகத்திற்கு ஒரு சுமையாக, குடும்பங்களுக்கு ஒரு மனவேதனைக்கான காரணிகளாக அமையாது தடுப்பதுதான், சிவபூமியின் கடமையல்ல. சிவபூமி இப்பிள்ளைகளை சமூகத்தின் பொறுப்புமிக்க பிள்ளைகளாக. நாளைய நம்பிக்கைகளாக மாற்ற முனைந்துள்ளது.**

தனது வெளிநாட்டு அனுபவங்களையும் வெளிநாட்டுத் தொடர்புகளையும் உதவி களையும் பயனுள்ளமுறையில் சமூகத்தின் சேவை கருதிப் பயன்படுத்திவரும் ஆறு திரு முருகன் சிவபூமியை எங்கள் தாயகத்தின் பகுதிக்குக் கொண்டு வந்துள்ளார். எட்டாக்கனி யாக வெறும் கனவுச் செயற்பாடாக இருந்த ஒரு செயற்பாடு இன்றைக்கு உண்மையாகியுள்ளது.

பிள்ளைகளை பராமரித்து, படிப்பித்து, கலைகளில் ஈடுபடுத்த வைத்து பண்புள்ள பிள்ளைகளாக மாற்றும் செயற்பாட்டுக்கு சமூகத்தில் உள்ள ஏனையவர்களும் உதவ வேண்டும். அவ்வாறு உதவுவது அவர்களின் கடமையும் கூட.

**இணுவையூர்,**
**சிதம்பர திருச்செந்திநாதன்.**

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி) அமைகிறது.

அப்போது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பூர்த்தி செய்யும், ஒரு கௌரவமான சகவாழ்வை உறுதி செய்யும் சமஷ்டி அடிப்படையிலான ஒரு நிரந்தர அரசியல்தீர்வுக்கு அவர்கள் ஆதரவாக உள்ளனரா? எனும் கேள்விக்குரிய விடை எதிர்மறையாகவே

சிங்கள மக்களுடைய ஆழ்மனதில் பதிவு பெற்றுள்ள விடயங்களில் ஒன்று இந்தத்தீவு கௌதம புத்தரினால் சிங்கள பௌத்த மக்களுக்காக வழங்கப்பட்ட நாடு என்பதாகும். பலஸ்தீனத்தை எப்படி ஜெகோவா, கீப்புறு (Hebrew) யூதர் களுக்காக வாக்களிக்கப் பட்ட பூமியாக வழங்கியிருந்தார் என்றும் 4000 ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப் பட்ட சியோனிசக் கருத்துக களின் அடிப்படையில் யூதர்கள் எப்படிச் செயற்பட்டார்களோ அவ்வாறே ஆயிரம் ஆண்டுகளாக மகாவம்சக் கருத்துக்கள் சிங்கள பௌத்த மக்களின் மனங்களிலும் ஆழ்ந்து உறைந்துபோயுள்ளன.

அது மட்டுமல்ல, தமிழ் மக்கள் எப்போதும் இந்தத்தீவில் ஆக்கிரமிப்பாளர்களாகவே காட்டப்பட்டு வருகின்றனர். இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தமிழுக்கு எதிரான வெகுசன எழுச்சிகள் மூலம் வெளிக்கொணரப்படும் எதிர்ப்புணர்வு வேகம் கொள்ளும் என்பதை சிங்களபௌத்த பேரினவாதிகள் நன்கு அறிவர். இதன் மூலம் பண்டா செல்வா ஒப்பந்தத்தில் இருந்து நேற்றைய இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவு, ஏன் ஒரு வருடம் மட்டுமே ஆயுளைக் கொண்ட சுனாமி முகாமைத்துவ கட்டமைப்புவரை எல்லாவற்றையுமே தடுத்து நிறுத்த பேரினவாதிகளால் இன்றும் முடிகிறது.

எங்கள் பகுதிகளில் உள்ள கால்நடைகள் எங்களது பெறுமதி மிக்க சொத்தாகும். அதாவது எங்கள் மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளுக்கும் எங்கள் பகுதியின் பொருண்மிய மேம்பாட்டுக்கும் இவை அளிக்கும் பங்களிப்பு கணிசமானது. இதனைக் கருத்தில் கொண்டு எமது




## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

பகுதியில் குறிப்பாக வன்னிப் பகுதியில் உள்ள கால் நடைகளின் மேம்பாட்டுக்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறுபட்ட புதிய செயற்பாட்டுத் திட்டங்களை கையாளப்போவதாக அறிவித்துள்ளது.

கால்நடைகளை வளர்ப்போர் பலர் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொண்டு தமது கால்நடைகளை பராமரிக்க முடியாது கஸ்ரப்படுகின்றனர். இதன் காரணமாக கால்நடைகள் கூட அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு பல்வேறு காரணங்களை அடிப்படையாகச் சொன்னாலும் கால் நடை வளர்ப்போர் தம்மிடம் உள்ள கால் நடைகளின் எண்ணிக்கையை சரியாக



வெளிப்படுத்தாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு உரிய நேரத்தில் முன்னேற்பாடான முறையில் தடுப்பூசி ஏற்றமுடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொற்று நோய்கள் ஏற்படும் வேளை கால்நடைகளின் சரியான எண்ணிக்கை கிடைக்காத காரணத்தால் இருக்கும் மருந்துகளை ஒருபகுதி கால் நடைகளுக்கே பாவிக்கக்கூடியதாக உள்ளது. இதன் விளைவு மருந்து ஏற்றிய மருந்து ஏற்றாத எல்லாக்கால் நடைகளுமே நோய் பீடித்து அழியும் நிலை ஏற்படுகின்றது.

எனவே நோய்த்தடுப்பினைத் தடுக்க சரியான புள்ளி விபரம் சேகரிக்கப்படுவது அவசியமானது என வலியுறுத்தப்படுகின்றது.

இதற்கு சம்பந்தப்பட்ட கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்கள் யாவரும் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

மேலும் நல்லின மாடுகள், உழவு மாடுகள் கூட இறைச்சிக்காக பாவிக்கப்படுவதும் கால்நடைகளின் அழிவுக்கு காரணமாகின்றது.

இதன் காரணமாக பத்து மாடுகளுக்கு மேல் வளர்ப்பவர்கள் தமது பிரதேசத்தில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களிடம் தமது கால்நடைகள் தொடர்பான விபரங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் கால்நடைகளை இடத்திற்கு இடம் மாற்றுதல், இறைச்சித்தேவைகளுக்காக விற்பனை செய்தல், சொந்த இறைச்சித் தேவைக்கு பயன்படுத்தல் திட்டமிட்ட முறையில் இன அபிவிருத்தியை மேற்கொள்ளல் உரிய காலத்தில் நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கானமுறையில் மேற்கொள்ள முடியும்.

இதன் மூலம் கால்நடை வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்த முடியும். சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உதவ முன்வர வேண்டும்.

# ஆடுகளுக்கு ஏற்பு வலி

ஏற்பு வலி அல்லது ஈர்ப்பு வலி என அழைக்கப்படுகின்ற நோயானது, அனைத்து இன விலங்குகளையும் தாக்கவல்ல, உயர் இறப்பு வீதத்தை காட்டும் ஒரு தொற்று நோய் ஆகும். 'குளஸ்திரிடியம் ரெற்றனி' எனப் படுகின்ற பக்றீரியாவினது நச்சுப்பதார்த்தம் நரம்புத் தொகுதியில் ஏற்படுத்தும் தாக்கத்தினால் தசைகளின் தளர்வின்மை, வலிப்பு மற்றும் அதிஉயர் உணர்வுத்தன்மை ஆகியவற்றினால் வெளிப்படுத்தப்படும் ஒரு நோயாகவும் காணப்படுகிறது.

குளஸ்திரிடியம் கிருமிகளினால் உருவாக்கப்படும் வித்திகள் மண்ணில் பல வருடங்களுக்கு அழிவுறாது காணப்படும் வல்லமை கொண்டன.

இந்நோயின் தாக்கம் அனைத்து விலங்குகளிலும் ஏற்படலாம் எனினும், குதிரை, மனிதன், ஆடு, பன்றி போன்ற விலங்குகள் அதிஉச்ச அளவில் இந்நோயின் தாக்கத்திற்கு உட்படக் கூடியவை. மாடுகளே மிகக் குறைந்தளவு தாக்கத்திற்கு உள்ளாவன என அறியப் பட்டுள்ளது.

விளங்குகளின் மலத்தில் குறிப்பாக குதிரையின் மலத்தில் இக் கிருமிகள் அதிகளவில் காணப்படுகின்றன, மேலும் மண்ணிலும் பொதுவாக இவை காணப்படுகின்றன.

பெரும்பாலும் எமது கால்நடைகளில் ஆடுகளைத்தாக்கும் இந்நோயின் தாக்கம் உள்ளூர் இன சிறிய ஆடுகளில் குறைவாகவே அவதானிக்கப்பட்டு இருப்பினும் ஜமுனாப்பாரி, சாணன் போன்ற நல் இன ஆடுகளில் முக்கியமானதொரு கொல்லும் நோயாகக் காணப்படுகிறது.

### பரவும் விதம் :-

இந்நோய் ஒரு தொற்று நோயாகக் காணப்பட்ட போதும் சாதாரணமாக தொடுகை மூலமோ அன்றி சுவாசம் மூலமாக தொற்றிக் கொள்வதில்லை என்பது ஓர் ஆறுதல் தரும் விடயமாகும்.

ஆயின் எவ்வாறு இந்நோய் பரவுகிறது? இந்நோய்க்கிருமிகள் தோலை அல்லது குடற் சுவர் போன்றவற்றை ஊடுருவும் திறன் அற்றவை. ஆகையால் ஆழமான குத்து, வெட்டு, கிழிவு காயங்களூடாக குளஸ்திரிடியம் வித்திகள் அல்லது கிருமிகள் உடலினுள் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களிலேயே இந்நோய் ஏற்படுகின்றது.

இதைத் தவிர இன்னுமொரு சந்தர்ப்பத்திலும் ஆடுகளில் இந்நோய் அதிகளவில் ஏற்படுகின்றது. அது என்ன?

புதிதாக பிறந்த ஆட்டுக்குட்டிகள் தாயில் இருந்து தமது தொப்புள் கொடி உறவை அறுத்துக்கொள்கின்றன அல்லவா? இச் சந்தர்ப்பத்தில் தொப்புள் கொடியில் ஏற்படுவதும் ஓர் இரத்தக்காயமே ஆகும். இக்குட்டிகள் பிறந்தவுடன் மண்ணில் தொப்புள் கொடிகள் தொடர்புறுவதால் இக்கிருமிகள் அத்தொடர் பூடாக குட்டிகளுள் பிரவேசித்துக்கொள்கின்றன.

இது தவிர நாய்க்கடி ஏற்படும் ஆடுகள் குட்டிகளில் நாயின் உமிழ் நீரில் காணப்படக் கூடிய கிருமிகள் கடிகாயத்தினூடு உடலினுள் பரவுவதாலும் ஆடுகளில் ஏற்பு வலி ஏற்படுவது பெரிதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

### நோயும் அறிகுறிகளும்:-

"குளஸ்திரிடியம் ரெற்றனி" கிருமிகள் ஆடுகளின் உடலினுள் காயங்களூடாக உட்சென்றதும் தமது இன விருத்திக்கேற்ற சூழல் காணப்படின் உடன் பெருக்கமடைய ஆரம்பிக்கின்றன.

பெருந்தொகையான விருத்தி அடைந்த கிருமிகள் நச்சுப் பதார்த்தம் ஒன்றை (TOXIN) சுரக்கின்றன. இந்த நச்சுப்பதார்த்தம் நரம்புத் தொகுதியை தாக்கும் ஒரு இரசாயனப் பதார்த்தம் என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறு சுரக்கப்படும் நச்சுப் பதார்த்தம் அப்பகுதியில் காணப்படும் நரம்பு முடிவிடங்களினூடாக நரம்புத் தொகுதியுட்பரவி மூளை முண்ணான் பகுதிகளை அடைகின்றது. மூளையில் இந்த நச்சுப் பதார்த்தங்கள் உணர் திறனுக்குரிய பகுதிகளில் அவற்றின் வலுவை அதிகளவில் பெருக்கிவிடுவதால் இந்நோய் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இந்நோய் ஏற்பட்ட ஆடுகள் அல்லது குட்டிகள் ஒரு சிறிய தூண்டலுக்கும் அதிகளவு தூண்டற் பேறை காட்டுவதற்கு (Hyperesthesia) இதுவே காரணமாகின்றது.

இதன் பின்னர் நரம்புகளூடாக இந்த நச்சுப் பதார்த்தம் உடலின் பல்வேறு இயக்க தசைகளிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தசைகள் அதிக இறுக்கம் அடைவதால் கால்கள் விறைப்புறுகின்றன. கால்களை மடிக்கும் தன்மையை ஆடுகள் இழப்பதற்கு இதுவே காரணம். மேலும் தாடைத் தசைகள், சுவாசத் தசைகள் என்பனவும் படிப்படியாக இறுக்கம் அடைய தாடையை அசைப்பது கடினமாகும். சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு பக்கவாட்டில் விழும் ஆடுகள் இறுதியில் இறப்பதற்கு இந்நோய் காரணமாக அமைகின்றது.

பொதுவாக ஆடுகளில் நோய் அரும்பு காலம் 7-21 நாட்கள் வரையிலே அமைவதால் புதிதாகப் பிறந்த குட்டிகளில் இந்நோய் அக் குட்டிகளின் 10 ஆம் நாளில் இருந்தே வெளிக் காட்டப்பட்டு 2-3 தினங்களில் இறப்பும் ஏற்பட்டு விடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பண்ணையாளர்கள் தமது ஆடுகளின் தசைகளில் ஒருவித இறுக்கம் ஏற்படுவதையும் அவ்விறுக்கம் படிப்படியாக அதிகரித்துச் செல்வதையும் அவதானிப்பார்கள். முதலில் பின் கால்களில் ஆரம்பித்து பின்னர் தாடை, முன்கால் பகுதிகளுக்கும் இவ்விறுக்கம் பரவுவதை அவர்கள் உணர்வர். கண்ணில் காணப்படும் 3 ஆம் இமை என்று கூறப்படும் சவ்வு போன்ற பகுதி இறுக்கம் அடைந்து தனது அசைவை நிறுத்திக்கொள்வதால் விழி பிதுங்குதல் போன்ற ஓர் தோற்றப்பாடும் காணப் படும். மூக்கின் துவாரங்கள் விரிவடையும். சிறு தூண்டலுக்கும் அதிக உணர்வை வெளிக்காட்டும்

தாடை மற்றும் நாக்கு தசைகள் விறைப்படைவதால் உமிழ் நீர் நுரைபோல



வெளித்தள்ளும். ஆரம்பக் கட்டங்களில் நீர் அல்லது உணவை உள்ளெடுத்தாலும் அதனை விழுங்குவதில் சிரமப்படுவதால் அவை கடை வாயினூடும் மூக்கினூடும் வெளிவரும்.

சிறிது சிறிதாக அனைத்து உடல் தசைகளும் இறுக்கம் அடைவதால் எழுந்து கொள்ளவோ அன்றி எழுந்து நிற்கும் ஆடு அமர்ந்து கொள்ளவோ முடியாமல் 'குதிரை ஆட்ட சிலை' வடிவில் ஆடுகள் தென்படும். சிறிது நேரத்தில் பக்கவாட்டில் கால்களை நீட்டிய நிலையில் படுக்கையாகிவிடும். ஆடுகளின் கால்களை பலவந்தமாகவேனும் மடக்க முடியாதநிலை ஏற்படும். மூச்செடுக்க சிரமமான நிலையில் சில மணிநேரங்கள் காணப்படினும் விரைவில் அவை உயிரிழந்து விடும்.

### சிகிச்சைகள்:-

ஆடுகள் அல்லது குதிரைகளில் சிகிச்சைகள் பெரும்பாலும் பூரண பலன் தருவதில்லை. சிகிச்சைகள் நீண்டகாலம் எடுக்கலாம். எனினும் சிகிச்சைக்காக ஏற்படும் பெரும் செலவீனம் காலவிரயம் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் பலன் மிகக்குறைவே ஆகும். அனைத்திற்கும் மேலாக சிகிச்சை தொடங்கும் கட்டமே மிக முக்கியமானது.

உடலில் நச்சுப்பொருட்கள் பரவிய நேரத்தில் இருந்து 10 மணி நேரத்தை பயன் படுத்தும் நச்சு எதிரிகள் (Anti Toxins) ஓரளவு பலனைக் கொடுக்கலாம். ஆயினும் 48 மணி நேரங்களின் பின் ஆயின் எதுவித பலனையும் கொடுக்காது. உடலினுள் புகுந்துள்ள குளஸ்திரிடியம் கிருமிகளை அழிப்பதில் அதிக பெனிசிலின்கள் ஓரளவு வெற்றி கண்டாலும் ஏற்கனவே அவற்றினால் சுரக்கப்பட்ட நச்சுப் பொருட்களின் தாக்கத்தை தணித்தல் கடினமாகும்.

கால்நடைகளுக்கு ஏற்படும் பல்வேறு நோய்கள் அல்லது நோய் அறிகுறிகள் ஈர்ப்பு வலியை ஒத்திருப்பினும் இவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அறிந்து நோயைக் கண்டறிவதன் பொருட்டு கால்நடை வைத்தியர் ஒருவரின் உதவியை நாடுதல் அவசியமாகின்றது.

### தடுப்பு முறைகள்:-

ஏற்பு வலி நோயை மட்டுமல்லாது கால் நடைகளில் ஏற்படும் பல்வேறு நோய்களையும் வந்த பின் சிகிச்சை செய்வதைவிட வருமுன் காத்தலே சிறந்ததாகும். பெரும்பாலான கால் நடை நோய்களைப் போலவே ஏற்பு வலியினையும் மிகச் சிறப்பாக வருமுன் காத்தலுக்கு ஏற்ற மருத்துவ ஆலோசனைகளையும் உதவிகளையும் அரசாங்க கால்நடை மருத்துவ நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

### ஆடுகளில் ஈர்ப்பு வலி நோயை எவ்வாறு வருமுன் காக்கலாம்?

பல்வேறு கொடிய வைரஸ் நோய்களையும் வருமுன் காத்தலின் பொருட்டு தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு இருப்பது போல குளஸ்திரிடியம் ரெற்றனி கிருமிக்கு எதிராகவும் தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டு மருத்துவ நிலையங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆழமான குத்து வெட்டுக்காயங்கள் ஏற்படும் போதோ குட்டிகள் பிறந்து 24 மணிநேரத்தினுள்ளோ அன்றி நாய்க்கடிக்கு உட்பட்ட உடனோ ஆடுகளுக்கு அல்லது குட்டிகளுக்கு குளஸ்திரிடியம் நச்சு எதிரி (Antitoxin) உடன் ஏற்பு தடுப்பூசி (Tetenus toxcid) ஏற்றுவதன் மூலம் இந்நோயில் இருந்து ஆடுகளை பாதுகாக்க முடியும்.

அதிகளவு ஏற்பு வலி ஏற்படும் பகுதிகளில் ஆடுகளுக்கு ஏற்பு தடுப்பூசி ஏற்றப்படின் 10-12 நாட்களில் எதிர்ப்பு சக்தி உருவாக்கப்படும். இவ்வெதிர்ப்பு சக்தி 12 மாதங்கள் வரை அதற்குரிய பாதுகாப்பை வழங்கும். 11 மாதங்களின் பின் இரண்டாவதாக ஏற்றப்படும் தடுப்பூசி மூலம் ஆயுளுக்கும் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்த முடியும்.

இது தவிர இன்னொருமுறையிலும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளலாம். அதாவது முதல் ஊசியில் இருந்து 6-8 வாரங்களில் இரண்டாவது ஊசியை ஏற்றிக்கொள்ளலாகும்.

இவ்வாறு எதிர்ப்பு சக்தி ஊட்டப்பட்டிருப்பினும் என்றாவது இவ் ஆடுகள் ஆழமான காயத்துக்குள்ளாகி இருப்பின் மீண்டும் ஒரு தடுப்பூசி ஏற்றல் சாலச் சிறந்ததாகும்.


புதிதாக பிறக்கவுள்ள ஆட்டுக்குட்டிகளில் இந்நோயின் தாக்கத்தை தடுப்பதற்கு மேலும் ஒரு சிறந்த வழி யாதெனில் சினையுற்று இருக்கும் ஆட்டிற்கு குட்டி ஈனுவதற்கு 3 வாரங்களுக்கு முன்னர் ஒரு தடவை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாம்.

எனவே ஆட்டுப் பண்ணையாளர்கள் அதிலும் பெறுமதியான நல்லின ஆடுகளை பராமரிக்க ஒவ்வொரு பண்ணையாளனும் இக்கொடிய, இலகுவில் சிகிச்சை செய்யமுடியாத ஏற்புவலி ஏற்படாத வகையில் தமது ஆடுகளையும் குட்டிகளையும் பாதுகாத்தற் பொருட்டு உரிய நேரங்களில் கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதன் மூலம் பெரும் பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தி வரும் இந்நோயில் இருந்து தமது ஆடுகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

Dr.சி.வசீகரன்,
அரச கால்நடை வைத்திய அதிகாரி,
பருத்தித்துறை.

சரக்கு உள்ளே தள்ளினால் தான் வேலையே ஓடும். எதிலும் லிமிட்டாக இருந்து விட்டால் பிரச்சினை இல்லை. அளவுக்குஅதிகமானால்....? ஆபத்துத்தான்! பிரிட்டனில் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் வெகு பிரபலமான கிளப் அணிகள்அடிக்கடி மோதி பலப் பரீட்சை செய்துகொள்ளும் சர்வதேச போட்டிகளுக்கு இணையான வேகம் இதிலும் இருக்கும். பிரிமியர் லீக் போட்டிகள் நடக்கிறது என்றால் பால்பந்து அரங்கங்கள் களை கட்டும். இந்தத் தொடருக்கான நடுவர் குழுவில் கிரஹாம் போல் முக்கியமானவர். சீனியர் நடுவரும் கூட.

கிரஹாம் போல் வருகிறார் என்றால் களத்தில் விளையாடும் இரு அணி வீரர்களும் வலு கவனமாக நடந்துகொள்வார்கள். அந்தளவுக்கு ஆசாமியாம் இவர். பெரிய மனிதர்களுக்கு சிறிய பலவீனம் இருக்குமில்லையா? கிரஹாம் விடயமும் அப்படியே. கைக்கடிகாரத்தில் மணி மாலையாகி விட்டால் போதும்... நல்ல மதுபானக் கடை எங்கிருக்கிறது என்று தேடி ஓட ஆரம்பித்து விடுவார். 'ராவாக' உள்ளே தள்ளி விட்டு ராவெல்லாம் சுற்றிக்கொண்டிருப்பார்.



# அளவுக்கு மிஞ்சினால்...

இப்போது பெரிய பிரச்சினையில் சிக்கித் தவிக்கிறார். கிரஹாம் சமீபத்தில் மதுபானக் கடை சென்று வழக்கம் போல சாப்பிட ஆரம்பித்தார். என்ன மனநிலையில் இருந்தாரோ வழக்கமான லிமிட் தாண்டி அளவுக்கு மீறிப் போய்க்கொண்டே இருந்தது. மதுபானக் கடை ஊழியர்கள் எடுத்துச் சொல்லியும், பிரயோசனமில்லை. இன்னும் கொஞ்சம் ஊத்து.. சுதி கொஞ்சம் ஏத்து.. என்கின்ற ரீதியில் உள்ளே தள்ளிக்கொண்டிருந்தவரை வலுக் கட்டாயமாக வெளியே தள்ளி னார்கள் மதுபானக் கடைக் காரர்.

உள்ளே போனது சும்மா இருக்குமா? சாலையில் செம ஆட்டமாம். போகிற வருகிற வாகனங்கள் மீது பாய்கின்ற அளவுக்குப் போய் விட்டதாம். அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் வந்து இழுத்துப்போய் மானம் காத்திருக்கிறார்கள். நடுவரின் ஆட்டம் அடுத்த நாள் செய்திகளில் பிரமாதமாக வெளியானது. கால்பந்து நிர்வாகிகள் பார்த்ததும் டென்ஷனாகி வட்டார்கள். தொலைபேசி மூலம் அழைத்து கிரஹாவை பிடுங்கி எடுத்து விட்டார்களாம்.இப்படி நான்கு ஆசாமிகள் இருந்தால் பிரிட்டன் கால்பந்து நிர்வாகத்தின் பெயர் உருப்பட்ட மாதிரித்தான். கிரஹாமின் அநாகரிக நடவடிக்கை பற்றி விசாரித்து கட்டாயம் தண்டனை வழங்குவோம் என்கிறார் பிரிட்டன் கால்பந்து நடுவர்கள் அமைப்பின் தலைவர் கீத் ஹாக்கெட்!

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஒரு தந்தை தன் மகன் எப்படி உருவாக வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவராகக் காணப் படுகின்றார்.உயர் தகைமைகள் யாவற்றுக்கும் அர்த்தம் சேர்ப்பது உயர் விழுமியங்கள்தான். வெறும் வன்முறைகளும் அடக்கு முறைகளும் இக்காலத்தில் விழுமியம் என்றால் என்ன? அவ்வாறான ஒன்று தேவையா?என்பதுபோல் பாரா முகமாகத் திரியும் மாணவர்களும் கவனத்திலெடுக்காத சமூகமுமாய் இயங்கிக்கொண்டிருக்கின்றன.


எதிர்காலத்தில் இன்றைய மாணவர்களே வழிகாட்டுபவர்கள். வல்லவர்களாக நல்லவர்களாக வாழ வேண்டியவர்கள். நாம் விரும்பும் ஆற்றல் மிகுந்த சமுதாயத்தை உருவாக்கும் திறன் விழுமியக் கல்விக்கு உண்டு. பெரியவர்கள் சமூகப் பொறுப்பானவர்கள் இதனையே அழுத்திக் கூறுகின்றார்கள்.அறிஞர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், போர்வீரர்கள், தலைவர்கள், சமுதாயத்தொண்டர்கள், நீதிபதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர் கள், கணக்காளர்கள், பலதரப்பட்ட உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் இவர்கள் யாவரையும் நன்னிலை நோக்கில் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டுவது விழுமியக் கல்வியா கும். உயர்ந்த இலட்சியங்கள் உள்ளவர்களாக மாற்றுவதற்கு துணைசெய்கிறது. அது மட்டு மன்றி உழைப்பு உயர்வு தரும் என்பது போல் உண்மைக்கு மதிப்புக் கொடுத்து மனிதநேயத்தை வாழ்விலே கடைப்பிடிப்பதற்கு வழிகாட்டியும் விடுகின்றது.ஆகவே நற்பிரஜைகளை உருவாக்கும் நன்னோக்கில் விழுமியக் கல்வியின் பங்கு முக்கியத்துவமானது.

மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போன்றே இந்திய அணியின் தலைவர் கங்குலியின் சிம்பாப்வே சுற்றுலா குறித்த கருத்து அமைந்துள்ளதெனில் மிகையாகாது.

இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் நியூசிலாந்து, சிம்பாப்வே கலந்து கொள்ளும் முக்கோண ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் கலந்துகொள்ள இந்திய அணி சிம்பாப்வே சென்றுள்ளது.

இத்தொடர் குறித்து சிம்பாப்வே செல்ல முன்னர் இந்திய அணிக்கு மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்ட கங்குலி வெளியிட்ட கூற்றே மேற்படி எண்ணவைத்துள்ளது.

அவர் இப்போட்டித் தொடர் குறித்து அண்மையில் கருத்து வெளியிடும்போது, "சிம்பாப்வே மண்ணில் கடந்த காலங்களில் நாங்கள் சாதிக்கவில்லை. டெஸ்ட் போட்டித் தொடர் ஒன்றையும் இதுவரை சிம்பாப்வேயில் வெற்றிகொள்ளவில்லை. எனவே, இம்முறை அதை சாதிப்போம்" எனத் தெரிவித்திருந்தார்.கடந்த காலங்களில் சிம்பாப்வே மண்ணில் இந்தியா அணி சாதிக்கவில்லை என்பது உண்மைதான் ஆனால் தற்பொழுது சிம்பாப்வே அணி குறித்து வெளிவரும் அனுதாபங்களுக்கு மத்தியில் இந்திய அணித் தலைவர் கங்குலியின் மேற்படி கூற்று அவரை சிறு பிள்ளை போன்று எண்ணிவிடத் தோன்றுகின்றது.



ஏனெனில், அணியில் ஏற்பட்ட நிறப்பிரச்சினை காரணமாக இரண்டாம் தர அணி ஒன்றை உருவாக்கி விளையாடிவரு ம் சிம்பாப்வே படுமோசமான தோல்விகளையே ச தித்து வருகின்றது. அத்துடன், அண்மையில் ! டந்து முடிந்த நியூசிலாந்து அணியுடனான டெ ட் போட்டியை அவதானித்தாலே போதும் சிம்பாப்வே அணியின் தற்போதைய நிலை எவ்வாறு இருந்தது என்பதற்கு போதுமானதாகும். அதாவது, டெஸ்ட் போட்டி ஒன்றில் இரு இனிங்ஸ்சையும் ஒரே நாளில் நிறைவு செய்த பெருமையைக்கூட நியூசிலாந்துடனான டெஸ்டில் நிகழ்த்தியுள்ளது.

இது இவ்வாறு இருக்க, சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அந்தஸ்தை உடன் பறித்துவிட வேண்டும் என்று அந்நாட்டு ரசிகர்கள் போர்க் கொடி உயர்த்தி விட்டனர். அத்துடன், சிம்பாப்வேயில் வெளியாகும் ஹெறால்ட் நாளிதழில் அதன் விளையாட்டுப் பகுதி ஆசிரியர் லாரன்ஸ் மயோ எழுதியுள்ள கட்டுரையில், "டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு என்று ஒரு கௌரவம் இருக்கின்றது. அதைக் காப்பாற்ற வேண் டும் என்ற குறைந்த பட்ச நலன்கருதியாவது டெஸ்ட் போட்டிகளில் இருந்து சிம்பாப்வே ஒதுங்கியிருக் கலாம் அல்லது சர்வதேச கிரிக்கெட்

# விழுந்தவனை மிதிக்கலாமா?

அமைப்பு ஒதுக்கி வைக்க வேண்டும்" என்று ஆதங்கத்துடன் எழுதியுள்ளார்.எனவே, சிம்பாப்வே அணி குறித்த மேற்படி கங்குலியின் கூற்றுக்கள் வேதனையாளிக்கும் ஒன்றாக இருக்காமல் வேறு என்னவாக இருக்கும்.

கடந்த காலங்களில் சிம்பாப்வே மண்ணில் இந்திய அணி சாதிக்கவில்லைதான். அதற்காக இன்றைய நிலையைச் சதாகமாக எடுத்துக்கொள்வதென்பது தன்னுடைய அணியை முழுமையாக விளங்காத தன்மையையே எடுத்துக்காட்டுவதாய் அமையும்.

எனவே, சிம்பாப்வே மண்ணில் கங்குலி சாதிக்க வேண்டுமென நினைத்தால் முதலில் மூன்று நாடுகள் கலந்துகொள்ளும் முக்கோண ஒரு நாள் போட்டிகளில் அணியை சிறப்பாக வழி நடத்தி கிண்ணத்தைக் கைப்பற்ற முனையலாம். அப்படி சிறப்பாக அணியை வழி நடத்தி முக்கோண ஒரு நாள் போட்டியில் கிண்ணத்தை கைப்பற்றுவரேயானால் உண்மையில் சிம்பாப்வே மண்ணில் இந்திய அணி கடந்த காலங்களில் சாதிக்கத் தவறியமையை நிவர்த்தி செய்வதாக அமையும். இல்லையேல் சிம்பாப்வே அணியுடன் டெஸ்ட் தொடரை வென்று சிம்பாப்வே மண்ணில் சாதித்துவிட்டேன் என்று மார்பு தட்ட எண்ணுவாரேயானால் அது இந்திய அணிக்கு ஆரோக்கியமளிக்கும் ஒன்றாக அமையாது எனில் மிகையாகாது.

——— சுபானந்


## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்
# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 07.09.2005 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். 08.09.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவர். கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியைச் செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 07.09.2005 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக்கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (vat 15%உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் பதிய மேல்மாடிக் கட்டடத்துக்கு அலுமினிய கண்ணாடி அறைகள் அமைத்தல் | M9 | 8700.00 | 575.00 |
| 02 | அல்லாரை வெள்ளாம் போக்கட்டி ஊரெல்லை வீதித் திருத்தம். | M9 | 2800.00 | 575.00 |
| 03 | சிமிழ் அம்மன் கோவில் கிணறு அமைத்தல் | M9 | 1100.00 | 575.00 |
| 04 | நாவற்குழி இந்து மயானக் கிணறு அமைத்தல் | M9 | 500.00 | 575.00 |
| 05 | புதிய பஸ் நிலையத்தில் பொது மலசல கூடத்திற்கு பாதுகாப்பு வேலி அமைத்தல் | M9 | 3600.00 | 575.00 |

மேற்குறிப்பிட்ட கேள்விவைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 05.09.2005 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விபரங்களைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமையலுவலகம்,கொடிகாமம்.
24.08.2005


(சி.12618)

திரு.கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.


# 8 ஆம் ஆண்டு நினைவு அஞ்சல்

தோற்றம் 08.11.1980

வீரச்சாவு 26.08.1997



2 ம் லெப் எழில்
(சரவணபவன் தேவமாலினி)
மண்டைதீவு

தாய் மண்ணையும் தலைவனையும்
நேசித்து புலியாகிப் போராடி
பலகளம் வென்ற எழிலே-நீ
மறைந்து ஆண்டுகள் எட்டு ஆனாலும்
மறையாத உன் நினைவுகளுடன்

உன் அப்பா, அண்ணன்மார்,
அக்கா,அண்ணி,

தற்போதைய முகவரி:-
இல-1153,திருநகர்,
கிளிநொச்சி. (6670)

தகவல்- குடும்பத்தினர்.

# நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் -II

## (நீகோட் -II)

## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

## "ஆஅவ" கடன் இல:- 2168 சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் இல-51

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் , அபிவிருத்தித்திட்டம் *(NECORD-II)* ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ('ஆ.அ.வ') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் நீகோட் திட்டக் கேள்விச்சபைத்தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

*அட்டவணை*

| தொ இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | TC/NECORD-II/HS/01 | திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தர்களுக்கான மூன்றுமாடி குடும்பவிடுதி கட்டடம் நிர்மாணம். | M5 கட்டடம் | 135,000/= |
| 02 | TC/NECORD-II/HS/01 | செங்கலடி கிராமிய வைத்திய சாலையில் மகப்பேற்று வாட்டும், இரண்டு விடுதிகளும் புனர்நிர்மாணம். | M5 கட்டடம் | 150,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குக் தகுதியுடையவர்கள்.

I நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினர் .

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்விகோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV 'ICTAD' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 மேலேகூறிய அட்டவணையின் ஒருதொகுதிக்கோ அல்லது கூடுதலான தொகுதிக்கோ விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு தொகுதிக்கும் தனியான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் *NECORD*- வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப் பணிப்பாளர், நீகோட்திட்டம்,55,கந்தசுவாமி கோவில்வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:- 026-2227434, பக்ஸ்:- 026-2227401, இணையத்தள முகவரி: www.necord.rog ஈமெயில்: necord @sltnet.lk)

06 கேள்வி ஆவணங்களை 24.08.2005 இல் இருந்து 07.09.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும். என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம்,திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08 பொறிவைத்த கேள்விகள் யாவும் குறித்துரைக்கப்பட்ட பிணைப்பணத்துடன் தலைவர், திட்ட கேள்விச் சபை, நீக்கோட், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 14.09.2005 பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று நீகோட் திட்ட காரியாலயம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் 07.09.2005 ஆம் திகதி அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

லங்காநேசன்,
தலைவர்,கேள்விச்சபை,
நீகோட் திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி 12588)

## 2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு

## மகளிர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் நாடகப் போட்டி-2005

- அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- மாவட்டத்திலமைந்துள்ள பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றங்களிலிருந்தும் பங்குபற்றலாம்.

### விதிமுறைகள்:-

- நாடகப் போட்டியில் பங்குபற்றுவோர் எமது போட்டி விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- நாடகத்தில் 15-20 பேர் நடிக்கலாம். பக்க வாத்தியம் பாடகர் தவிர.
- சிறந்த நடிகர்களுக்குரிய பரிசில்கள் இருப்பதால் ஒருவர் இரு பாத்திரத்திற்கு மேல் நடிக்க முடியாது.
- நாடகம் 30-40 நிமிடங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- வயது வேறுபாடு அற்று இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
- போட்டியில் பங்குபற்றும் நாடகங்கள் யாவற்றிற்கும் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியில் பங்குபற்றும் பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றங்கள் தங்கள் பதிவுகளை 05.09.2005 இற்கு முன் மேற்கொள்ளவும்.
  இதற்கான மேலதிக விபரத்தினை அந்த மாவட்ட அரசியல்துறை செயலகத்திலும் அந்த மாவட்ட அரசியல்துறை- மகளிர் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
- நாடகப் போட்டிக்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து பங்கு பற்றும் அமைப்புக்கள் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அல்லது மாவட்ட அரசியல்துறை- மகளிர் பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் பங்குபற்றும் அமைப்பின் அல்லது மன்றத்தின் தலைவர் அல்லது நாடகத்தின் நெறியாளரின் ஒப்பமும் இருத்தல் வேண்டும்.
- இவை தேசியத்தை வலுப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
  "போட்டிக்கான கருப்பொருள்"

(01) "சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்"
(02) போராட்டத்தின் வளர்ச்சி-சமூக பெண்களில் ஏற்படுத்திய மாற்றங்கள்.
(03) இன்றைய மக்களின் சமகால வாழ்வியலும் சமுதாயச் சீர்திருத்தமும்.
(04) இன்றைய சமூகத்தில் மாறி வரும் சிந்தனைகள்.

- மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
இசைக்கல்லூரி,
மகளிர் கலைபண்பாட்டுக்கழகம்,
பரவிப்பாஞ்சான்,
4ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

(சி.12581)

## முக்கிய அறிவித்தல்கள்

### கரைச்சிப் பிரதேச சபை- கிளிநொச்சி

01) வீதி ஓரங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் பயன்தரு மரங்களில் விளம்பரங்கள் பலகைகளிலும் தகடுகளிலும் எழுதி பொருத்தப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச சபையின் அனுமதியின்றி விளம்பரங்கள் வீதியின் இரு மருங்கிலும் பொது இடங்களிலும் வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக இவ்வாறான விளம்பரங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

01.09.2005 இற்கு முன் இவை அகற்றப்படாது விட்டால் சபை மூலம் அகற்றப்பட்டு தண்டம்அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

02) கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட ஏ-9 வீதியில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலைய உரிமையாளர்கள், வீட்டு உரிமையாளர்கள் தங்களின் கட்டடங்களுக்கான அனுமதி, வியாபார அனுமதி, தொழில் நிலைய அனுமதி என்பவற்றைப் பெற்று பரிசோதனைக்கு வரும் அலுவலர்களிடம் காண்பிக்க ஆயத்தமாக இருங்கள். அவை இல்லாதவிடத்து கரைச்சிப் பிரதேச சபையை அணுகி அவற்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

03) ஏ-9 வீதியிலுள்ள சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் வீட்டுச் சொந்தக்காரர்களும் தங்கள் எல்லைகளை வீதியின் மத்தியிலிருந்து 66' க்கு அப்பால் கொண்டு செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எனவே தற்காலிக அசைக்கக் கூடிய அமைப்புக்கள் 01.09.2005 இற்கு முன்னரும் நிலையான அமைப்புகள் 01.01.2006 க்கு முன்னரும் அகற்றப்படா விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

"நகரின் அழகையும் சுற்றாடலையும் பேணுவோம்"

பொன் நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்.

(சி.12589)

## கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை முல்லைத்தீவு

# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2005

கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும், உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும் ஒப்பந்தவேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடம் இருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. 2005.08.23 ஆம் திகதி தொடக்கம் 2005.08.31 ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 2005.08.31 ஆம் திகதி அன்று பிற்பகல் 1.00 மணிவரை சேர்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00 மணிக்குக் கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்வியை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விகாரர் சமுகமளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியை " செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் அதே நாளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காகித உறையின் மேல் மூலையில் வேலையின் பெயரை எழுதி கேள்விப்பத்திரம் 2005 எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை பிரதேச சபையில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப் படக்கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப் படாதது | வற்வரி பற்றி அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம் |
|---|---|---|---|---|
| 01 | முள்ளியவளை மயானம் புனரமைத்தல். | 2250/- | 250/- | |
| 02 | வற்றாப்பளைச் சந்தை அமைத்தல். | 3250/- | 250/- | |
| 03 | முள்ளிவாய்க்கால் பிரதேச சபை உப அலுவலகத்தில் மலசல கூடம் அமைத்தல். | 500/- | 250/- | |

இ.கிருஷ்ணபிள்ளை,
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி.12585)

# பயம் எமக்குத் தடை!



**எவ்வளவு** தான் நாம் துணிந்தவர்களாக இருந்தபோதும் சில விடயங்களில் எதற்கு பயப்பட வேண்டும் எதற்கு பயப்படக்கூடாது என்ற நிலை தெரியாமல் எல்லாவற்றுக்கும் பயந்தும் ஒதுங்கியும் வாழ்கின்றோம். உண்மையில் இந்த நிலை தேவை தானா? எம் மனதை நாமே கேள்வி கேட்டுப் பார்க்க வேண்டும்.

பயம் என்பது பொதுவாக ஆண், பெண் இருவருக்கும் உண்டு. தேவையில்லாமல் எல்லா விடயங்களுக்கும் நாம் பயப்படக்கூடாது.

பொதுவாக இவ்விடயம் பெண்களை கூடுதலாகத் தாக்குகிறது என்றே சொல்லவேண்டும். குறிப்பாக பெண்களான நாம் இவ்விடயத்தில் விழிப்போடு செயல்படவேண்டும்.

சில பெண்களைப் பார்த்தால் தேவையில்லாமல் எல்லாவற்றிற்கும் பயந்து கொண்டு செய்து முடிக்கவேண்டிய காரியங்களையே கோட்டை விட்டு விடுகின்றனர். இந்த விடயத்தை நாம் ஒவ்வொருவரும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய வாழ்வே இந்தப் பயத்தால் பாழ்பட்டுப்போகின்றது.

நாம் செய்யப்போகின்ற காரியம் நல்லதாக இருக்கையில், ஏன் அதற்கு பயப்படவேண்டும். சமூகம் சமூகம் என்று எண்ணி நாம் ஒதுங்கியிருந்தால் அதனால் பாதிக்கப்படுவது இச்சமூகம் அல்ல. பெண்களான நாமே.

எவ்வளவு திறமைகள் எம்மிடம் இருந்தபோதும் துணிவு இல்லாத போது திறமைகள் வெளிப்பட சந்தர்ப்பம் இல்லை. நாம் இன்று

*பெருமை என்பது எம்முடைய பயந்த சுபாவத்தில் அல்ல. நாம் செய்யும் சாதனைகளிலே தங்கியுள்ளது.*

வாழும் காலம் பெண்கள் பல தரப்பட்ட துறைகளிலும் முன்னேறி பல சாதனைகளையும் படைக்கும் நேரம் உண்மையில் பல பெண்கள் அப்படி இருக்கின்றனர். ஆனால் பலர் பயந்து கொண்டும் தங்கள் திறமைகளை முடமாக்கி ஊனமானவர்களாயும் வாழ்ந்து கொண்டுதான் உள்ளனர். இன்று நாம் பயந்து பயந்து செய்ய வேண்டியவற்றை செய்யாமல் எம் வாழ்வையே கேள்விக் குறியாக்கி விடுவதுதான் வேதனை தரும் விடயமாக இருக்கின்றது.

நாம் வாழும் வாழ்க்கையில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் எம் வாழ்வின் தராதரத்தை உயர்த்துகின்றனவாக இருக்க வேண்டும். நாம் எதையும் மற்றவர் பேசுவார் பழிப்பார் என பயந்து செயல்படக்கூடாது.

இன்று நாம் எமது சொந்த விடயங்களைக்கூட தெளிவான முறையில் செய்ய முடியாமல் சில சமயங்களில் தவிக்கின்றோம். இத்தவிப்பானது யாரால் ஏற்பட்டது என்பதை நாம் சிந்திக்கும்போது எமக்குள் இருந்தே ஒரு முழுமையான தெளிவான விடை பிறக்கும்.

நாம் எம்முடைய அலுவல்களை எம்மால் முடியுமானவரை நாமே செய்து முடிக்கவேண்டும். அடுத்தவரைக் கொண்டு எம்முடைய வேலைகளைச் செய்து நாம் பழக்கப்பட்டால் எமக்கு ஒன்றும் தெரியாமல் கிணற்றுத் தவளை போல் தான் இருக்கவேண்டும்.

குறிப்பாக இன்று நாம் வாழும் காலத்தை யோசித்துப்பாருங்கள். எத்தனையோ பெண்கள் இந்த நாட்டின் விடுதலைக்காக எல்லையிலே எதிரியோடு நின்று நேரடியாகச் சண்டை செய்யும் காலம் தம்முடைய சுகங்களை மறந்து எம்முடைய நாட்டின் விடுதலைக்காக தங்கள் தலையைக் கூட கொடுக்க தயாராகி இருக்கின்றனர். இந்தளவுக்கு நாம் இல்லாதுவிட்டாலும், எம்முடைய வாழ்வின் நாளாந்தச் செயல்களையும் எங்கள் பயத்தை அகற்ற செய்யலாம் அல்லவா.

உண்மையில் எம் பெண்ணினம் பயந்து பயந்தே தம்மை மடமையாக்கி வருகின்றது. ஒரு சிலர் நினைக்கின்றனர் தாம் இப்படி பயந்து இருப்பது தமக்கு பெருமை என. பெருமை என்பது எம்முடைய பயந்த சுபாவத்தில் அல்ல. நாம் செய்யும் சாதனைகளிலே தங்கியுள்ளது.

எம்முடைய இந்தப் பயந்த சுபாவத்தை வைத்தே தமக்கு சாதகமாக்கிட பல பேர் காத்திருப்பதை நாம் அறிய வேண்டும். எந்தக்காரியத்தையும் நாம் செய்யும்போது துணிவு கொண்டு செயல்பட வேண்டும். சும்மா வெறுமனே சாப்பிடுவதும் குடும்பத்தைப் பார்ப்பதும்தான் எமது வேலையல்ல. என்ன சாப்பிட வேண்டுமென நாம் நினைக்கின்ற பொழுதுகளிலெல்லாம் எதைச் சாதிக்க வேண்டுமென சிந்திக்க வேண்டும்.

சு.சி.தமிழினி

## கோழி இறைச்சிப் பாற்பொரியல்



தேவையான பொருட்கள்:-
கோழி இறைச்சி (தசைமாத்திரம்) -250 கிராம்
சின்ன வெங்காயம் -50 கிராம்
வெள்ளைப் பூடு -6 பல்லு
பச்சைமிளகாய் -3
கறிவேப்பிலை, -றம்பை சிறிதளவு
மிளகாய்த்தூள் -11/2 மேசைக்கரண்டி
மஞ்சள்தூள் - 1/4 தேக்கரண்டி
பெருஞ்சீரகம் 1 தேக்கரண்டி
மிளகு - 1/4 தேக்கரண்டி
வெந்தயம் -1/4 தேக்கரண்டி
எலுமிச்சம் புளி -2 தேக்கரண்டி
தேங்காய்ப்பால் -11/2 தம்ளர் (இறுக்கமானது)
உப்பு - அளவாக.


செய்முறை:-

* இறைச்சியைச் சுத்தம் செய்து சிறிது சிறிதாக வெட்டிக்கொள்ளவும்.
* வெங்காயம், பூடு இவற்றைச் சுத்தம் செய்து வட்டமாக வெட்டவும். மிளகாயைப் பிளந்து கொள்ளவும்.
* தேங்காய்ப்பாலுடன் மஞ்சள்தூளைக் கலந்து சூடாக்கி அதனுடன் வெங்காயம், மிளகாய், வெந்தயம் இவற்றைக் கலந்து கொதிக்க வைக்கவும்.
* சிறிது நேரத்தின் பின் இறைச்சியை அதனுள் இட்டுக் கலந்து மிளகாய்த் தூள், உப்பு, கறிவேப்பிலை, றம்பை இவற்றைச் சேர்த்து மெல்லிய நெருப்பிலே மூடி வேகவைக்கவும்.
* பெருஞ்சீரகம், மிளகு, அளவான கறிவேப்பிலை இவற்றை வாசனை வரக்கூடியதாக வறுத்தெடுத்து அரைத்துக் கொள்ளவும்.
* தேங்காய்ப்பாலில் இருந்து பிறந்த எண்ணெயில் இறைச்சியைப் புரட்டிப் புரட்டிப் பொரிய வைத்து வறள விடவும்.
* பாற்பொரியல் வறளும் பருவத்தில் பெருஞ்சீர கத்தூளைச் சேர்த்து நன்கு கலந்து இறக்கிக் கொள்ளவும்.
* ஆறியபின் எலுமிச்சம்புளியைச் சேர்த்துக் கொள்ளவும்.

**மனிதா!** இறைவன் வரப்பிரசாதமாய் உனக்களித்த அறிவினை வைத்து வெற்றிப்பாதைகளை வகுத்து உன்வாழ்வு சிறக்க பயணி. மனித முன்னேற்றம், நாகரிகம், சாதனைகள் என பல்வேறுபட்டவைகள் மனிதனால் தான் பிறப்பெடுக்கின்றன. ஆனாலும் இதனை எல்லோரும் செய்வதில்லை. செயல் செய்தவர்கள் மேலும் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபடுவதில்லை! இம்முயற்சியினை மனிதன் காரணங்களும் இருக்கலாம். ஆனாலும் அவ்வாறு முடங்கிப் போகாதே! முயற்சியினை மேற்கொள்! எது உனக்கு தேவையெனக் கொள்கின்றாயோ அதனைத் தேடல் செய் உனக்கது கிட்டும். ஆசைகளை ஆசையாய் வைத்துக் கொள்ளாதே? அதனைத்தேடி முன்னேறு வதே மேல்.

அன்றைய காலங்களில் உன் போன்ற மனிதன் பறவைகளைப் போல் பறக்க ஆசைப் பட்

**எது உனக்கு தேவையெனக் கொள்கின்றாயோ அதனைத் தேடல் செய் உனக்கது கிட்டும்.**



டான் அவன் ஆசையை ஆசையாய் மட்டும் வைத்துக்கொண்டான். இருந்தும் ஒரு சிலர் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாய் இறந்தும் போனார். முயற்சிகள் முடங்கிப்போக வில்லை அது தொடர் கதையாயிற்று.

ரைட் சகோதரர்கள் எப்படியாயினும் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டு இயந்திரங்களை உருவாக்கி விபத்துக்களையும் சந்தித்து

# முயற்சியே முன்னேற்றம்

உறுதியாகக் கடைப்பிடிக்கும் போது தனி மனிதனும் முன்னேறலாம். சமூகத்தினையும் முன்னேற்றலாம்.

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும் என கவிஞன் கூறியுள்ளான். உன்னில் அனைத்துத் திறமைகளும் இல்லை. இருக்கின்ற திறமைகளையும் நீயே முடக்கி விட்டாய். இதற்காய் பல




ஆகாயத்தில் பறக்கும் விமானத்தினையும் கண்டுபிடித்ததோடு மனிதன் பறக்கும் ஆசைகளையும் ஈடேற்றினார்கள் இது நாம் அறிந்த உண்மை. இவ்வாறு தான் பல துறைகளையும் கண்டுபிடிக்கும் போது விளைவுகள் ஏற்பட்டன. விளைவுகளிலிருந்து பயன் பிறந்தது. உலகில் இவ்வாறு தான் உண்மைகளை அறிந்துகொள்ள கஷ்டங்களை அனுபவித்தார்கள். இதனை நீ அறியாயா?

நீயோ உன்னையே முடக்கி வாழ்கின்றாயே! முயற்சியே முன்னேற்றம். உன்வாழ்வுக்காய் முயற்சி செய்து நல்மனி தனாய் நீயும் இவ்வுலகில் வாழ முயற்சியாய் நீ பயணிக்க முன்னேற்றப்பாதையினைத்தேடு!

எஸ். மதீஸ்

**உலகில்** பிறப்பெடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான வாழ்க்கை அமைகிறது. பலர் ஏதோ பிறந்தோம் வாழ்கிறோம் எந்தவித சிந்தனையோ

**வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்றால் ஒரு இலட்சியத்தை அமைத்துக்கொள்வது முக்கியம்.**

இலட்சியமோ இல்லாமல் வாழ்கின்றனர். நம் கையில் என்னதான் இருக்கிறது. எல்லாம் விதிப்படியேதான் நடக்கிறது என விதியில் பழியை போடுபவர் பலர். மனிதனாகப் பிறந்தவர்கள் பகுத்தறிவு கொண்டவர்கள். சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள். ஆனால் அதை மறந்து இலட்சியங்களோ, முயற்சிகளோ இன்றி வாழ்க்கையை நடாத்தியவர்கள் வாழ்ந்ததில்லை. இலட்சியம் இல்லாமல் வேலை செய்வது எண்ணெய் இல்லாத விளக்கிற்கு சமம் என்கிறார் யோகி வேமனா.




வாழ்க்கையில் இலட்சியம் இல்லாதவன் பரம ஏழை என கருதப்படுகிறான். வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றால் ஒரு இலட்சியத்தை அமைத்துக்கொள்வது முக்கியம். இலட்சியம் இல்லாத வாழ்க்கை மாலுமி இல்லாத கப்பலைப் போன்றது. தன்னம்பிக்கையுடன், இலட்சியத்துடன் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும். வாழ்க்கை பொருளுடைய தாகவும், பயனுடையதாகவும் அமையும். ஒரு வாழ்க்கைப் பயணத்தின் காலம் இலட்சியத்தைப் பொறுத்தே அமையும்.

தென்னாபிரிக்கா சுதந்திரத்திற்கான இலட்சியவாதியாக நெல்சன் மண்டேலா செயற்பட்டபடியால்தான் பல இன்னல்களையும் தாண்டி சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். இல்லாவிடில் தென்னாபிரிக்கா சுதந்திர நாடாக இருந்திருக்காது. பரீட்சை வெற்றிபெற வேண்டும் என இலட்சியச் சிந்தனையோடு படித்தால் அந்த இலட்சியம் அவர்களை வெற்றிபெற வைக்கின்றது. சக மாணவர்களாலும், சமுதாயத்தாலும் பாராட்டப்படுகின்றனர். இலட்சியக் கொள்கையுடன் செயற்பட்டவர்கள் மக்களால் என்றும் மதிக்கப்படுகிறார்கள். எனவே உங்களின் இலட்சியங்கள் என்னவென்பதை முடிவு செய்து விடாது மன உறுதி யோடு போராடுங்கள். வாழ்க்கையின் வெற்றி உங்கள் கையில் இருக்கும்.

பா.கஸ்தூரி




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம் – 62

பெயர்:....................................................

முகவரி:..................................................


..............................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



*பாவலா!*

*குரங்கின் பரிணாமம் மனிதன் என்றால் மனிதனின் பரிணாமம்...?*

ஆனந்தி,
புளியங்குளம்.

கேள்வியே தவறு. குரங்கின் பரிணாமம் மனிதன் என்றான மனிதனின் பரிணாமம் மனிதக் குரங்கு என்பதேயாகும். கட்சி தாவுகிறான்... கொள்கைக் குத்துக் கரணம் அடிக்கிறான்... அடுத்தவனை நையாண்டி செய்யிறான்

*பாவலா!*

*எப்போதாவது உமக்கு கடவுள் உதவி செய்ததுண்டா?*

*தர்சிகா,*
*யாழ்ப்பாணம்.*

ஆமாம், என்னை சுய மாக சிந்தித்து செயற்படக் கூடிய ஒருவனாக படைத்து உதவியுள்ளது.

*பாவலா!*

*கூடி இருந்து குழிபறிப்பவர்கள் பற்றி உமது கருத்து?*

*யாழினி,*
*கிளிநொச்சி.*

படு குழிக்குள் தள்ளப்பட வேண்டியவர்கள்.

*பாவலா!*

*உலகில் எப்போது ஐக்கியம் ஏற்படும்?*

*பிரியன்,*
*கிளிநொச்சி.*

மனிதர்கள் மனிதர்களாக முழுமையாக வாழத் தொடங்கும் போது. உலகின் பிரிவுகளுக்கு மனிதனிடம் மனிதத்தன்மை இல்லாமல் போனது தானே காரணம்.

*பாவலா!*

*தவறு செய்த மனிதன் இந்த உலகில் எங்கு வாழ்கிறான்?*

*தர்மினி,*
*பரந்தன்.*

தவறு செய்யும் மனிதன் பிறக்காத இடத்தில்.

*பாவலா!*

*மனைவி, கணவன் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்?*

*ஜெயா,*
*கிளிநொச்சி.*

ஆணியம்- பெண்ணியம் பற்றி பேசுபவர்களாக இருக்கக் கூடாது- மனிதனியத்தை மதிப்பவர்களாக இருக்கவேண்டும்.

*பாவலா!*

*ஒரு சர்வாதிகார நாடு எப்படியிருக்கும்?*

*சிவா,*
*பரந்தன்.*

சிறிலங்கா மாதிரி இருக்கும்.

*பாவலா!*

*தலை எழுத்தை மனிதனால் எழுதமுடியாதா?*

*சுதா,*
*யாழ்ப்பாணம்.*

அரசியல்வாதிகள் அதைத்தானே செய்கிறார்கள்.

*பாவலா!*

*அழகுக்கும் அன்புக்கும் என்ன ஒற்றுமை?*

*சிந்துஜா,*
*திருவையாறு.*

தூய்மை

*பாவலா!*

*பைத்திய காரனை பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

*கரன்,*
*புதுக்குடியிருப்பு.*

சமதர்ம சிந்தனையுள்ளவன்.

*பாவலா!*

*காதல் இல்லாத வாழ்க்கை எப்படிப்பட்டது?*

*மாலினி,*
*ஜெயந்திநகர்.*

மோதல் இல்லாத களம் போன்றது.

*பாவலா!*

*எவன் படித்த முட்டாள்?*

*ரதி,*
*மன்னார்.*

பதவியில் அமர்ந்து அதிகார துஷ்பிரயோகம் செய்பவன்.

*பாவலா!*

*இல்லறம் எப்போது தோல்வி காண்கிறது?*

*சசி,*
*ஆனந்தபுரம்,*

'இல்லாமை'யால் ஆக்கிரமிக்கப்படும் போது.

*பாவலா!*

*மனிதாபிமானம் இப்போது எப்படியிருக்கிறது?*

*கமல்,*
*கிளிநொச்சி.*

மனிதனைவிட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கிறது

*பாவலா!*

*நீர் போகும் பாதை எதுவோ?*

*சிறி,*
*பரந்தன்,*

நடைபாதை.




"எவ்வளவுதான் ஆம்பிளையள் உழைச்சுக்கொண்டு வந்தாலும் பொம்பிளையளால அதை சிக்கனமா சிலவழிக்கத் தெரியாது"

" ஓ... அப்பிடியே எங்கட கையில காசு வச்சுப் பிழங்கினா நாலுகாசு சேமிப்பம். நீங்கள் கொஞ்சங் காசு மிஞ்சினாக் கோப்பிரேசனுக்குப் போவியள்"

" நாள் முழுக்கப் பாடுபடுறவன் கொஞ்சம் மேலலுப்புக்குக் குடிச்சா அதைப் பெரிசாக் கதைக்கிறியள் நீங்கள் செய்யிற சிலவுகளக் கதைச்சா..."

"என்ன என்ன நாங்கள் செய்யிற சிலவு நாங்கள் என்னத்த செய்து போட்டம். பிள்ளையளுக்குத் தேவையானதை வாங்குவம், வீட்டுக்கு தேவையானதை வாங்குவம்."

" சரி சரி... அதில தான் சிக்கனத்த கடைபிடிக்கச் சொல்லுறம்..."

"சும்மா சிக்கனஞ் சிக்கனமெண்ணாதையுங்கோ. சம்பல இடிச்சாலும் நானும் பிள்ளையளும் சாப்பிட்டிருவம். நீங்கள் மீன் வாங்கேல்லயோ கருவாடு பொரிக்கேல்லயோ, ங"

"எடியப்பா சாப்பாட்டில சிக்கனம் பிடிச்சா வைத்தியச் சிலவாப்போம். நான் ஒண்டு கேக்கிறன் கோவியாமப் பதில் சொல்லு"

" ஆங்.... கேளுங்கோ... அப்பிடியென்னண்டு பாக்கிறன்"

"இப்ப ராசன்ர கலியாணவீடு வருது. முத்தற்ற மகளுக்கு எழுத்து, அங்கால வதனியின்ர பெட்டைக்கு சாமத்திய வீடு எல்லாம் இந்த மாதம் வருது..."

"ஆ... அதுக்கென்ன அயலெண்டா போகத்தானே வேணும்..."

" அ... அதில்ல கேள்வி, ஒரு வீட்டுக்கு கட்டின சீலையை மற்ற வீட்டுக்கு கட்டிக்கொண்டு போவியோ. நான் இந்த வேட்டியோட எல்லா இடமும் வாறன்"

" அதெப்பிடி இனி நவராத்திரியும் வருது இன்னும் ஒம்பது சேலை வாங்க வேணும்..."

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –134



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –134

......................................................................
......................................................................
......................................................................
......................................................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –133



**ம.அருள்யோண்சன்,**
**ஊழியர் நலன் பேணல்கழகம்,**
**நருவகம்,**
**விசுவமடு.**

## பரிசுக்குரிய வரிகள்

*வாளியுடன் வாடியிங்கே நாம் வாழ உழைக்கின்ற–எம் வல்லதெங்கள் தாயே...வரலாறு செய்த பெரும் வதைப்பான கொடுமை கண்டு (இங்கே) தளராதே– உறுதி கொண்ட உன் வாழ்வு நாளை சிறப்பாகும் உன்மனமும் நிறைவாகும் .*

## பாராட்டுக்குரிய வரிகள்

*குடும்பச் சுமை தாங்க கணவனுமில்லை*
*ஊருக்குப்போக அனுமதியில்லை*
*ஏக்கம் நிறைந்த உன்விழியின்*
*எதிர்பார்ப்பு என்னம்மா?*

விமலின்,
வட்டக்கச்சி.

*வீரப் பெண்கள் வாழும் தேசமிது*
*இடர்கள் எல்லாம் தூசாய் பறக்கும்*
*புதுவசந்தம் பெற்று புதுத்தேசம் எழும்*
*தாயே எழு! தேச எழுச்சியில் பேரணிசேர்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*பேதமை, பேதலிப்பு உள்ள பேதையா*
*இவள்? இல்லவே இல்லை.*
*புலித்தேசத்து மகள், பிள்ளைகள் இனச்சுமையை*
*ஏற்க இவள் குடும்பச்சுமையை ஏற்கிறாள்.*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

*அம்மா உனக்கு அதிக வயதில்லை- இருந்தும்*
*உன் முகத்தில் அதிக அனுபவமுத்திரைகள்*
*காத்திருப்பு வீண்போகாது. மகன் வருவான்*
*வெல்லும் களத்தில் புலிக்கொடி ஏற்றி அவன் வருவான்.*

சு.ராஜசெல்வி,
சென்திரேசா பெண்கள் கல்லூரி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்

அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு














இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.